# தமிழரசு

16-10-1973 40 காசு



# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

தமிழரசு

16-10-1973 மலர் 4

இதழ் 8

# தமிழகம் ஓர் அமுதசுரபி



அள்ள அள்ளக் குறையாது அன்னம் வழங்குவது அமுதசுரபி! அதை நாம் பார்த்ததில்லை! ஆனால் அதைப் பற்றித் தமிழ் மொழியின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை மிகவும் விரிவாகக் கூறுகிறது.

மணிமேகலையில் கூறப்படும் அமுதசுரபியாகத் தமிழகம் இன்று விளங்குகிறது!

ஆம்! பல மாநிலங்களின் பசியைத் தீர்த்திடும் அமுதசுரபியாகத் தமிழகம் திகழ்கிறது!

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!'' என்ற மணிமேகலையின் கூற்றுப்படி, இன்று தமிழ் நாடு அரசு பல மாநில மக்களுக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உயர் தொண்டு செய்து வருகிறது!

கைம்மாறு கருதாது உழைத்து, உணவை உற்பத்தி செய்து கொடுக்கும் உழவர் பெரு மக்களைப் 'பசிப் பிணி மருத்துவர்கள்' என்று பாராட்டுகிறது மணிமேகலை! அதன்படி, தமிழக உழவர் பெரு மக்கள் இன்று பல மாநிலங்களின் பசிப் பிணி தீர்க்கும் மருத்துவர்களாக விளங்குகிறார்கள்!

''அரசன் எவ்வழி? குடிகள் அவ்வழி!'' என்னும் பழமொழி உண்மை என்பதைத்தமிழ் நாடு அரசும், தமிழக உழவர் பெரு மக்களும் மெய்ப்பித்து உள்ளனர்!

உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் தூய தொண்டு செய்து வருகிறது தமிழ் நாடு அரசு என்பதை இந்த ஆண்டில் இதுவரை பிற மாநிலங்களுக்குத் தமிழகம் கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ள அரிசியின் அளவிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| எண் (1) | தமிழகத்திலிருந்து அரிசி பெற்ற மாநிலத்தின் பெயர் (2) | தமிழகம் தந்துள்ள அரிசியின் அளவு (மெட்ரிக் டன்) (3) |
|---|---|---|
| 1. | கேரளா | * 1,21,000 |
| 2. | குசராத் | 6,000 |
| 3. | மராட்டியம் | 11,500 |
| 4. | மைசூர் | ** 2,000 |
| 5. | மேற்கு வங்காளம் | *** 3,000 |
| | | 1,43,500 |

*3,000 டன் அரிசியைக் கேரளா அரசு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை.

**மைசூர் மாநிலத்திற்கு மேலும் 5,000 டன் குறுவை நெல் (இதிலிருந்து 3,250 டன் அரிசி கிடைக்கும்) அனுப்பத் தமிழ் நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அண்மையில் ஆணை பிறப்பித்தார்.

***மேற்கு வங்காளத்திற்கு 3,000 டன் கொடுத்ததை அவர்கள் இன்னும் எடுத்துப் போகவில்லை. அதை அவர்கள் துர்க்கா பூசைக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அரிசியை மட்டும்தான் தமிழகம் அனுப்பி வைக்கிறதா?

கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற தானியங்களையும் தமிழகம் பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழ்நாடு அரசின் உயிர் கொடுக்கும் தூய தொண்டிற்குத் தமிழக உழவர் பெரு மக்கள் உறுதுணையாக உள்ளார்கள் என்பதைக் கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில்—வறட்சியும் புயலும் அடுத்தடுத்து வாட்டிய போதிலும்—கீழ்க்கண்டவாறு உணவு உற்பத்தியைப் பெருக்கியுள்ளதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் டன்) அரிசி | மொத்த உணவு தானியம் |
|---|---|---|
| 1966—67 ... | 37.91 | 54.58 |
| 1967—68 ... | 38.46 | 54.59 |
| 1968—69 ... | 35.50 | 50.62 |
| 1969—70 ... | 45.32 | 62.53 |
| 1970—71 ... | 53.03 | 70.34 |
| 1971—72 ... | 54.00 | 70.45 |
| 1972—73 ... | 55.00 | 72.02 |
| 1973—74 ... (இலக்கு) | 59.00 | 79.00 |

ஆகவே, ''அரசன் எவ்வழி? குடிகள் அவ்வழி!'' என்னும் பழமொழிக்கு இணங்க, உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உயரிய பணியில் தமிழ் நாடு அரசும், உணவு உற்பத்தியைப் பெருக்கிப் பசிப் பிணி தீர்க்கும் பணியில் தமிழ் நாட்டு உழவர் பெரு மக்களும் உளமார ஈடுபட்டுள்ளது உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்குகிறது! இதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது!

'தமிழ் நாட்டில் பஞ்சம் இல்லை! நமக்கென்ன கவலை?' என்று தமிழ் நாடு அரசு வாளாயிருந்துவிட வில்லை! பிற மாநிலங்களின் வேண்டுகோளை ஏற்று, உணவு தானியங்களை—குறிப்பாக அரிசியை—இலாபமும் நட்டமும் இல்லாமல் உடன் வழங்கி வருகிறது தமிழ் நாடு அரசு! தமிழ் நாடு அரசின் இத்தூய தொண்டு, இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழி காட்டுவதாக அமைந்துள்ளது!

—ஆர். எம்.



# மத்திய அரசு கடன் கொள்கையில் மாறுதல் தேவை!

சாமி

## முதல்வர் கலைஞர் உரை

மத்திய மாநில நிதி உறவுகளில் சிக்கல்களைத் தீர்த்திட நிதிக் குழுவினுடைய பரிந்துரைகளை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். உண்மையில் இந்த விவகாரத்தைப் பற்றி ஆராயுமாறு நிதிக் குழு கோரப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

பொதுக் கடன் என்பது விரிவானதொரு பொருளாகும். மாநில அரசுகளுக்கு நெருக்கமான தொடர்புள்ள பொதுக் கடனின் அந்தப் பகுதியைப் பற்றி மட்டும் அதாவது மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகிற கடன்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறேன்.

நிதிக் குழு இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்திற்கு வந்திருந்தபோது மாநிலங்களின் கடன் நிலைமை பற்றி குறிப்பாகத் தமிழ்நாட்டின் கடன் நிலைமை பற்றி அவர்கள்முன் எடுத்துரைத்தோம். மாநிலங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ள பல நிதிப் பிரச்சினைகளும் மாநிலங்களுக்குக் கடன் வழங்குவதற்கென இப்போது உள்ள மத்திய அமைப்பு முறையே காரணமாக உள்ளது.

நான்காவது ஐந்தாண்டு திட்ட கால முழுவதிலுமாக மாநிலங்களுக்கு 6446 கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசு கடன் வழங்கும்.

இந்தத் தொகை பெரிதாகத் தெரியும். ஆனால் மத்திய அரசுக்கு இதே கால அளவில் மாநில அரசுகள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை வட்டியும் அசலுமாக 5280 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும்.

ஆக மத்தியிலிருந்து மாநிலங்களுக்கு இந்தக் காலத்தில் கிடைக்கக்கூடிய மொத்தத் தொகை உண்மையில் 1166 கோடி ரூபாய் மட்டுமேயாகும்.

இதில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய மத்திய நிதியுதவியில் பங்கு வழங்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டைப் போன்ற மாநிலங்களின் நிலைமை இன்னும் மோசமாகும்.

நான்காவது திட்ட காலத்தில் தமிழ்நாடு அசலும் வட்டியுமாக மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 3 63 கோடி ரூபாய் அளவாகும்.

இது மத்திய அரசினிடமிருந்து தமிழ்நாடு எதிர்பார்க்கக்கூடிய கடன் தொகைகளைக் காட்டிலும் ஓரளவு கூடுதலாகும்.

அதாவது மத்திய அரசுக்குத் தமிழ்நாடு திருப்பிச் செலுத்தும் தொகையில் அளவு கூடுதலாக உள்ளது. இம்மாதிரியான முரண்பாடான நிலைமை நீடிக்கின்றவரை வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய உதவி என்பது கானல் நீராகவே இருந்து வரும்.

நிதிக் குழு இந்த நிலைமையைச் சரிசெய்யத் தக்க ஏற்பாடுகளை வகுக்குமென்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசுக்கு நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைகளைத் திருத்தி அமைத்திட வேண்டுமென்றும், கூட்டாட்சிக் கடன் குழு வேண்டுமென்றும், நாம் கேட்பதற்குக் காரணமே—இப்போது கடன் வழங்குவதற்குள்ள அமைப்பு முறையில் நிலவும் குறைபாடேயாகும்.

மாநிலங்கள் செய்கிற முதலீடுகள், பெரும்பாலும் சாலைகள், மின்விசை உற்பத்தி வழங்குதல், குடிநீர் வழங்கு திட்டங்கள், பள்ளிகள் ஆகிய அடிப்படை வசதிகளை உருவாக்கிடவே செலவிடப்படுகின்றன.

இவற்றிலிருந்து நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது

உறுதி என்றாலும், அவை மெல்லவே கிடைக்கும்.

இந்த உண்மை மத்திய அரசினால் உணரப்படவில்லை.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்குத் தான் வழங்குகிற கடன் 15 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது.

இது, நாம் செலுத்துகின்ற மூலதன முதலீடுகள் மெல்லவே பலனளிக்கத் தொடங்குகிறது என்ற உண்மை நிலையை ஒட்டிய ஏற்பாடாக இல்லை.

இத்தகைய சமுதாயப் பணிகளுக்கான கடன்கள் சொற்ப வட்டிக்கு—அதாவது மத்திய அரசு அனைத்து நாட்டு வளர்ச்சி சங்கத்தாரிடமிருந்து எந்த நிபந்தனைகளில் கடன் பெறுகிறதோ, அதே போன்றதாக இந்தக் கடன்களும் இருக்க வேண்டும்.

50 ஆண்டுக்கால அளவில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இக் கடன்கள் இருக்க வேண்டும். இந்தக் கடன்களை யொட்டி வசூலிக்கப்படுகின்ற பணிக் கட்டணம் (வட்டி) அரை சதவிகிதம் அல்லது முக்கால் சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது.

நம்முடைய இந்தக் கோரிக்கை தர்க்க ரீதியில் நியாயமான ஒன்றாகும்.

மாநிலங்களுடைய வருவாயில் ஏற்படுகிற நட்டத்தை ஈடு செய்வதற்காக மானியங்கள் அமைகின்றன.

ஆகவே, வட்டி விகிதங்கள் அதிகமாக இருந்தால், அதனால் ஏற்படுகிற நட்டத்தைத் தாங்க மத்திய அரசே மற்றொரு மானியம் வழங்க வேண்டிவரும். வழங்கப்படுகிற கடன்களைத் தாராளத் தன்மை கொண்டவையாகத் திருத்தியமைப்பதே உண்மை நிலைகளுக்கேற்றதாக இருக்கும்.

சிறு சேமிப்பின் மூலம் திரட்டப்படுகிற நிதியே அரசாங்கக் கடன்களில் முக்கியமானதாகும்.

ஒரு மாநிலத்தில் பல்வேறு தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் இந்த சேமிப்புத் தொகை திரட்டப்



படுகிறது. இப்படித் திரட்டப்படுகிற நிதியிலிருந்து மூன்றில் இரண்டு பங்கினை மட்டுமே, மாநிலங்களுக்கு அளிப்பதென்ற திட்டம் கவர்ச்சியானதாக இல்லை.

மாநிலங்களுக்கு அளிக்கப்படும் கடன்கள் நிகர வரவின் அடிப்படையில் அமைந்திருக்கும்போது, மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கடனைத் திருப்பித் தர வேண்டுமென்பதில் நியாயம் எதுவுமில்லை.

சிறுசேமிப்பின் மூலம் கிடைக்கும் நிகர வரவு, மத்திய அரசுக்கு நிரந்தரக் கடன்களாக அமைகின்றன. நெடுங் காலம் நிலைத்திருக்கக்கூடிய கடன்களாகத் தான் பெற்ற தொகைகளை குறுகிய காலக் கடன்களாக மாநிலங்களுக்கு மீண்டும் தருகின்ற இந்த அமைப்பு, மத்திய அரசின் ''வட்டித் தொழில்'' தன்மையில் அமைந்துள்ள மற்றொரு செயலாகும்.

மத்திய அரசானது மிகக் குறைந்த வட்டிக்கு உலக நாடுகளிடமிருந்தும் உலக நிதி அமைப்புகளிடமிருந்தும் கடன் பெறுகிற வாய்ப்புள்ளதென்பதால், மத்திய அரசு, தான் வழங்குகின்ற கடன்களை தாராளத் தன்மையோடு வழங்க வேண்டும் என்ற நம் கோரிக்கை வலுப்பெறுகிறது.

அது மட்டுமல்லாமல் பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் மூலம் (நோட்டடிப்பதன் மூலம்) மத்திய அரசு தன்னுடைய நிதித் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்து கொள்கிறது.

இவ்வகையில் ஐந்தாவது திட்டக் காலத்தில் மட்டும் மத்திய அரசுக்குக் கிடைக்கக் கூடிய ஆதாயம் ஆயிரங் கோடி ரூபாயாக இருக்கும். இந்தப் பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் விளைவுகளை—விலைவாசி உயர்வு முதலானவற்றை மாநிலங்களும் தாங்கிக் கொள்கின்றன.

பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் மூலம் கிடைக்கக்கூடிய சாதகங்களை — நன்மைகளை மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே.

இத்தகைய ஆதாயங்களைப் பெறுகிற மத்திய அரசு, மாநிலங்களுக்குத் தான் வழங்குகிற கடன்களுக்கு வட்டி இல்லை என்றாவது அல்லது மிகக் குறைந்த வட்டி என்றாவது நிர்ணயிக்கலாம்.

வெளிச் சந்தையிலிருந்து மாநிலங்கள் திரட்டுகின்ற கடன்களைப் பற்றி இப்போது குறிப்பிட விரும்புகின்றேன்.

இதில் அரசியலமைப்புச் சட்ட முக்கியத்துவம் உள்ள செய்திகள் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு மாநிலமும் கடனை எழுப்புவதற்கு முன்னால், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும் என்று இருக்கிறது.

இது, பழைய ஏகாதிபத்திய சகாப்தத்தின் மிச்ச சொச்சமாக விளங்குகிறது.

1935-ஆம் ஆண்டின் இந்திய அரசின் சட்டத்தின் பகுதிகள் கண்மூடித்தனமாகக் 'காப்பி' யடிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் மற்றொரு எடுத்துக் காட்டு இதுவாகும்.

மாநில அரசுகளை இது செய்வதறியா நிலையில் வைத்து விடுகிறது. மாநில அரசுகள் வகுக்கின்ற வரவு—செலவுத் திட்டங்கள் நெகிழ்வு அற்றவைகளாக ஆக்கப்படுகின்றன. மத்திய அரசு தருகின்ற மானிய உதவிகளுக்காகக் காத்துக் கிடக்க வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாக்கப்படுகின்றன மாநிலங்கள்.

மாநில அரசுகள் அவை யவற்றின் வருவாய் சக்திக்கு ஏற்ப—அவை வகுக்கின்ற திறன் மிக்க திட்டங்களுக்கேற்ப வங்கிகளிடமிருந்து கடன்களைப் பெறும் சுதந்தரம் படைத்தவையாக இருக்க வேண்டும்.

இதுவே உண்மையான கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்கு உகந்ததாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

மாநில அரசுகள் மத்திய அரசுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடன்களை ஒழுங்காக செலுத்தி வருகிற வகையில் அவை, தாங்கள் எழுப்பப் போகிற கடன்களுக்கு மத்திய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டுமெனக் கூறுவது அவசியமற்றதாகும். தேவையானல், மேல் வரம்பு நிர்ணயிக்கலாம்.

இதற்கொப்ப அவசியமான அரசியல் சட்டத் திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்பட வேண்டுமென்று நாங்கள் கருதுகிறேம்.


மற்ருெரு முக்கியமான செய்தி, வெளிச் சந்தையிலிருந்து திரட்டப்படுகிற கடன்களில் பெரும் பகுதி மத்திய அரசே திரட்டிக் காள்வதாகும்.

*1971—72ல்* மத்திய அரசு திரட்டிய கடன் 294 கோடி ரூபாயாகும். ஆனல், அவ்வாண்டு எல்லா மாநிலங்களுமாகச் சேர்ந்து திரட்டிய மொத்தத்தொகை 104 கோடி ரூபாய் மட்டுமேயாகும்.

*1972—73ல்* மத்திய அரசு 478 கோடி ரூபாய் கடன் திரட்டியிருக்கிறது. இதே ஆண்டில் மாநிலங்கள் 130 கோடி ரூபாய் மட்டுமே கடன் திரட்டியுள்ளன.

இந்தப் போக்கு கலக்கத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது. மாநில அரசுகளும் அவற்றின் நிறுவனங்களும் திரட்டக்கூடிய நிதி ஆதாரங்கள் அளவில் குறைந்தவையாக இருக்கின்றன. மத்திய அரசு செய்வது போல பற்ருக்குறை நிதி ஏற்பாடு எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

ஆகவே, வெளி சந்தையில் திரட்டப்படுகிற கடன்களில் கணிசமான அளவு மாநிலங்களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.




அரசாங்கக் கடன்களைப் பற்றிப் பேசுகிற இந்நேரத்தில் மின் உற்பத்தி மற்றும் நீர்ப் பாசனத் திட்டங்களுக்கான நிதி வழங்குவது பற்றி ஏற்கெனவே தமிழ்நாடு அரசு தெரிவித்திருந்த யோசனையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்தத் திட்டங்களுக்காக வழங்கப்படும் நிதி ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்படுகிற நிதி அளவுக்குள் அடங்கியதாக இருக்கக் கூடாது. அவற்றுக்கென தனியே நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

இதற்கென அனைத்திந்திய அளவில் வளர்ச்சி வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டும். அந்த வங்கியில் மாநில அரசுகளுக்கும் பிரதிநிதித்வம் இருக்க வேண்டும்.

ஒரு மின் உற்பத்தித் திட்டமோ அல்லது பாசனத் திட்டமோ திரம் மிக்கது என்று புலனனவுடன் இந்த வங்கி அந்த திட்டங்களுக்குத் தேவையான நிதியை வழங்குகிற பொறுப்பை ஏற்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் குறுகிய காலத்தில் அத்திட்டங்கள் நிறைவேற உதவலாம்.

இதை விடுத்து இம்மாதிரி திட்டங்கள் மாநில நிதி நிலைமைகளுக்கு உட்பட்டதாகவே இருக்க வேண்டும். என்று சொல்வது குறுகிய கண்ணேட்டமாகும்.

ஆஸ்திரேலியா நாட்டில் உள்ளதுபோல 'கடன் கவுன்சில்' என்ற அமைப்பு இந்நாட்டிலும் ஏற்படுத்தலாம்.

ஆஸ்திரேலிய கடன் கவுன்சில் அந்நாட்டுத் தலைமை அமைச்சரையும் மாநில முதல்வர்களையும் கொண்டதாக—இருசாராரும் வாக்களிக்கும் உரிமையுடையதாக இருக்கின்றது.

ஒரு மாநிலம் பெறவேண்டிய கடனைப் பற்றி கருத்து வேறுபாடு இக்கழகத்தில் ஏற்படுமானல் ஏற்கெனவே அவர்கள் தங்களுக்குள் வகுத்துள்ள உடன்பாட்டில் கண்டுள்ள முறைகளின்படியும், ஐந்தாண்டுகளில் ஒரு மாநிலம் வாங்கியுள்ள கடன்களின் அடிப்படையிலும் கடன் தொகை இன்னதென்று நிர்ணயிக்கப்படும்.

பி. வி. ராஜமன்னர் தலைமையில் அமைந்து மத்திய—மாநில உறவுகள் பற்றி ஆராய்ந்த விசாரணைக் குழு, இத்தகைய 'கடன் கவுன்சில்' அமைப்பு இந்தியாவிலும் அமைக்கப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறியுள்ளது.

இக்கருத்தினை இம்மாநாட்டி நான் பரிந்துரைக்கிறேன்.

பல்வேறு முறைகளில் மக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் நிதி திரட்டுவதற்குப் புதிய உத்திகளை வகுத்தாக வேண்டும்.

இன்றுள்ள நிலையில் வங்கிகள் மத்திய அரசினால் இறுக்கமான கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

வங்கிகள் செயல்படுவது பற்றிய கொள்கைகளை உருவாக்குவதில் மாநில அரசுகள் முற்றிலும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாநில அரசுகள் புதிய முறைகளில் வங்கி நிறுவனங்களை உருவாக்குவதற்கு வாய்ப்புகள் அமைய வேண்டும்.

மக்களின் சேமிப்புகளை திரட்டிப் பயன்படுத்த, மாநில அளவில் காப்புறுதி நிறுவனங்களையும், முதலீட்டுப் பொறுப்பு அமைப்பு அமைப்பதற்கும் வகை செய்வதும் அவசியம். மாநில அரசுகள் இத்துறையில் முயற்சிகள் எடுக்க வகை செய்தால் மட்டுமே இவை உருவாக முடியும். இதன் மூலம் அரசாங்கக் கடன்களை நிர்வகிப்பதில் செயலாற்றும் சுதந்தரம் ஏற்படும்.

அரசாங்கக் கடன் சிக்கலான அரசு செயல்முறை பற்றிய ஒன்றாகும். ஆனால் சமுதாய வகையில் அவசியமான, நியாயமான முதலீடுகளைச் செய்வதற்கான ஓர் ஏற்பாடே இது என்பதை நாம் நினைவில் கொள்வது முக்கியமாகும்.

தனிப்பட்ட நிறுவனங்களிடமும் பொது மக்களிடமும் உள்ள சேமிப்புத் தொகையை நிதி நிறுவனங்கள் மூலமாக மாநில அரசுகளும், மத்திய அரசும் பெறுவதற்கான ஒரு சாதனமாகவே இது அமைந்துள்ளது.

நிதி ஒதுக்கீடுகள், நிபந்தனைகள், கடன் திருப்பித் தருவதற்கான கால அட்டவணையை மாற்றியமைத்தல் என்றெல்லாம் நாம் பேசும்போது, இந்த அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இந்த நிதி வசதி நியாயமான வகையிலும் திறமையான ஜனநாயகக் கூட்டாட்சி அமைப்பின் தேவைகளை ஒட்டியும் பகிர்ந்தளிக்கப்படுவது அவசியமாகும்.

[சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற அரசு நிதி பொருளாதாரம் பற்றிய அனைத்து இந்திய மாநாட்டில் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆற்றிய தலைமையுரை].

# கிராமங்கள் அதிகமுள்ள மாவட்டம் எது?

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில்தான் மிக அதிகமான எண்ணிக்கையில் கிராமங்கள் உள்ளன. மிகக் குறைந்த எண்ணிக்கையில் கிராமங்கள் உள்ளது நீலகிரி மாவட்டம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2,333 கிராமங்கள் உள்ளன. அதற்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் உள்ளது தஞ்சாவூர் மாவட்டம். அதில் 2002 கிராமங்கள் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் 42 கிராமங்களே உள்ளன. அதற்கு அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 66 கிராமங்கள் உள்ளன.

எனினும், சராசரி கிராமத்தில் வசிப்பவர்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் முதலிடம் பெறுகின்றன.

இராமநாதபுரம், தர்மபுரி, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் கிராமமொன்றுக்கு 1500 பேர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையினரே வசிக்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராமத்தில் வசிப்பவர்களின் சராசரி எண்ணிக்கை 1067.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் 28,734,334 பேர் உள்ளனர். இவர்கள் 15,735 கிராமங்களில் வசிக்கிறார்கள்

தமிழ்நாட்டில் மக்கள் வசிக்கின்ற கிராமமொன்றில் சராசரி மக்கள் தொகை 1,286 ஆகும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் வசிக்கும் கிராமங்கள் எண்ணிக்கையும், சராசரி கிராம மக்கள் தொகையும் அடைப்புகளுக்குள் தரப்படுகின்றது.

கன்னியாகுமரி மாவட்டம்-66 (15426), நீலகிரி-42 (5971), கோயம்புத்தூர்-932 (3022), மதுரை-1013 (2580), சேலம்-958 (2294), திருச்சி-1314 (2277), திருநெல்வேலி-975 (2227), வட ஆர்க்காடு-1867 (1592), தஞ்சாவூர்-2002 (1525), இராமநாதபுரம்-1411 (1498), தர்மபுரி-1044 (1469), தென் ஆர்க்காடு-2333 (1331), செங்கற்பட்டு-1778 (1067).

1971-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்குகளிலிருந்து இந்த விவரங்கள் தெரிகின்றன.



# சமதர்மச் சமுதாயம் அமைத்திடுவோம்!



ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர்

அன்பில் தர்மலிங்கம்

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!'' என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் இன்றையத் தமிழ் நாடு அரசு, சம தர்மச்சமுதாயம் அமைத்து எல்லார்க்கும்எல்லா வசதிகளும் கிடைத்திடச் செய்யவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு வருகிறது. சம தர்மச் சமுதாயம் அமைந்திட வேண்டுமானால், ஏழை, எளிய பாமர பாட்டாளி சாமான்ய மக்கள் நிறைந்த கிராமங்கள் முன்னேற வேண்டும் என்று இன்றையத் தமிழ் நாடு அரசு விரும்புகிறது. எனவேதான், கிராமங்களின் மேம்பாட்டிற்கு உதவும் சமுதாய நலத் திட்டங்களைச் செம்மையாகவும், சிக்கனமாகவும், விரைவாகவும் செயல்படுத்துவதில் தமிழ் நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அந்த ஆர்வத்தின் காரணமாகவே, இன்று முதல் ஒருவார காலத்திற்கு நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாட இன்றையத் தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவின் எதிர் காலம், கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேறினால் தான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்! இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு, என்று தன்னிறைவு பெறுகிறதோ அன்று தான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்!

இதைத்தான் அண்ணல் காந்தி அடிகள் அன்றே குறிப்பிட்டார். 'கிராம ராஜ்யம்' அமைய வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். அண்ணல் கூறிய கிராம வளர்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் 1952-ஆம் ஆண்டு, அக்டோபர் 2--ஆம் நாளில்---அண்ணல் பிறந்த நாளில்---நாடெங்கும் துவக்கப் பெற்றது. அந்தத் திட்டத்தின் பயனாய் இந்தியாவின் கிராமங்கள் முன்னேறி வருகின்றன. இதை இல்லை என்று யாரும் கூறி விட முடியாது.

ஆனால் சமுதாய மேம்பாட்டுத்திட்டம் துவக்கப்பட்டு 21 ஆண்டுகள் முடிந்திருந்தும், இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் முடிந்திருந்தும், இன்னும் அண்ணல் காந்தி அடிகள் கண்ட கனவு நிறைவேறவில்லை! ஆம்! இன்னும் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலைகிட்டவில்லை. ஆகவே, இந்தியாவின் பொருளாதார விடுதலைக்கு வழி வகுக்கும் கிராம முன்னேற்றத்திற்கு உதவும் சமுதாய மேம்பாட்டுத் திட்ட வேகம் போதவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. சமுதாய மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேலும் தீவிரப் படுத்திடவே, அண்ணல் பிறந்த நாளான இன்று முதல் ஒரு வார காலத்திற்குச் சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது.

விழா நடத்தி விட்டால் சமுதாயம் மேம்பாடுஅடைந்து விடுமா? என்று பலர் கேட்கலாம். விழா நடத்துவதனால் சமுதாயம் மேம்பாடு அடையாது. ஆனால் சமுதாயம் மேம்பாடு பெறுவதற்குரிய உள்ளுணர்வுகளையும், செயல் திறனையும் கிராம மக்களுக்கு ஏற்படுத்திவிட முடியும். இந்த நோக்கத்துடனேயே, நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாடப் பெறுகிறது.

கிராமப் புற மக்களிடையே அவர்களுக்குள்ள பிரச்சினைகளை உணரச் செய்வது, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பணிகளில் அவர்களே முன் வந்து ஈடுபடச் செய்வது, கிராமத்தில் எல்லா வகையான முன்னேற்றமும் ஏற்படுத்திக் கொள்ளும் சக்தியை அவர்களுக்கு ஏற்படுத்துவது ஆகிய மூன்றும் சமுதாய மேம்பாட்டுத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இந்த அடிப்படை நோக்கங்கள் கிராமப்புற மக்களிடம் தெளிவாக விளக்கப்படுமானால், சமுதாய மேம்பாட்டுத்திட்டம்விரைந்து செம்மையாகச் செயல்படும். அவ்வாறு செயல்படுவதற்கு நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா வழி வகுக்கும் என்று தமிழ் நாடு அரசு நம்புகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழாவை ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், மாநிலம் ஆகிய

மூன்று நிலைகளில் கொண்டாடத் தமிழ் நாடு அரசு முன் வந்துள்ளது.

சமுதாய மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக மூன்று நிறுவனங்கள் தேவை. அவை ஊராட்சி மன்றம், பள்ளிக்கூடம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்றுமாகும். இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் பெற்றுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலை ஏற்படுத்தவும், எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்கவும், எல்லா ஊர்களுக்கும் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டவும் தமிழ் நாடு அரசு பெரு முயற்சி செய்து வருகிறது. இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் முடிந்துவிட்டன. ஆயினும் நமது கிராமப் புற மக்களுக்கு இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. பலகிராம மக்கள் குளத்திலும், குட்டையிலும் இருந்தே இன்றும் குடிநீர் எடுத்துக் குடித்து வருகின்றனர். இந் நிலை இனியும் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கக் கூடாதென்பதற்காகவே குடி நீர் வடிகால் வாரியம் அமைத்து, இன்னும் 6 ஆண்டுக் காலத்திற்குள் எல்லாக் கிராமத்திற்கும் பாதுகாக்கப்பட்ட நல்ல குடி நீர் வழங்க ரூபாய் 40 கோடி செலவில் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழ் நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மையின் வளர்ச்சியிலேயே கிராமப் பொருளாதாரம் செழிக்க முடியும். எனவே தான் கிராம முன்னேற்றத்திற்கு உதவும் ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும், வேளாண்மை வளர்ச்சியில் பேரார்வம் காட்டி வருகின்றன.

இன்று தமிழ் நாட்டில் அரிசிப் பஞ்சம் இல்லை. மற்ற மாநிலங்கள் ஒவ்வொன்றாகத் தமிழகத்திடம் அரிசி கேட்கின்றன. நாமும் கொடுத்து வருகின்றோம். இதிலிருந்தே மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ளது என்று கூறலாம். இந்த உபரி நிலை உருவாவதற்கு ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் பெருமளவுக்கு உதவியுள்ளன. தமிழ் நாட்டில் பசுமைப்புரட்சி பரவியதற்கும், பற்றாக்குறை மறைந்ததற்கும் சமுதாய மேம்பாட்டுத் திட்டமும் ஒரு வகையில் காரணம் எனலாம். எனவே, சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் இலட்சியத்தில் பெரும் பகுதி தமிழகத்தில் நிறைவேறி விட்டது என்பதில் ஐயமில்லை.

பசுமைப் புரட்சியில் நாம் கண்டுள்ள வெற்றியைப்போல் நமது சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முனைப்பாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதுபோல் எல்லாத் துறையிலும் வெற்றிகாண கிராமப் புற மக்கள் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் எல்லாத் துறையிலும் வெற்றி ஏற்படும், கிராமப் பொருளாதாரம் செழிக்கும்.

அடுத்து, சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வு மனப்பான்மையையும் போக்கச் சமூகக் கல்விப் பணிகளை விரிவுபடுத்த முயன்று வருகின்றோம். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் தமிழ் நாடு அரசு பேரார்வம் கொண்டுள்ளது. அது போலவே பிற்பட்டோர் நலனிலும் தமிழ் நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திட முயன்று வரும் தமிழ் நாடு அரசுக்கு, உங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்திட வேண்டும் என்று பொது மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சமுதாயம் ஒவ்வொரு நாளும் மாறியமைந்து வருகிறது. நாளுக்குநாள் பெருகி வரும் தேவைகளை நிறைவேற்றத்தக்க அளவுக்குத் திட்டப் பணிகள் அமைய வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்து செயலாற்றுவதில், தமிழ்நாடு அரசு, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள 12,628 ஊராட்சிக்கும், 598 பேரூராட்சிக்கும் மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 1973--74-ஆம் ஆண்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூபாய் 94·69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் பெரிய அளவில் செயல்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.



நிர்வாகம்—பணிகள்—உற்பத்தித் திட்ட வேலைகள்—நலப் பணிகள் பற்றிய மாநில அளவிலான மூன்று கருத்துரைக் குழுக்கள் நமது பெருமதிப்புக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் கூடி, ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்கின்றன. வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் போது, அதன் வேகத்தைத் தடுக்கும் நடைமுறைச் சிக்கல்களுக்கு, கருத்துரைக் குழுக்கள் தரும் ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காணப்படுகின்றன.

வளர்ச்சி அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்களை அளித்து, நேரடிப் பொறுப்புகளை அவர்களுக்கு வழங்குவதனால், அவர்களும் தங்கள் பங்கினை முழுமையாக ஆற்றிட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தைத் திருத்தியமைக்கும் முயற்சியைத் தமிழ் நாடு அரசு ஆழ்ந்து ஆய்ந்து வருகிறது. இது பற்றித் திருவாளர் வர்கீஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் உருவாக்கித் தந்த அறிக்கையை, விரிவாக ஆராய்ந்து வருகிறோம். எந்தெந்த வகையிலே மாற்றங்களைச் செய்யலாம் என்பதற்கு, நிர்வாகச் சீர் திருத்த ஆணைக் குழுவின் கருத்துரைகளின் மீது, தக்க முடிவுகள் ஏற்படும் எனக் கருதுகிறேன்.

தென் மாநிலங்களில் ஊராட்சிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக, பிரிட்டனைச் சார்ந்த சமுதாய வளர்ச்சித் துறையிலிருந்து வல்லுநர் குழு ஒன்று வந்தது. அவர்கள், தமிழ் நாடு, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களையும் பார்வையிட்டுத் தங்கள் கருத்தைக் கூறினார்கள். அவர்கள் கொடுத்த அறிக்கையிலே, தமிழகத்தில் ஊராட்சித் துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய அமைப்புக்களும், வேளாண்மைத் துறையும் இணைந்து, தமிழ் நாடு 68 சத விகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் மத்தியப் பிரதேசம்

5 சத விகித வளர்ச்சியையும், குஜராத் 34 சத விகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறதென்றும், தங்கள் மாநிலங்களை விட, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் முன்னேற்றத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பொதுவாகத் தமிழகத்தில், மற்ற மாநிலங்களை விடச் சிற்றூர்கள் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும், நகரங்கள் பெரு நகரங்களாகவும் மாறுதலுக்கு உட்பட்டு, இன்று 443 நகரங்கள் உருவாகியிருக்கின்றன என்பதை நாம் நிறைவோடு எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் போல இரண்டு மடங்கு மக்கள்தொகையுள்ள உத்திரப் பிரதேசத்தில் 293 நகரங்கள் தான் உள்ளன. மராட்டியத்தில் 289- குஜராத்தில் 217 நகரங்கள்தான் இருக்கின்றன. இதை ஒப்பிடும்போது, தமிழகம் எத்தகைய வளர்ச்சியைப் பரவலாகப் பெற்று வந்திருக்கிறதென்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவராக இருந்து பணியாற்றியதில், நேரிடையான அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளமை, நீங்கள் அறிந்ததே. உள்ளாட்சித் திட்டங்கள் அனைத்தும், வேரிலிருந்து தொடங்கி, முற்றிலுமாக மேல் நோக்கிச் சீராக்கும் பணியைத் தன்னகத்தே கொண்டவை. இதில் ஈடுபட்டுள்ளவர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு பணியில் பங்கு கொள்கிறோம் என்பதில் பெருமிதம் கொள்ள வேண்டும்.

பல ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். பல மாற்றங்களைக் காண முடிகிறது. மக்களிடையே நாம் கொள்ளக்கூடிய நம்பிக்கையை வளர்த்திருக்கிறது. தன்னம்பிக்கையை ஊட்டியுள்ளது. கடந்த காலத்தைவிட, பெரியஅளவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய துணிவைத் தந்துள்ளது.

அடுத்துச் செய்யவேண்டிய ஆக்கப் பணிகளும் நிறைய உள்ளன. அவற்றைப் பற்றித் திட்டமிடவும், மக்களின் சக்தியை ஒன்று திரட்டவும், இந்த சமுதாய நலத் திட்ட வார விழா பெரிதும் துணையாகுமென நம்புகிறேன். ஒவ்வொரு ஊராட்சி நிறுவனமும், தனது ஊரை மேலும் வளமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் செய்ய, என்னென்ன பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் முழுமையான கவனம் செலுத்துவதே, ஊர் ஆட்சித் தலைவர்களின் மாபெரும் பொறுப்பாகும். வளர்ச்சிப் பணிகள், அந்தந்த ஊர்களில் வாழும் மக்களின் அனுபவத்திலிருந்தே உருவாக வேண்டும்.

ஊர் வளர்ச்சி என்பது ஊர் ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் ஆகியோர் ஆக்கப் பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே அமைய முடியும். மக்களால்தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் எவ்வளவு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள் என்பதை விட, அந்தக் கால வரம்பிற்குள், மக்களுக்குப் பலன் தரத்தக்க நற்பணிகள் எத்தனை செய்து முடித்துள்ளனர் என்பதே, வரலாற்றில் பொறிக்கத் தக்க சாதனையாக அமைய முடியும். இதுவே, என்றென்றும் நம் புகழை எடுத்தியம்பும் விதமாக நிலைத்து நிற்கும்.

உலக உத்தமர் பிறந்த இத் திருநாளில், சமுதாய நலத் திட்ட வேலைகள் இன்னும் தீவிரமாக நடைபெற, அரசு அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், மக்களும் இணைந்து நின்று, நிலையான சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். சமுதாயத்துக்குப் பயனளிக்கக்கூடிய பொது வேலைகள்



தொடங்கப்பெற்று, இடையிலே தடைப்பட்டு நின்றிருந்கலாம். இவ்விழாவின் போது, மக்கள் மன்றத்துக்கு முன்னால் தடைகள் தகர்த்தெறிப்பட்டு, அப் பணிகளைப் புதிய எழுச்சியுடன் மீண்டும் தொடங்கி முடிக்கலாம். தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கான வகையில் சிறந்த பணிகளை மேற்கொள்ளலாம்.

குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருப்பதை விட, வளம் பெருக்கும் நல்ல சமுதாயத்தை உருவாக்க, ஒவ்வொருவரும் தன் கடமையைச் செய்ய முன் வந்து பணியாற்றுவதே போற்றுதற்குரியது.

எனவே, ஊராட்சித் தலைவர்கள் இவ்விழாவின் நோக்கத்தை உணர்ந்து, விழாவைச் சீரும் சிறப்பும் உடையதாகச் செய்வார்களெனப் பெரிதும் நம்புகிறேன்.

'மாலையின் மாண்பு மணத்தில்; விளக்கின் பயன் ஒளியில், விழாக்களின் பயனே நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய பொன் மொழிக்கேற்ப, பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்றுவோமாக!

[சமுதாய மேம்பாட்டு வார விழாவை ஒட்டி வானொலியில் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் ஆற்றிய உரை].

## வெண்பாப் போட்டி-66

ஈற்றடி : வேறெங்கும் உண்டோ விளம்பு

முடிவுநாள் :— 1—11—73.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர் (வெண்பாப்போட்டி)

தமிழரசு அலுவலகம்

அரசினர் தோட்டம்

சென்னை—600002.

# ஐக்கிய நாடுகள் மன்றத்தின்

# மக்கள் தொகையியல் பணிகள்

எஸ். முத்து ராமலிங்கம்.

ஐக்கிய நாடுகள் மன்றம் என்றதும், நடந்து முடிந்த இரு உலகப் போர்களைப்போல உலகில் இனிப் போர் ஏற்படக் கூடாது---ஏற்பட்டால் மனித இனமே பூண்டோடு அழிந்து விடும்--அந்த அளவுக்கு விஞ்ஞான வித்தைகளால் பிறந்துள்ள ஏவு கணைகளும் பிறவும் வாய்ப்பை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதையெல்லாம் உணர்ந்து தக்க நடவடிக்கைகளால் உலக சமாதானத்தைக் காத்து வருகின்ற நிறுவனம் என்ற பொதுவான எண்ணம்தான் எழும்.

உலக சமாதானத்தைக் காப்பது, *1945*-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் *24*-ஆம் நாள் துவக்கப்பட்ட ஐ. நா. மன்றத்தின் உயிர் மூச்சான பணி என்ருலும், உலகம் உய்வதற்கான அளப்பரிய பல்வேறு பணிகளையும் அது ஆற்றி வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் *18*-ஆம் நாள் ஐ.நா.வின் இருபத்தியெட்டாவது பொதுச் சபை கூடிய போது, கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் முறையே *133*-வது *134*-வது உறுப்பு நாடுகளாகியுள்ளன. அவற்றைத்தொடர்ந்து 'பாகாமாஸ்' (Bhamas) என்ற நாடும் உறுப்பு நாடாகியுள்ளது.

உலகப் போர் ஏற்பட்டால் என்னென்ன வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்பது எண்ணிப் பார்க்கக் கூடியது---கண்ணுக்குத் தெரிய நிகழக்கூடியதும் கூட! ஆனுல் நம் கற்பனைகளுக்கும், எண்ணங்களுக்கும் எட்டாத வகையில்---நாம் உணர முடியாத முறையில்---கண்ணுக்குப் புலப்படாத தன்மையில் வளர்ந்து வரும் பிரச்சினை---உலகப் போரை விடக் கொடுமையானதாக உலகை அச்சுறுத்திவரும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையேயாகும். உலக மக்கள் தொகை பெருகி வரும்வேகமே அதற்குச் சான்ருகும்.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் தொடக்கத்தில் உலக மக்கள் தொகை *170* கோடியாக இருந்தது. *1950*-ஆம் ஆண்டில் அது *250* கோடியாக உயர்ந்தது. *1950*-ஆம் ஆண்டிற்கும் *1970*-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் அது *360* கோடியாக உயர்ந்துள்ளது. இதில் ஏறத்தாழ *250* கோடி மக்கள் உலகின் குறைந்த வருமானமுள்ள பகுதிகளிலேயே வாழ்ந்து வருகிருர்கள். இன்றைய விகிதத்திலேயே மக்கள் தொகைப் பெருக்கம் இருக்குமாஞல் இந்த நூற்ருண்டின் இறுதியில் மக்கள் தொகை *800* கோடியாக உயரும் என்பது ஒரு கணிப்பு.

பிறப்பு விகிதம் உலகில் இனிச் சீராகக் குறையும் எனக் கூறும் இன்னொரு கணிப்பு, உலக மக்கள் தொகை கி.பி. *2000*-த்தில் *650* கோடியாக இருக்குமென்றும், அதில் *500* கோடி மக்கள் வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கிறது. இந்தியாவின் மக்கள் தொகை அப்போது நூறு கோடியாக உயர்ந்திருக்கக் கூடும். தமிழ் நாட்டின் மக்கள் தொகை அப்போது ஏழு அல்லது எட்டு கோடி அளவுக்கு உயர்ந்திருக்கலாம்.

ஆகவே தான் உலகில் போர் ஏற்படாமல் இருக்க அயராது பணியாற்றிவரும் ஐ. நா. மன்றம் உலக மக்கள் பெருக்கத்தை மட்டுப்படுத்திக் கட்டுக்குள் நிலைநிறுத்துவதற்கான பணிகளையும் மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அங்கம் வகித்த உறுப்பு நாடுகள் *1950*-லும் *1960* முற்பகுதி வரையிலும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளைச் சந்திக்க ஆர்வமற்றவையாய் இருந்தன. அரைகுறை மனத்துடனேயே அப் பிரச்சினையை அணுகின. அனைத்துலக அரங்கில் ஆசிய நாடுகள் தான் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையை உயிரோட்டமுள்ளதாக்கி, அதைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டித் திறமையாக செயல்படத் தொடங்கின. ஐ.நா.வின் 'சமூகப் பொருளாதாரக் கழகம்' (Economics and Social Council). *1964*-ஆம் ஆண்டு ஐ. நா. மன்றம் மக்கள் தொகைப் பணிகளுக்கான உதவிகளை அளிக்கலாம் எனத் தீர்மானம் நிறைவேற்றியது. *1963*-ஆம் ஆண்டு டில்லியில் நடந்தேறிய மக்கள் தொகை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளும், செய்யப்பட்ட பரிந்துரைகளுந்தான், அடிப்படையாக அமைந்தன. முதல் ஆசிய மக்கள் தொகை மாநாட்டின் போது, இந்தியா, கொரியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மட்டும், பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான கொள்கைகளை வகுத்துக் குடும்ப நலத்திட்டத்தைத் தேசீயத் திட்டமாக அறிவித்துச்செயல் படுத்தின.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1951-ஆம் ஆண்டில் முதன் முதலில் குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத் திட்டமாகச் செயல்படுத்தத் துவங்கிய நாடு இந்தியா தான்! அதன் பிறகுதான் ஆசிய நாடுகள் மக்கள் தொகைப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத் திட்டமாக மிகுந்த தொலை நோக்கோடு செயல்படுத்தத் துவங்கிய இந்தியா, நிபுணர் குழுவொன்றினை அமைத்து இதில் தனக்கு உதவ வேண்டும் என்று ஐ. நா. மன்றத்தைக் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க ஐ.நா. மன்றம் தனித் திறமை வாய்ந்த நிபுணர் குழுவை 1965-ஆம் ஆண்டு நியமித்தது. இக் குழு அதே ஆண்டு பிரவரித் திங்கள் 20-ஆம் நாள் இந்தியாவில் தனது பணிகளைத் தொடங்கியது. ஓர் உறுப்பு நாடு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, குடும்ப நலத் திட்டப் பணிகளுக்கான செயல் முறைத் திட்டங்களை வகுத்தளிப்பதற்காக ஐ. நா. மன்றம் அமைத்த முதல் நிபுணர் குழு இதுவேயாகும்.

தன் உறுப்பு நாடுகளுக்கு நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் உதவ வேண்டி, ஐ.நா. மன்றமும் அதன் சிறப்பு நிறுவனங்களும் மக்கள் தொகைப் பணிகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென, ஐ. நா.வின் மக்கள் தொகைப் பொறுப்பாண்மைக் குழு (U. N. Population Commission.) 1965-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஐந்தாம் நாள் முடிவுற்ற தனது 13-வது கூட்டத்தில் பரிந்துரைத்தது. பின், ஐ. நா. மன்றத்தின் பொதுச் சபை 1966-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் கூடியபோது நிறைவேற்றிய தீர்மானம் மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ.நா. மன்ற நிதி நிறுவனத்தை (United Nations Fund for Population Activities). 1967-ஆம் ஆண்டு ஏற்படுத்த உதவியது. அதே ஆண்டு கூடிய ஐ.நா. பொதுச் சபையின் 1084-வது தீர்மானத்தின் படி இந் நிதி நிறுவனம் துவக்கப்பட்டது.

ஐ. நா. மன்றத்தின் அங்கமான இந்நிதி நிறுவனத்தின் (UNFPA) முக்கியப் பணி, வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் தொகைப் பணிகளை மேம்பாடு அடையச் செய்வதும், தனிப்பட்ட நாடுகளின் தேவைகளுக்கேற்ப நிதி உதவி அளித்தலுமாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் விளையும் சமூக--பொருளாதார பிரச்சினைகள் குறித்து விழிப்பு உணர்வு ஏற்படுத்துதல், சுற்றுப்புற சுகாதார வாழ்வு பாதிக்கப்படுவது குறித்து அறிவுறுத்தல், குடும்ப நலத் திட்டம் குறித்து மனிதாபிமான உரிமைகள் என்ன என்பதை விளக்குதல், குடும்ப நலத் திட்டப் பணிகளுக்கு முந்துரிமை அளித்து உதவுதல் ஆகியவை இதன் பணிகளில் சிலவாகும்.



ஐ. நா. மன்றத்தின் வெவ்வேறு நிறுவனங்கள் தங்கள் தங்கள் கொள்கை, கோட்பாடுகளுக்கேற்ப மக்கள் தொகைப் பணியாற்ற வகை செய்தலும், அவற்றின் துணையோடு தேசிய அளவில், மண்டல அளவில், அனைத்துலக அளவில் மக்கள் தொகை---குடும்ப நலத் திட்டம் ஆகிய பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குதலும், ஐ.நா. மன்ற அமைப்புக்குட்பட்டு மக்கள் தொகைப் பணிகளை விரிவாக்குதலும் இந் நிதி நிறுவனத்தின் நோக்கங்களாகும்.

இது திறமையாக இயங்க வேண்டுமென்ற கருத்தில், 1969-ஆம் ஆண்டு, ஐ.நா.வின் வளர்ச்சித் திட்டப் பகுதியோடு (United Nations Development Programme) இணைந்து செயல் பட வகை செய்யப்பட்டது. இந் நிதி நிறுவனம், ஓராண்டு முழுமையாகச் செயல்பட்ட முதல் ஆண்டு1970-ஆம் ஆண்டாகும். மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்றத்தின் இந் நிதி நிறுவனம், தன்னிச்சையாக எதையும் செயல்படுத்தாமல், ஐ. நா. வின் வேறு நிறுவனங்களின் மூலம் தான் செயல்படுத்துகிறது. சரியெனப் பட்டால் ஐ. நா. மன்றத்திற்கு வெளியிலுள்ள நிறுவனங்களையும் மக்கள் தொகைப்பணிகளுக்காக இந் நிதி நிறுவனம் பயன்படுத்திக் கொள்கிறது.

ஐ.நாவின் பொதுச் சபை,
சமூகப்பொருளாதாரக்கழகம்,
மக்கள்தொகைப் பொறுப்பாண்மைக் குழு,

ஆகியவை வகுக்கும் கொள்கைகளின் அடிப்படையிலேயே இந் நிதி நிறுவனம் செயல்படுகிறது. இந் நிதியினை எப்படியெப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என அறிவுறுத்த ஆலோசனைக் குழு ஒன்றும் மற்றொரு குழுவும் செயல்பட்டு வருகின்றன.

இந் நிறுவனம் உறுப்புநாடுகளிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கும் நிதியினைக் கொண்டு இயங்குகிறது. நன்கொடைகளை அரசுகள் தன்னிச்சையாக வழங்குகின்றன. 1970-ஆம் ஆண்டு இறுதிக்குள் இதற்கு 20 நாடுகள் வரை நன்கொடை வழங்கின. 1971-ஆம் ஆண்டுநன்கொடை வழங்கும் நாடுகளின் எண்ணிக்கை அறுபதாக உயர்ந்துள்ளது. வளர்ச்சி பெறும் நாடுகளில் ஒன்றான இந்தியாவும் இந் நிதிக்கென நன்கொடை வழங்கியுள்ளது. எதிர்பார்த்த இலக்கிற்கும் மேலாக நிதி சேர்ந்தது. ஐ. நா. மன்றத்தின் உறுப்பு நாடாக உள்ள மிகக்குறைந்த வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளுக்கே இந் நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். இந்தியா இந் நிதியிலிருந்து பெருந் தொகையைப் (2,113,932 டாலர்கள்) பெற்றுள்ளது. இதில் 1972-ஆம் ஆண்டு நடந்த ஆண் அறுவைச் சிகிச்சை முனைப்பு இயக்கங்களுக்கென குறிப்பிட்ட தொகை (பத்து இலட்சம் டாலர்கள்) உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மீதித் தொகை குடும்ப நலத் திட்டத்தின் வெவ்வேறு கூறுகளின் வளர்ச்சிக்கெனவும், பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

இந் நிதி நிறுவனம் ஐ.நா. மன்றத்தின் வேறு கிளை நிறு

வனங்களான, 'மக்கள் தொகைப் பகுதி' உலக சுகாதார நிறுவனம் (WHO) கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (UNESCO) உலகக்குழந்தைகள் நிதி (UNICEF), உலகத்தொழிலாளர் நிறுவனம் (ILO), தொழில் வளர்ச்சி நிறுவனம் (UNIDO) ஆகியவற்றின் துணையோடு, மக்கள் தொகை பற்றிய தகவல், கல்வி, செய்தி முதலிய பணிகளாற்றுவதற்கு உதவுகிறது. உணவு, சுகாதாரம், வேலை வாய்ப்பு, கல்வி, பயிற்சி, தொழில் வளர்ச்சி, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வேறு கூறுகள் ஆகியவற்றிற்கும் மக்கள் தொகை வளர்ச்சிக்கும் உள்ள தொடர்புகள் குறித்த அறிவாற்றலை வளர்ப்பது என்பது இதன் முக்கியமான பணியாகும். தேசிய வளர்ச்சியின் குறிக்கோளை மையமாகக் கொண்டு மக்கள் தொகைக் கொள்கையை வகுத்தளிப்பது என்பதும், மக்கள் தொகை வளர்ச்சியின் போக்கு, அமைப்பு பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பது என்பதும் இதன் சிறப்புப் பணிகளாகும். குடும்ப நலத் திட்டப் பயிற்சிக்காகவும், திட்டச் செயலாக்கத்திற்கான வாகனங்களுக்காகவும் நிதியுதவி அளிக்கிறது. பள்ளிகளில் மக்கள் தொகை இயல் கல்வி அளிக்க வேண்டி ஆசிரியர், மருத்துவ அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோருக்குஅது பற்றி விளக்கமளிக்கக் கல்வி, விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் உலக சுகாதார நிறுவனம், அனைத்துலக தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் துணையோடு தக்க வெளியீடுகளை வெளியிடுகிறது. ஏராளமான கருத்தரங்குகளும் மாநாடுகளும் நடத்தி, உலகெங்கும் மக்கள் தொகை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

சிறப்பாக ஆப்பிரிக்க நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுக்க (Cences Operation) இந் நிதி நிறுவனம் முனைந்திருப்பது, இது மேற்கொண்டுள்ள பெரும் பணியாகும். மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பாக ஏற்படும் பெருஞ் செலவினைச் சந்திக்க இயலாத காரணத்தால் பதினெட்டு ஆப்பிரிக்க நாடுகள் இதற்கு முன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பே நடத்தவில்லை. மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்ற நிதி நிறுவனத்தின் உதவியோடு இதற்கென நான்காண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு இப்போது 21 ஆப்பிரிக்க நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுக்க முனைந்துள்ளன.

அடுத்த நான்காண்டுகளில் (1974--1977), மக்கள் தொகை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும் ஆய்வதுமே இந் நிதியின் முக்கியப் பணியாகும். சில நாடுகளில் மக்கள் தொகைவளர்ச்சி மிகக் குறைவாக இருப்பதால், பிறப்பு விகிதத்தை உயர்த்த வேண்டியதும் இந் நிதியின் பொறுப்பாகி விடுகிறது. மக்கள் தொகைப் பிரச்சினை வளர்ந்து வரும் நாடுகளுக்கு மட்டும் உரியது என்று இந்நிதி கருதவில்லை. அனைத்துலகும் முனைந்து செயல்பட்டுத் தீர்க்க வேண்டிய பிரச்சினை மக்கள் தொகைப் பிரச்சினை என இந் நிதி நிறுவனம் கருதுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மக்கள் தொகைத் தீர்வுக்கான பணிகளில் ஐ.நா. மன்றம் ஈடுபடுவதையே எதிர்த்த நாடுகள், இந் நிதி நிறுவனம் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டத் தலைப்பட்டிருப்பது அதன் தொண்டுக்கு வலிவூட்டுவதாக அமைந்துள்ளது.

உலக உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயத்தை வளர்க்கவும் ஐ.நா. மன்றத்திற்குட்பட்டுத் தன்னிச்சையாகச் செயல்படும் நிறுவனம் உணவு--விவசாய நிறுவனமாகும். வறுமையை ஒழிக்கவும், ஊட்டச் சத்துணவுக்குறையை நீக்கவும், பசியைப் போக்கவும் உணவு உற்பத்தியைப்பெருக்கி முறையான பங்கீட்டிற்கு ஏற்பாடு செய்து, கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, உலகப் பொருளாதாரத்தை உயரச் செய்வதுமே இந் நிறுவனம் துவக்கப்பட்டதின் நோக்கமாகும். 1945-ஆம் ஆண்டில் இந் நிறுவனம் துவக்கப்பட்டது.

வாஷிங்டனில் முதன் முதலில் இயங்கிய இதன் தலைமைச் செயலகம் 1951-ஆம் ஆண்டு முதல் இத்தாலியின் தலைநகராகிய ரோமில் இயங்கி வருகிறது.

மக்கள் தொகைக்கும், உணவு உற்பத்திக்கும் உள்ள சம்பந்தம் பற்றி தகவல் அறிவித்தல், ஆய்வு நடத்துதல், எதிர்கால மக்கள் தொகைப் பெருக்கம் பற்றியும் உணவு உற்பத்தி பற்றியும் புள்ளி விவரம் தயாரித்து அளித்தல், கிராம மக்களிடையே கிராமப் பொருளாதாரத்தைக் கொண்டே மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகளை விவாதித்தல் ஆகிய பணிகளில் இந் நிறுவனம் ஈடுபட்டுச் செயல்படுகிறது. இதற்கான நிதியுதவியை, மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்ற நிதி நிறுவனத்திடமிருந்து உணவு-- விவசாய நிறுவனம் பெறுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'சோளிங்கர்' என்று அழைக்கப்படும் ஊரின் உண்மையான பெயர் சோழசிங்கபுரம். இதுவே சோளங்கிபுரம் என்று அழைக்கப்பட்டு, ஆங்கிலேயர்களால் சோளிங்கர் என்று அழைக்கப்பட்டது. இவ்வூருக்குக் கடிகாசலம் என்ற பெயரும் உண்டு.

இவ்வூரில் சோழமன்னன் ஒருவன் சிவலிங்கத்திற்குக் கோவில் அமைத்தான். அதனால் சோழலிங்கபுரம் என்று பெயர்பெற்றது. சோழலிங்கபுரமே சோழசிங்கபுரம் என்று மாறிற்று என்றும் கூறுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள விடுதலைச் சிலையின் உயரம் நூற்று ஐம்பத்தோர் அடியாகும். பாரிஸ் நகரத்தில் உருவாக்கப்பட்ட இந்தச் சிலையைச் செய்திடப் பத்து ஆண்டுகளுக்கு மேல் பிடித்ததாம். இந்தச் சிலை செய்வதற்கான 2,50,000 டாலரையும் பிரெஞ்சு நாட்டு மக்களே கொடுத்தனர். 1886-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28-ஆம் நாள் இந்தச் சிலை விடுதலைச் சின்னமாகத் திறந்து வைக்கப்பட்டது.

# மகப்பேறு மருத்துவ மனை பெற்ற மாபெரும் பேறு!

தமிழ் நாட்டில் ஆண்டுக்கு 800 முதல் 1000 பேர் மருத்துவர்களாகப் படித்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் அரசாங்க வேலை தர இயலுமா? இதற்கு என்ன செய்யலாம்?

நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் இதற்கு விடை தருகிறார் :

''அரசு மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்துவதை அவர்களாகவே விட்டுவிட வேண்டும். இப்போதுள்ள விதி முறைகளில் கூட மருத்துவர்கள் தனியாகச் சிகிச்சை அளிக்கக் கூடாது; ஆலோசனை மட்டுமே கூற வேண்டும் என்று இருக்கிறது.

''அரசு மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவர்கள் வேலையில்லாமல் இருக்கும் மருத்துவரை அமர்த்திக் கொண்டு சொந்த முறையில் தொழில் நடத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

''புதிதாகப் படித்து வருகிற மருத்துவர்கள் இரண்டு ஆண்டுகளுக்காவது கிராமப் புறங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் பணியாற்ற முன் வர வேண்டும்.''

சென்னை எழும்பூர் மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் மற்றும் அரசினர் தாய்-சேய் நல மருத்துவ மனையில் சுமார் ரூ. 9.50 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள (1) தாய்–சேய் நலப் பகுதி (பேறு கால முன் பணிப் பகுதி), (2) வெளிப் புற நோயாளிகள் பகுதி (அவசர உதவிப் பகுதியுடன்),(3) மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் ஆகிய கட்டடங்களை அக்டோபர் முதல் நாளன்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

நவீன வசதிகளுடன் கூடிய இந்தப் பகுதிகள் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் பணியாற்றும்.



மருத்துவம் என்பது மிக இன்றியமையாத ஒன்று என்று நமக்குத் தெரியும். இவ்வசதியைப் பெறத் தலைநகரங்களுக்குச்செல்ல வேண்டிய அவசியமில்லாமல், சிற்றூர்களிலும், கிராமங்களிலும்கூட மருத்துவ மனைகள் அமைக்க வேண்டியதின் அவசியத்தை நன்குணர்ந்த தமிழ் நாடு அரசு விரைந்து பல ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றது. இப்படிப் பெருகி வரும் மருத்துவ மனைகளின் தேவைக்கேற்ப மருத்துவத்தில், பல கிளைகளில் பயிற்சி பெற்ற திறமை மிக்க மருத்துவர்கள் வேண்டும். இம்மருத்துவர்களை உருவாக்குவதற்கும் பொது மக்கள் பயன் பெறுவதற்கும் இந்தப் புதிய பகுதிகள் பெரிதும் உதவும்.

தாய்--சேய் மருத்துவமனை மற்றும் புற நோயாளிகள் மருத்துவ மனை கட்டுவதற்குத் தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 3.90 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

இக்கட்டடத்தில் தரைத் தளம் 378 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இத்தரைத் தளத்தில் முன் வராண்டாவுடன் கூடிய 10 படுக்கைகள் கொண்ட இரு பகுதியும், செவிலியர் அறையும், தணிப்பு அறையும், சமையல் அறையும் அமைக்கப்பட்டுள்ளன.

புற நோய் மருத்துவ மனை, இரு தளங்களைக் கொண்டது. இத்தரைத் தளத்தில் சேர்ப்பு அறை, விபத்துத் துறை அறை, நோயாளி தங்கும் அறை, புற நோய்களை மறு பரிசீலனை செய்யும் அறை, இரத்தச் சேமிப்பு அறை ஆகிய வசதிகள் உள்ளன.

இரண்டாவது தளத்தில் நுண் கிருமி ஆய்வகமும், நோய்த் தடைக் காப்பு அறையும், 14 படுக்கைகள் கொண்ட கூடமும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகிலேயே மகப் பேறு சம்பந்தமான பொருட்காட்சி ஒன்று ரூ. 2.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

நீராவிச் சலவை நிலையம் ஒன்று ரூ. 1.50 இலட்சம் செலவில் கட்டும் வேலைக்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

மகப் பேறு மகளிர் நோய் இயல் நிலையம் இரண்டு தளங்களால் ஆனது. கீழ்த் தளத்தில் திரைப்படம் காட்டும் வசதிகளுடன் கூடிய விரிவுரைக் கூடம், இயக்குநர் அறை, அலுவலக அறை, ஆராய்ச்சிக்கான அறை, உயிரியல் விஞ்ஞான அறை, பண்டகசாலை அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேல் தளத்தில் நோய்த் தடுப்புக் காப்பு அறை, நூலக அறை, ஆய்வாளர்களுக்கான அறை ஆகியவை அமைக்கப்பட்டிருக்கின்றன.



எழும்பூரிலுள்ள இந்த அரசினர் மகப்பேறு மருத்துவ மனை இந்தியாவிலேயே மிகப் பெரிய, மிகப் பழமையான மருத்துவ மனைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் வயது எத்தனை தெரியுமா? நூற்று இருபத்தொன்பது! 1844--ல் எழும்பூரில் கூவம் ஆற்றங்கரையில் தொடங்கப்பெற்ற இது, 1882--ல் இப்போதுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது.

முதலாவது ஆண்டில் பேறு கால உதவி பெற்ற மகளிர் 100 பேர் ஆவர். ஆனால் இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டேபோய் இன்று 15,000 என்ற அளவில் வந்துவிட்டது! இந்நிலை நீடிக்கலாமா?

ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 4,000 கருச் சிதைவுகள் இம்மருத்துவ மனையில் நிகழ்கின்றன. மகப்பேறு இன்றி மகளிர் நோய் இயல் வகையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்குச் சுமார் 4,000.

எழும்பூரிலுள்ள இந்தப் பழம் பெரும் மருத்துவமனையில், கருப் பையில் புற்று நோய்ச் சிகிச்சைக்காக மட்டும் 88 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு உள்ளது. இந்தப் பிரிவில் ஆண்டுக்குச் சுமார் 1000 பேர் சிகிச்சை பெறுகிறார்கள்.

புற்றுநோய்ச் சிகிச்சைக்காகத் தற்சமயம் அறுவைச் சிகிச்சை முறை, கதிரியக்க முறை ஆகிய வசதிகள் உள்ளன. விரைவில் 'கோபால்டு' கருவியினை அமைக்கத் தமிழ் நாடு அரசு முனைந்துள்ளது. இது செயல்பட்டால் பெருமளவில் சிகிச்சை அளிக்கவும், தங்கிச் சிகிச்சை பெறும் கால அளவினைக் குறைக்கவும் முடியும். இவையன்றிக் கருப்பைப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான நிலையம் ஒன்றை அமைக்கவும் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தொடக்கத்திலிருந்தே இந்த மருத்துவ மனை, மருத்துவக் கல்வி மாணவர்களின் பயிற்சிக்குப் பயன்பட்டு வருகிறது. பின்னர் மருத்துவச்சிகள், செவிலியர்கள் பயிற்சிக்



கான நிலையமாகவும் இது ஆயிற்று. 1930--ஆம் ஆண்டிலிருந்தே மேல் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு இது பயிற்சி தருகின்றது என்றாலும் 1952-ஆம் ஆண்டில்தான் இது உயர் தரக் கல்விக்குரிய நிலையமாக ஒப்புதல் பெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து இங்கே பயிற்சி பெறுகிறார்கள். இதன் தொடர்பாக ஆராய்ச்சி வசதிகள் விரிவு படுத்தப்பட்டுள்ளன. மானிடப் பிறப்பியல் குறித்து எல்லா அம்சங்களையும் ஆராய்வதற்காகத் தனியாக இப் பெரிய பகுதியைக் கட்டட வசதியுடன் ஏற்படுத்தக் கடந்த பத்து ஆண்டுக் காலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970-ல் கட்டட வேலை தொடங்கி, 1973-ஆம் ஆண்டு செப்டம்பரில் வேலை முடிக்கப்பெற்றது. உரிய அலுவலர்கள் அமர்த்தப் பெற்றுப் பணி தொடங்கியதும் மிகச் சிறந்த ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்றாக இது திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குடும்ப நலத் திட்டத்துக்காகப் போதிய அலுவலர் வசதியும், கருவிகள் வசதியும் உள்ள சிறந்த நிலையம் ஒன்று இந்த மருத்துவ மனையில் உள்ளது. நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலும் கடைபிடிக்கப்படும் எல்லா முறைகளையும் குறித்து இதில் ஆலோசனை வழங்கப்படுகிறது. அலுவலர்களுக்குப் பயிற்சி வசதியும் இங்குத் தரப்படுகிறது. குடும்ப நலம் சம்பந்தப்பட்ட பிற உதவிகளுடன் இதில்



ஆண்டுக்கு 2,000 பெண்கள் கருத்தடைக்கான அறுவைச் சிகிச்சை பெறுகின்றனர்.


இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், உலக மக்கள் நல்வாழ்வு நிறுவனம் ஆகியவை இந்தத் திட்டத்துக்கு ஓரளவு உதவுகின்றன. குடிசைப் பகுதிகளில் வாழும் வசதிக் குறைவான மக்களுக்கு இவ்வகையிலும் அவசரக் காலத்திலும் தனி உதவிகள் அளிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. உரிய காலத்துக்கு முன் கூட்டியே பிறந்து விடும் குழந்தைகளைப் பேணவும், தனி வசதி உள்ள பகுதி இங்கே இருக்கின்றது.

தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து, இம் மருத்துவ மனையில் இரண்டு பகுதிகள் கட்ட அரசு ரூ. 4.5 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்தது. இதில் ஒரு பகுதி மகப்பேறு நோய்ச் சிகிச்சைக்காக 20 படுக்கைகள் கொண்டது. மற்றொரு பகுதி மகளிர் நோய் சம்பந்தமாக அவசர உதவிக்காக 24 மணி நேரமும் பணியாற்றும். இவை நீண்ட காலமாக வேண்டப்பட்டுவந்த தேவையாகும். அவசர முறையில் உடனடியாக உதவியளிக்க இது சிறந்த ஏற்பாடு ஆகும். அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு கவனிக்கப்பட வேண்டியவர்களுக்காக 14 படுக்கைகள் உள்ள பிரிவும் இங்கே இருக்கின்றது.

நித்தம் நித்தம் வரும் தாய்மார்களுக்கு என்று திறக்கப்பட்டுள்ள புத்தம் புதிய கட்டடங்களில் நிறைந்த வசதிகளைத் தந்து, அவர்கள் நல்வாழ்வுக்கு வழி வகுக்கின்றது தமிழக அரசு.

வேளாண்மை, தொழில், கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் வளமும் நலமும் பெறவும், தமிழகம் ஓர் முன்மாதிரியாகத் திகழவும் நாம் முன் வர வேண்டும். ஆம். அது நம்முடைய ஒத்துழைப்பில்தான் இருக்கிறது! அதுதான் ''நாம் இருவர்; நமக்கு இருவர்'' என்ற திருவாசகம். இதனை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் வளம் வந்து சேரும்; வளரும் மக்கள் தொகை எனும் பயங்கரப் பிடியிலிருந்தும் நாம் விடுபடலாம்.

—பி.வி.ஜி







## 1845 முதல் 1972 வரை!

வளர்ச்சியின் வைரி எது?


பெருகிவரும் மக்கள் தொகையே அன்றோ?

அரசின் திட்டங்கள் எத்தனை எத்தனையோ! அத்தனையும் செயல் வடிவம் பெற்றுச் செம்மையாவதற்குச் சிறந்த வழி மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான்.

வளமான குடும்பம் என்பது அளவான குடும்பம் அன்றோ? அதனால்தான் 'நாம் இருவர் நாம் பெறுவதும் இருவர்' என்றனர். இந்த வாசகத்தை வாழ்க்கையில் கடைப் பிடித்தால்தான் நாம் கடைத்தேற முடியும்!

இதோ, இந்தப் புள்ளி விவரங்களைப் பாருங்கள்! எழும்பூர் மகப்பேறு மருத்துவ மனையில் 1845-ல் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையையும், 1972-ல் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையையும் பார்க்கும்போது விந்தையாக மட்டுமல்ல, விபரீதமாக முடியும் என்று அஞ்சவும் வேண்டியிருக்கிறது.

இதோ! அந்தப் புள்ளி விவரம்: 1845-ல் 62 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதேபோல 1855–740, 1865–1186, 1875–1136, 1885–1574, 1895–1762, 1905–2153, 1915–2118, 1925–2923, 1935–4035, 1945–6377, 1955–11112, 1965–15,534, 1972-ல் எத்தனைக் குழந்தைகள் தெரியுமா? 14,000.






SEEDS
விவசாயிகளே
பாங்க் ஆ:ப் பரோடா
உங்களுக்கு எல்லா வித
கடனுதவிகளையும் அளிக்கிறது!
பாங்க் ஆ:ப் பரோடா உங்கள் தேவைகளைப் பெற கடனுதவி அளிக்கிறது. விதைகள், உரங்கள், கருவிகள், சாதனங்கள், குழாய்க்கிணறுகள், பம்பு செட், பாசன அபிவிருத்தி, நிலவளம் பெருக்குதல், பண்ணைக் கட்டிடங்கள், பால் பண்ணை, கோழி, மீன்-வள, பன்றிப் பண்ணைகள் ஆகியவைகளைப் பெறக் கடனுதவி அளிக்கிறது. வளமான வருவாய் பெற வழிவகை செய்கிறது.
● நியாயமான வட்டி விகிதங்கள்
● சுலபமாக திருப்பிச் செலுத்தக்கூடிய காலவரையறை.
விவசாயிகள் சிலர் கூடி உருவாக்கும் கூட்டுறவு சங்கங்களும் பாங்க் ஆ:ப் பரோடாவின் விவசாயக் கடனுதவி பெற முடியும்.
நீங்கள் என்றென்றும் வளமையுடன் வாழ—
பாங்க் ஆஃப் பரோடா
(நாட்டுடைமையாக்கப்பட்ட முக்கிய பாங்க்)
இந்தியாவிலும், வெளி நாடுகளில்—யு.கே., கிழக்கு ஆப்ரிக்கா, மொரீசு, பீஜித் தீவுகள் மற்றும் கயானாவிலும் 700க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன.
Shilpi BOB-20A/73 Tam

# பயன்மிகு நெசவுக்குப் பாதுகாப்புத் தந்திடுவோம்!



உழவுதனை முதல்தொழிலாய் நம்பி வாழும்
ஒப்பரிய தமிழகத்தில் உழவர் கூட்டம்
பழகிவந்த பழையமுறை மாற்றி, இன்று
பண்பட்ட புதியமுறை புகுத்தி, மேலும்
அழகுமிகும் அணைகட்டி, ஏரி கால்வாய்
ஆழமாக்கி, நீர்இறைக்கக் குழாய மைத்தே,
எழவேண்டும் எருவளித்துக் கடன்கள் தந்தும்
ஈடின்றி மிகுவிளைச்சல் நிறைத்து விட்டோம்!

பற்றாத குறையெல்லாம் பழைய காதை
பயிர்வளர்ப்போர் உயர்வடைந்தார் புதிய உண்மை
மற்றோரும் உணவுவகை பெற்றுச் செல்ல
மகிழ்வோடு நம்மைத்தான் அணுகு கின்றார்
முற்றாத பிஞ்சுமனம் இல்லை யாக
முறுவலுடன் கேட்பவர்க்கு வழங்கு கின்றோம்
சற்றேனும் நன்றியுள்ளார் இதனை யெல்லாம்
சாதனையின் உச்சமென மெச்சு கின்றார்

அடுத்ததாக மிகநீண்ட காலந் தொட்டே
அருமையுடன் போற்றிவந்த தொழிலொன் றுண்டாம்
உடுத்துகின்ற ஆடைவகை நெய்வ தைத்தான்
உயர்ந்ததொரு செய்தொழிலாய் வளர்த்து வந்தோம்
எடுத்ததெலாம் வெற்றியுடன் முடித்துத் தந்தோம்
இன்றுமிக நலிந்துவிட்ட நெசவா ளர்க்கே
தொடுத்துவரும் துயரங்கள் துடைத்து நல்ல
சுகவாழ்வின் தொடக்கத்தை விரைவில் காண்போம்



கைத்திறனைக் காட்டுகின்ற பருத்தி யாடை,
கவின்மிகுந்த பட்டாடை: தமிழ கத்தின்
கைத்தறிக்கு நிகராக உலகில் இல்லை!
கண்போல அதைக் காத்தல் கடமை யன்றோ?
தைத்திருநாள், திருமணங்கள், விழாக்கள் யாவும்
தழைத்திடுதல் பொன்னிழையால் மின்னும் சேலை
வைத்திருப்ப தாலன்றோ? வாழ்வு குன்றா
வகையாகப் பாதுகாப்புத் தருவோம் நன்றாய்!

கவிஞர் கருணானந்தம்

# பக்கிங்காம் கால்வாய்

**பக்கிங்காம் கால்வாயில் இயந்திரப் படகுகள் செல்லும் வகையில் கால்வாயை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்துக்கு மொத்தம் ரூ. 6 கோடி செலவாகும்.**

தமிழகத்துக்கும் ஆந்திர மாநிலத்துக்கும் இடையே மிக நீண்ட நீர்வழித் தடமாகவும் பல்வேறு வழிகளில் பயன் மிகுந்ததாகவும் விளங்குவது பக்கிங்காம் கால்வாய். இக் கால்வாயின் மொத்த நீளம் சுமார் 451 மைல். இதில் பெரும்பகுதி ஆந்திர மாநிலப் பகுதியில் உள்ளது எனினும் தமிழகத்தில் உள்ள கால்வாய்ப் பகுதியும் முக்கியத்துவத்தில் குறைத்ததல்ல.

இன்று சீர்திருத்தம் செய்யப்பட்டு எழிற்கோலம் பெற்றுள்ள கூவம் ஆற்றைப் போலவே சென்னைப் பட்டினத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் தனியிடம் பெற்றுள்ளது பக்கிங்காம் கால்வாய். மாநகரம் மேலும் அழகுபெற—சுகாதாரக் குறைவான பகுதிகளைத் தூய்மைப்படுத்த — கால்வாய் மூலம் பயன்களைப் பெருக்கிக் கொள்ளப் பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழக அரசு முழு மூச்சுடன் மேற்கொண்டுள்ளது.

**90 ஆண்டுக்காலம்**

பக்கிங்காம் கால்வாய் வேலை, 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொடங்கி 90 ஆண்டுக் கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது. இது முறையாகத் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்பட்ட திட்டவேலை அன்று. கிழக்குக் கடற்கரை நெடுக ஆறுகள் கடலோடு கலக்கின்ற பகுதிகளில் உப்பங்கழிகள் இதர நீர்க்குட்டைகளைச் சிறிது சிறிதாக இணைத்து வளர்த்துப் படிப்படியான முறையில் வளர்ந்து இது நீட்டம் பெற்றது. 1806 ஆம் ஆண்டில் இக்கால்வாய் வேலை தொடங்கியது எனலாம். 1897-ல் கால்வாய் வேலை நிறைவு பெற்றது. இவ் வேலை நடந்த கால அளவினை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து 1883 வரை முதல் காலக்கட்டம். 1883-லிருந்து 1891 வரை இரண்டாவது கட்டம்; 1892-லிருந்து 1897 வரை மூன்றுவது காலகட்டம். படிப்படியான முறையில்தான் வேலை நடந்து வந்தது. 1892 வரை இறுதியான வரைப்படம் இதற்குத் தயாரிக்கப்படவில்லை.

**வறட்சி நிவாரண வேலை**

ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணு ஆற்றிலிருந்து தொடங்கிச் சென்னை மாநகரத்தின் குறுக்கே தொண்டையார் பேட்டை, ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் வழியாகச் சென்று கோட்டூர், பாலிப்பட்டு, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், மரக்காணம் வழியாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தை யடுத்துப் புதுச்சேரி வரை பக்கிங்காம் கால்வாய் செல்லுகிறது. அன்றையச் சென்னை மாகாணத்துக்குக் கவர்னராக இருந்த பக்கிங்காம் காலத்தில் (1876—78) பஞ்சம் ஏற்பட்டது. வறட்சி உதவி வேலைகளில் ஒரு பணியாக இக்கால்வாயின் சில முக்கிய பகுதிகளை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்தார் கவர்னர் பக்கிங்காம். அவர் வெட்டச் செய்த கால்வாய்ப் பகுதி சில மைல் நீளம் தான் என்றுலும் முழுநீளக் கால்வாயும் அவர் பெயரையே பெற்றது. அதற்கு முன்னுல் இக்கால்வாய் காக்ரேன் கால்வாய் என்றும் கிழக்குக் கரைக் கால்வாய் என்றும் வழங்கப்பட்டு வந்தது.

**மொத்த நீளம் 451 மைல்**

இக்கால்வாய் ஒரு உப்பு நீர்க் கால்வாய். சென்னைக்குத் தெற்கே 66 மைல் வரையும் வடக்கே 195 மைல் வரையும் இது நீண்டுள்ளது. கிருஷ்ணு வரை செல்லும் இக்கால்வாயின் தொடர்பாகக் கோதாவரி டெல்டா கால்வாய் இணைப்புகளையும் கணக்கில் கொண்டால் காகினுடாவிலிருந்து மரக்காணம் உப்பங்கழி வரை இதன் மொத்த நீளம் சுமார் 451 மைல் ஆகிறது. கிழக்குக் கடற்கரையோரமாகக் கடலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில், மூன்று மைல் தொலைவுக்கு மேலே போகாமல் கடலோர மணல்பாங்கான பூமியில் இது அமைந்துள்ளது. சில இடங்களில் உயர எழும்பும் கடல் அலைகள், இக்கால்வாயின் கிழக்குக் கரையைத் தொடுமளவுக்குக் கடலுக்கு மிக ஒரமாகவும் இது செல்லுகின்றது.

**நாள் ஒன்றுக்கு 25 மைல்**

இக் கால்வாயின் மிக முக்கியமான பயன், படகுப்போக்குவரத்து ஆகும். ரயில் வழிப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து ஆகியவைகளுடன் ஒப்பிடும்போது நீர் வழிப் போக்குவரத்துத் தான் மிக மலிவானது. அதாவது நீர் வழி, ரயில் வழி, சாலை வழி இவைகளில் பயணம் செல்லச் செலவு விகிதம் 1:3:10 என்று கணக்கிட்டிருக்கிறுர்கள். அந்தக் காலம் பஸ் போக்குவரத்து இல்லாத காலம். ரயில் வசதியும் அதிகமில்லாத காலம். எனவே மக்கள் இக்கால்வாயில் படகுகள் மூலம் சென்று வந்தனர். நாள் ஒன்றுக்கு இப்படகுகள் மூலம் சுமார் 25 மைல் தூரம் பயணம் போகலாம். விறகு, உணவுப் பொருட்கள், உப்பு, கட்டிடச் சாமான்கள், மளிகைச் சாமான்கள், நிலக்கரி, துணி,

இரும்புச் சாமான்கள், கிளிஞ்சல் முதலியன இக்கால்வாய் மூலம் படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டன. எனவே மக்கள் அன்றாடத் தேவைப் பொருட்களைப் பெறுவதிலும், வணிக நோக்கிலும் முக்கியமாக விளங்கியது இக்கால்வாய். சென்னைக்குத் தெற்கே உள்ள தென்பகுதிக் கால்வாயைப் போல 6 மடங்கு சரக்குகள் வடக்குக் கால்வாயில் சென்றன என்று ஒரு கணக்குக் கூறுகின்றது. ஐந்து மாவட்டங்களுக்கிடையே மலிவான எளிதான போக்குவரத்து வசதிக்கு இக் கால்வாய் உதவியாக இருந்தது. காகினாடா மசூலிப்பட்டினம், ஓங்கோல், நெல்லூர் மற்றும் பல வணிக நகரங்களுடன் சென்னை மாநகரத்துக்குத் தொடர்பு ஏற்பட இது உதவியது.

பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் வகையில் மூன்றும் திட்டக்காலத்தில் சென்னை நகரப்பகுதியில் இரண்டு படகுத்துறைகள் அமைக்கப்பட்டன. நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 32 இலட்சம் செலவில் படகுத்துறை அமைப்பு, சாலை அமைப்பு முதலிய வேலைகள் செயல்படுத்தப்பட்டன.

**ரூபாய் 6 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் :**

ரயில் வசதி மற்றும் இதர போக்குவரத்து வசதிகள் காரணமாகவும், கால்வாய் தூரெடுப்பு வேலைகளும் செலவுகளும் அதிகமானதன் விளைவாகவும், இக் கால்வாயின் பயன்கள் சற்றுக் குறைந்தன. ஆனாலும் சரக்குப் போக்குவரத்து, நகரத் தூய்மை ஆகியவைகளையொட்டி, இக்கால்வாயை மேம்படுத்தி, இன்னும் சிறப்பாகப் பயன்படுத்தத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இரு மாநிலங்களுக்கிடையே இக் கால்வாய் செல்வதால் ஆந்திர மாநிலம், தமிழகம் இரண்டும் சேர்ந்து ஒருங்கிணைந்த முறையில் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழகப் பகுதியில் இருக்கும் பக்கிங்காம் கால்வாய் 100 மைல் நீளப் பகுதியிலும் பெருமளவில் மேம்பாடு வேலைகளை மேற்கொள்வதற்காகத் தமிழக அரசு, மத்திய அரசாங்கத்துக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியிருக்கிறது. இந்த மேம்பாட்டுப் பணிகளுக்கு மொத்தம் ரூ. 6 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கூவம் ஆற்றிலிருந்து தமிழகத்தின் வடக்கு எல்லைப் பகுதி வரை இக் கால்வாயின் நீளம் 34 மைல். சென்னையிலிருந்து தெற்கே மரக்காணம் வரை இதன் நீளம் சுமார் 66 மைல். தற்போது சிறு படகுகள் செல்லக்கூடிய அளவில் நீர் ஆழம் 3 அடி மட்டுமே இருக்கின்றது. பெரிய இயந்திரப் படகுகள் செல்லத்தக்க அளவில் இந்த ஆழத்தை 6 அடியாக உயர்த்தவேண்டும் என்பது திட்டமாகும். வடபகுதிக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்கு மூன்றரைக் கோடி ரூபாயும், தென் பகுதிக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்கு இரண்டரைக் கோடி ரூபாயும் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சிற்சில பகுதிகளில் கால்வாயின் ஓரப் பகுதிகளுக்குக் காரை போடப்படும். பாலங்கள் மதகுகள் பகுதியில் காரைக் கட்டுமான வேலைகளைப் பலப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கால்வாய் ஓரத்தில் குடிசைப் பகுதிகளும், கால்வாயில் வந்து விழும் சாக்கடை நீரும்தான் மேம்பாட்டுப் பணிகள் விரைந்து நடப்பதில் இடர்ப்பாடுகளாக இருந்து வருகின்றன. நகராட்சியின் ஒத்துழைப்புடனும் மக்களின் ஒத்துழைப்புடனும் இந்த இடர்ப்பாடுகளை நீக்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

**ஆய்வுக் குழு அறிக்கை**

ஆந்திரப் பகுதியில் உள்ள கால்வாயில் சுமார் 160 மைல் நீளப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஆந்திர அரசாங்கமும் மத்திய அரசாங்கத்துக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியிருக்கிறது.

தமிழகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள், மத்திய அரசாங்கப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஒரு இன்சினீயர், திட்டக் குழுவின் அலுவலர் ஒருவர் ஆகியோரடங்கிய ஆய்வுக் குழுவை மத்திய அரசு அமைத்தது. அந்தச் செயல் திட்டங்களுக்கு இறுதி வடிவம் தரவும், பொதுவான வரைமுறைகளை அமைத்துக் கொள்ளவும் அந்தக் குழுவினர் தமிழகத்திலும் ஆந்திர மாநிலத்திலும் பக்கிங்காம் கால்வாய்ப் பகுதிகளைப் பார்வையிட்டனர். இக்குழுவினர் டிசம்பரில் தங்கள் அறிக்கையை மத்திய அரசுக்குச் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 5 ஆண்டுக் கால அளவில் மேம்பாட்டுப் பணிகள் செயல்படுத்தப்படும். வடக்கு பக்கிங்காம் காலவாயில் எண்ணூர் அருகே கால்வாயை ஆழப்படுத்தும் வேலைகள் ஏற்கெனவே தொடங்கி விட்டன. அடையாறு—கூவம் ஆகியவைகளுக்கிடையே இணைப்புக் கால்வாயிலும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தமிழக அரசு இந்தப் பணிக்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கியுள்ளது.

*சி.க.ரா*





# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

# கேளுங்கள்? கொடுக்கப்படும்

**வினா:** எனது தோட்டத்தின் நிலம் களர். அந் நிலத்தில் எம். சி. யு. 5 பருத்தி பயிரிட்டு ஒருமாத காலம் ஆகிறது. அடியுரமாக 17 : 17 : 17 காம்பளெக்ஸ் மற்றும் மக்கிய எரு போட்டு ஒரு களையும் எடுத்து, ஒரு முறை 'என்ட்ரின்' மருந்தும் விசைத் தெளிப்பான் மூலம் தெளித்துள்ளேன். மேல் உரமாக எந்த உரம் போட வேண்டும். ஒரு ஏக்கருக்கு எவ்வளவு போடவேண்டும்? எப்பொழுது மருந்து தெளிக்க வேண்டும்? அறுவடை முடியும் வரை செய்ய வேண்டியவை களையும் தயவு செய்து கூறவும். இம் மாதத்தில் எனது நிலத்தில் நடுவதற்கு,

ஐ.ஆர்.-20, திருச்செங்கோடு சம்பா ஆகியவைகளை நாற்றுவிட்டு உள்ளேன். இந்த நாற்றுகளை நடும்பொழுது அடி உரம் எவ்வளவு போடவேண்டும்? பிறகு மேல் உரம் எவ்வளவு போட வேண்டும்? மற்றும் மருந்து ஆகியவை களையும் கூறவும். எனது நிலத்தில் மஞ்சள், கடலை, கரும்பு ஆகியவை களைப் பயிரிடலாமா?

—பு. ப. பழனிசாமி,
கலர்த்தோட்டம்,
அருந்தகிரி,
அவிஞசி வட்டம்,
கோவை மாவட்டம்.

**விடை:** களர் நிலத்தில் பருத்தி நல்ல மகசூல் தராது. இருப்பினும் தாங்கள் அதில் பருத்தி பயிரிட்டு விட்டதால், வெகு கவனமாகச் சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேண்டும். எம்.சி.யு. 5 பருத்தி விதை ஊன்றிய 35 முதல் 40 நாட்களில் ஏக்கருக்கு 27 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். களர் நிலத்தில் இரசாயன உரமிடுவதற்கு அமோனியம் சல்பேட்டைப் பயன்படுத்தக் கூடாது. மருந்து தெளிப்பது, அறுவடை வரை செய்யவேண்டியவைகள் ஆகியவற்றைப் பற்றி 1—9—73 தேதிய 'தமிழரசு' இதழில் 'பணத்தை அள்ளித் தரும் பருத்தி பயிரிடுவீர்!' என்ற கட்டுரையில் வெகு விரிவாக விளக்கப்பட்டுள்ளதால், அக்கட்டுரையைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐ.ஆர்.-20 நடுவதற்கு, ஏக்கருக்குக் கீழ்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவில் இடவேண்டும்.

ஐ.ஆர்.-20 நட்ட 21-ஆம் நாள் ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவையும், நடவு செய்த 45 முதல் 50 நாளில் 33 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—220 கிலோ

மூரியேட் ஆப் பொட்டாஷ்—60 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 100 கிலோ யூரியாவை அடியுரமாக இட வேண்டும்.

திருச்செங்கோடு சம்பாவிற்கு, ஏக்கருக்குக் கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவில் இடவும்.

சூப்பர் பாஸ்பேட்—130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ்—23 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 37 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

திருச்செங்கோடு சம்பாவிற்கு நடவு செய்த 21-ஆம் நாள் 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

மேற்கூறிய 2 ரகங்களுக்கும் நடவு செய்த 15-ஆம் நாள், வருமுன் தடுப்பாக, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும். விசைத் தெளிப்பான் பயன்படுத்தினுல், மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஐ.ஆர்.20 நடவு செய்த 30-ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன் 200 கிராம் டைத்தியோ கார்போமேட் மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும். திருச்செங்கோடு சம்பா நடவு செய்த 30-ஆம் நாளில் பாரத்தியானை மட்டும் (15-ஆம் நாளில் தெளித்தது போலவே) தெளித்தால் போதுமானது.

மேற்கூறிய 2 ரகங்களுக்கும் கண்டு உருளும் தருணத்திலும் நடவு செய்த 15-ஆம் நாளில் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளை தூவி விட வேண்டும்.

தங்கள் நிலம் களர் என்பதால் மஞ்சள், நிலக்கடலை ஆகியவைகளைப் பயிரிடுதல் நல்ல பயன்தராது. ஆனுல் கரும்பு, கேழ்வரகு ஆகியவைகளைப் பயிரிடலாம்.

களர் நிலத்திற்கு மேற்கூறிய அளவு உரங்கள் பொதுவான பரிந்துரையேயாகும். தாங்கள், அறுவடைக்குப் பிறகு, மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனை செய்து, மண்பரிசோதனை முடிவில் பரிந்துரைக்கப்படும் அளவில் உரமிடுவதே சிறந்தது.



* குறிப்பு: இப்படி ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டால், பதில் அளிக்கப் பக்கம் வேண்டாமா? மற்றவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டியிருப்பதால், தயவுசெய்து ஓரிரண்டு கேள்விகளுடன் நிறுத்திக் கொள்ளும்படி, 'தமிழரசு' வாசகர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்



**வினு** : எங்கள் கிராமத்தில் உள்ள மணிலாவில் கம்பளிப் புழு இலைகளை எல்லாம் தின்று நாசம் செய்து விடுகிறது. அதற்கு என்ன மருந்து தெளிக்கவேண்டும்? அதற்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்கிறதா? விவரம் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

**— என். இராமலிங்கம்,**
**அமைப்பாளர், உழவர் விவாதக்குழு,**
**புக்குளம், தியாகதுருவம் அஞ்சல்,**
**தென் ஆர்க்காடு மாவட்டம்.**

**விடை** : மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றினல் புழுக்களை அழிக்க உடன் மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை அல்லது 100 மில்லி லிட்டர் 'நூவான்' (Nuvan) மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால், வளர்ந்த சிவப்புக் கம்பளிப் புழுக்கள் இறந்துவிடும். ஒரு ஏக்கருக்குத் தெளிக்க 200 லிட்டர் மருந்துக் கலவை (மருந்தும், தண்ணீரும் கலந்தது) தேவை. 4 அல்லது 5 நாட்கள் வயதுடைய இளம் கம்பளிப் புழுக்களை அழிக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவினல் போதுமானது.

ஒரு முறை மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றினல், ஆண்டுதோறும் தொடர்ந்து சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றக்கூடும். எனவே, சிவப்புக் கம்பளிப் புழுக்களை அலட்சியப்படுத்தாமல், தோன்றிய உடனே மருந்து தெளிக்க வேண்டும். இவைகளை அறவே ஒழிக்க, மருந்து தெளிப்பதுடன், கீழ்க்கண்ட முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.




1. பருவ மழைக்குப் பின் மணிலா வயலில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வைத்துத் தாய்ப் பூச்சிகளைப் (பட்டாம் பூச்சிகள்) பிடித்து அழிக்க வேண்டும்.

2. மணிலாச் செடியின் இலைகளில் இடப்பட்டுள்ள முட்டைகளை இலையுடன் சேகரித்து அழிக்க வேண்டும்.

3. ஒரு வயலில் இருந்து மற்றொரு வயலுக்குச் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் ஊர்ந்து செல்வதைத் தடுக்க ஆங்காங்கே பள்ளங்களைத் தோண்டி வைத்து அதில் விழுந்துள்ள சிவப்புக் கம்பளிப் புழுக்களைச் சேகரித்து நெருப்பிலிட்டு அழிக்க வேண்டும்.

4. மருந்து தெளிக்காவிட்டால், நன்கு வளர்ந்த சிவப்புக் கம்பளிப் புழுக்கள் பூமியின் உள்ளே சென்று கூட்டுப் புழுக்களாக மாறிவிடும். இக் கூட்டுப் புழுக்களில் இருந்து, அடுத்த ஆண்டில் மழை பெய்தவுடன் தாய்ப் பூச்சிகள் வெளிவந்து மணிலாச் செடிகளில் முட்டையிடும். பிறகு முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றி மணிலாச் செடிகளைத் தின்னத் துவங்கும். எனவே, ஆழமாகக் கோடை உழவு செய்தும், வரப்போரங்களை மண் வெட்டியால் ஆழமாக வெட்டியும் கூட்டுப் புழுக்களைச் சேகரித்து எரித்து விட வேண்டும்.

மணிலாவில் தோன்றும் சிவப்புக் கம்பளிப் புழுக்களை அழிக்கத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை தேவையான மருந்துகளை வழங்குவதுடன், தெளிப்பான், தூவான் ஆகிய கருவிகளை வாடகைக்குவழங்குவதுடன் ஏக்கருக்கு ரூபாய் 10 வீதமும், உயர்ந்த அளவாக ரூபாய் 100 வரையும் 'ஸ்பாட் லோன்' (Spot loan) என்னும் திட்டத்தின் கீழ் மணிலாச் சாகுபடி செய்யும் உழவர்களுக்குச் சிவப்புக் கம்பளிப் புழுக்களை அழிப்பதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. இக்கடன், பூச்சி மருந்துகளாகவே கொடுக்கப்படுகிறது. இக் கடன் மணிலா அறுவடைக்குப் பிறகு நிலவரியுடன் வசூல் செய்யப்படுகிறது. இக் கடன் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகுங்கள்.



**வினு** : தற்பொழுது எங்கள் பகுதியில் முட்டைக் கோசு சாகுபடி செய்திருக்கின்றோர்கள். நாற்று நடுவதில் இருந்து 75 நாட்கள் வரை நிறைய மருந்து தெளிக்க வேண்டியிருக்கிறது. இலைகளில் நிறைய அந்துப் பூச்சிகள் இருக்கின்றன. இவற்றை அடிக்க எந்த மருந்தும் சரியாகப் பயன்பட வில்லை. தற்பொழுது கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்து 'ஸ்ப்ரேயர்' மூலம் தெளித்து விட்டுப் பின் அரை மணி நேரம் கழித்துப் பூச்சி மருந்து(நூவான் டி.டி.டீ. 25 சதம்) அடித்தால் அந்துப் பூச்சிகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடிகிறது. கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்து அடித்தால் பயிர்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படுமா? முட்டைக் கோசுப் பயிருக்கு ஒரு நல்ல மருந்து கூறுங்கள்.



**—எம். ஜெகன்னதன்,**
**மே/பா. பாண்டியன் ஏஜென்சிஸ்,**
**48, மெயின்ரோடு,**
**சின்னமனூர் அஞ்சல்,**
**மதுரை மாவட்டம்.**



**விடை** : தாங்கள் குறிப்பிட்டுள்ள பூச்சி அசுவணிப் பூச்சியாகவே இருக்கும் என்று நம்புகின்றோம். அசுவணிப் பூச்சிகளையே தாங்கள் அந்துப் பூச்சி என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்று கருதுகின்றோம். ஏனெனில் அந்துப் பூச்சி என்பது தானியங்களை மட்டுமே தாக்கவல்லது.

அசுவணிப் பூச்சிகள் தான் முட்டைக்கோசுச் செடியினுடைய இலைகளின் அடிப்பாகத்தில் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு செடியின் சாற்றை உறிஞ்சி, இலைகளை வாடி உலர்ந்து விடச் செய்யும். இவைகள் சிறியனவாகவும், கருப்பு அல்லது பச்சை நிறத்துடனும் இருக்கும்.

மேற்கூறிய முறையில் இருப்பின் தங்கள் பகுதி முட்டைக்கோசுச் செடிகள் அசுவணிப் பூச்சியினல் தாக்கப் பட்டுள்ளன என்று முடிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் ஊராட்சிஒன்றியத்துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி)அவர்களை நேரில் அழைத்துச் சென்று பூச்சிகளைக் காட்டி, அவர்

பரிந்துரைக்கும் மருந்துகளைத் தெளிக்கலாம் அல்லது பின்கண்டுள்ளவாறு மருந்து தெளிக்கலாம்.

தங்கள் பகுதி முட்டைகோசுச் செடிகளை அசுவணி தாக்கியிருந்தால், முட்டைக்கோசுச் செடிகளின் 3 வார பருவத்தில், மாலத்தியான் 50 சத மருந்தில் 300 மில்லி லிட்டரையும், டி.டி.டீ 50 சத நனையும் தூள் 750 கிராமையும் 300 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பிறகு 6 வார காலத்தில் டிரைத்தியான் 20 சத மருந்தில் 1 லிட்டரையோ அல்லது மாலத்தியான் 50 சத மருந்தில் 700 மில்லி லிட்டரையோ அல்லது 'ரோகார்' 30 சத மருந்தில் 300 மில்லி லிட்டரையோ அல்லது 'ஆன்தியோ' 25 சத மருந்தில் 700 மில்லி லிட்டரையோ 350 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். செடிகளின் 9 வாரப் பருவத்தில் அசுவணி காணப்படின், கார்பரில் (செவின்) 50 சத நனையும் தூளில் 1 கிலோவை 450 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்துத் தெளித்தால் வேறு சில பூச்சிகளும் நோய்களும் தோன்றவும், முட்டைக்கோசின் சுவை மாறவும் கூடும். எனவே கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டாம். மேற்கூறிய முறையில் மருந்து தெளிப்பதே சிறந்தது.


---

**வினா :** நல்ல நிலையில் இருக்கும் 30 வயதுள்ள தென்னை மரத்தின் காய்கள் மிகவும் சிறுத்து உள்ளன. இவை ஏன் இவ்வாறு மாறிவிட்டன? காய்கள் பெரியதாக மாற வழி இருப்பின் தயவு செய்து விளக்கவும்.

**—என். பலராமன்,**
**நரசிங்கபுரம்,**
**கூத்தம்பாக்கம் அஞ்சல்,**
**சென்னை—56.**

**விடை :** நல்ல நிலையில் இருக்கும் 30 வயதுள்ள தென்னை மரத்தின் காய்கள் சிறுத்து இருப்பதற்குக் காரணம், தென்னை மரத்திற்குப் போதிய சத்துக்கள் பூமியில் இருந்து கிடைக்காததே யாகும். எனவே, நீங்கள் உங்கள் தென்னை மரத்திற்கு இரசாயன உரம் இடுவது மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு மரத்திற்கும் 3 கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களையோ அல்லது 5 கிலோ 6:6:12 கலப்பு உரத்தையோ இட வேண்டும். இரசாயன உரமிட, தென்னை மரத்தில் இருந்து 1.2 மீட்டர் சுற்றளவில் 1 அடி ஆழமும், 1 அடி அகலமும் உள்ள வட்டக் கிடங்கு வெட்டி அதில் இரசாயன உரங்களையும், 20 கிலோ தழை அல்லது தொழு எருவையும் இட்டு மண்ணால் மூடிவிடுதல் வேண்டும். இரசாயன உரத்தைச் சிறப்பாக மழைக் காலத்தில் அதாவது ஐப்பசி-கார்த்திகையில் இடுவது சிறந்தது. மழை இல்லாத போது இரசாயன உரம் வைத்தால், உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இரசாயன உரமிட்ட தென்னை மரங்களுக்குக் கோடை காலத்தில் தவறாமல் தண்ணீர் விட்டு வர வேண்டும். இவ்வாறு இரசாயன உரமிட்டால், உங்கள் தென்னை அதிக அளவில் காய்ப்பதுடன், பருமனான காய்களைக் கொடுக்கும்.





**வினா :** முதல் போகம் சூரியகாந்திப் பயிர் செய்த நிலத்தில் அடுத்த போகத்தில் எந்தப் பயிர் செய்தாலும் பலன் இல்லாமல் போய்விடுகிறது என்றும், நிலத்தில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் நிலம் இழந்து விடுகிறது என்றும் விவசாயிகள் பலர் நினைத்துப் பயிர் செய்ய அஞ்சுகின்றனர். அது தவறு என்பதற்குத் தக்க விளக்கங்கள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் சூரியகாந்திப் பயிர் பூக்கும் பருவத்தில் மழை இருந்தால் மகசூல் பாதிக்கும்; பலன் குறைந்து போகும் என்றும் சொல்கிறார்கள். பூக்கும் பருவத்தில் மழை இருந்தாலும் பயிரைக் காத்து மகசூல் அதிகம் பெறுவது எவ்வாறு என்று மிகவும் விளக்கமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**— எஸ். இராமசாமி,**
**வேளாண்மை கண்காணி,**
**ப. ஆ. திட்டம், தனித் துணை**
**வேளாண்மை இயக்குநர்**
**அலுவலகம், பொள்ளாச்சி,**
**கோவை மாவட்டம்.**




**விடை :** முதல் போகம் சூரியகாந்திப் பயிர் செய்த நிலத்தில் அடுத்த போகத்தில் எந்தப் பயிர் செய்தாலும் பலன் இல்லாமல் போய்விடுகிறது என்பதும், நிலத்தில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் சூரியகாந்தி இழுத்து விடுகிறது என்பதும் தவறான கருத்துக்களாகும். இக்கருத்து உண்மையெனில் வெளிநாடுகளில் இலட்சக் கணக்கான ஏக்கர்களில் சூரியகாந்தி ஆண்டு தோறும் பயிராகுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! சூரியகாந்தியின் வேர்கள் ஆழமாகச்சென்று நிலத்தில் உள்ள நீரையும், சத்துக்களையும் இழுத்துக் கொள்ளக் கூடியதுவை என்பதனாலேயே, சூரியகாந்திப் பயிருக்கு இரசாயன உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் சூரியகாந்திக்கு இரசாயன உரமிட்டு, அதன் அறுவடைக்குப் பிறகு அடுத்தாற்போல் சாகுபடி செய்யும் பயிருக்கும் வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிட்டால், நிச்சயமாக அடுத்த பயிரின் மகசூலும் குறையாது; நில வளமும் குன்றாது! இரசாயன உரமே இடாமலும், ஏதோ பெயருக்குக் கொஞ்சம் இரசாயன உரம் இட்டும் பயிர் செய்யும் போதுதான், அடுத்த பயிரின் மகசூல் குறையும். இது சூரியகாந்திக்கு மட்டுமல்ல, எல்லாப் பயிர்களுக்கும் பொதுவானதேயாகும். எனவே, சூரியகாந்திக்கும், அதை அடுத்துச் சாகுபடி செய்யும் பயிருக்கும் வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் தவறாது இரசாயன உரமிட வேண்டும்.

சூரியகாந்தி பூக்கும் பருவத்தில் மழை இருப்பின் மகசூல் குறையும் என்பது உண்மை. பூக்கும் பருவத்தில் மழை இருக்குமானால், மகரந்தச்

சேர்க்கை முழு அளவில் நடைபெற முடியாததலின், சூரியகாந்திப் பூங்கொண்டைகளில் விதைகள் நன்கு உருவாவதில்லை; மேலும் விதைகள் நெருக்கமாக அமைவதில்லை. இதன் காரணமாகவே சூரிய காந்தி பூக்கும் சமயத்திலும் (விதைத்த 40 முதல் 50 நாட்கள்), மகரந்தச் சேர்க்கை நடைபெறும் சமயத்திலும் (விதைத்த 50 முதல் 60 நாட்கள்) மழை பெய்யுமானால் மகசூல் குறைந்து விடுகிறது. இதை ஆராய்ச்சி மூலமாகவே கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர்க்க, சூரிய காந்தி விதைப்பதை முன் கூட்டியோ அல்லது பின் தள்ளியோ மேற்கொள்ள வேண்டும். உங்கள் பகுதியில் எப்பொழுது மழை பெய்யும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, மழை பெய்யும் காலத்திற்குள் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று முடிந்து விடுமாறு அல்லது அறுவடைக்கு வருமாறு சூரியகாந்தியை முன் கூட்டியே விதைப்பது சிறந்தது. அல்லது சூரிய காந்திச் செடிகளின் வளர்ச்சிப் பருவத்தில் மட்டும் (விதைத்தது முதல் 40 நாட்கள் வரை) மழை இருக்குமாறு பின் தள்ளி விதைப்பது சிறந்தது. இதைத் தவிர வேறு வழி இல்லை. சூரிய காந்தி பூக்கும் பருவத்தில் மழை இருந்தால், பயிரைக் காக்க வேறு வழி இல்லை; மகசூல் குறையத்தான் செய்யும். ஆகவே அனுபவத்தின் அடிப்படையில் முன் கூட்டியோ அல்லது பின் தள்ளியோ சூரிய காந்தியை விதைக்குமாறு உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

**வினா**: பருத்தி சாகுபடி செய்வதைப் பற்றி விளக்கமாகத் 'தமிழரசு' இதழின் மூலம் தெரிந்து கொண்டேன். வேர்ப்புழுக்களைத் தடுப்பதற்காக குருணை மருந்துகளை விதை நடும் சாலில் போடுகிறோம். ஆனால் ஊடுருவிப் பாயும் மருந்துகளை உபயோகிப்பதனால் எவ்விதத்தில் வேர் புழுக்களைத் தடுக்கிறது என்பதைத் தெரியப்படுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**எம். மணி,**
**வேளாண்மைக் கண்காணி,**
**ப. ஆ. திட்டம், பொள்ளாச்சி,**
**கோவை மாவட்டம்.**

**விடை**: ஊடுருவிப் பாயும் மருந்துகளைத் தெளிப்பதனால், அம்மருந்துகள் செடிகளின் உள்ளே சென்று சாற்றுடன் கலந்து செடிகளின் எல்லா பாகங்களிலும் பரவி விடுகிறது. சாறுடன் கலந்த மருந்து அதிககாலம்தொடர்ந்து வீரியத்துடன் செயல்படுகிறது. வேர்ப்புழுக்கள் வேரைத் தாக்கிச் சேதப்படுத்திச் செடியின் சாற்றை உறிஞ்சுகின்றன. இதனால் சாற்றில் கலந்து உள்ள ஊடுருவிப் பாயும் மருந்துவேர்ப் புழுக்களை அழித்துவிடும். வேர் புழுக்களை மட்டுமல்ல, செடிகளை மென்று தின்னும் பூச்சிகள், உறிஞ்சும் பூச்சிகள், உண்ணும் பூச்சிகள் ஆகியவைகளையும் ஊடுருவிப் பாயும் மருந்து அழித்துவிடும்.





* * *

**வினா**: நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்கொண்டுபடிக்க வசதி இல்லாமல் தினக்கூலி வேலை செய்து வருகிறேன். நான் சொந்தமாகச் சமயபுரத்தில் ஒரு பழக்கடை வைத்துச் சொந்தமாகத் தொழில் நடத்த விரும்புகிறேன். எனக்கு எந்தவிதமான சொத்தும் இல்லை. அரசாங்கம் அல்லது வங்கிகள் மூலமாக எனக்குக் கடன் உதவி கிடைக்குமா? இது சம்பந்தமாக யாரிடம் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதைத் தெரியப்படுத்தும்படித் தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**—வீ. வெங்கடாசலபதி,**
**மருதூர் (அஞ்சல்),**
**சமயபுரம் (வழி),**
**திருச்சி மாவட்டம்.**




**விடை**: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து தாங்கள் கடன் பெற்றுச் சொந்தமாகப் பழக்கடை வைத்து முன்னேறலாம். தங்கள் மாவட்டத்தில் 'பாங்க்ஆஃப் பரோடா' பல்வேறு பணிகளுக்குக் கடன் கொடுத்து வருகின்றது. எனவே தாங்கள் அருகாமையிலுள்ள 'பாங்க் ஆஃப் பரோடா'விற்குச் சென்று, உங்கள் கோரிக்கையைத் தெரிவித்து உதவி கோரலாம்.

'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா'விற்குச் சென்றும் உதவி கோரலாம். தாங்கள் நாணயமாகக் கடனைத் திருப்பிக் கட்டுவீர்கள் என்று பரோடா வங்கி அல்லது ஸ்டேட் வங்கியில் கணக்கு வைத்துள்ள ஒருவர் தங்களுக்காக ஜாமீன் கொடுக்க முன் வந்தால், மேற்கூறிய 2 வங்கிகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து உடன் கடன் பெற்று பழக்கடை வைத்திடலாம்.



**வினா**: கோழி வளர்ப்பு முறைப் பற்றியும், அதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் இன்னும் மக்களுக்கு நன்றாகத் தெரியவில்லை. கோழி வளர்ப்புப் பண்ணையில் சரியாக விவரம் அறிய முடியவில்லை. நான் கோழிப் பண்ணை வைப்பதற்கு மிகவும் ஆவலாய் இருக்கிறேன். ஆனால் அதன் விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. ஆகையால் எனக்கும், என்னைப்போன்ற ஆவல் உள்ளவர்களுக்கும் கோழி வளர்ப்பு முறை பற்றியும், அதனால் ஆகும் செலவுகளைப் பற்றியும் விவரமாக 'தமிழரசு' ஏட்டில் எழுதினால் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

**—கே. குருசாமி, 32, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,**
**என்னூர் பேக்கரி சென்னை—600007.**



**விடை**: கோழி வளர்ப்புப் பற்றிய எல்லா விவரங்களுக்கும் 1-11-1973 தேதிய 'தமிழரசு' இதழில் விளக்கமாக வெளியிடப்படும். எனவே, கோழி வளர்ப்புப் பற்றிய விவரங்களுக்குத் தயவுசெய்து 1-11-1973 தேதிய 'தமிழரசு' இதழை வாங்கிப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

**ஆர். எம்.**




புரதச் சத்துப் பற்றுக்குறை நம் நாட்டில் மிகவும் கடுமையாக இருக்கிறது. நாம் வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும் விளங்க வேண்டுமானால், நமது அன்றாட உணவில் தேவையான அளவு புரதச் சத்துக் கலந்திருக்க வேண்டும். ஆனால் நமது உணவாகப் பயன்படும் தானியங்களில் புரதச் சத்துக் குறைவாகவும், மாவுப்பொருள் அதிகமாகவும் இருக்கிறது. புரதச் சத்து மிகுந்த பருப்பு வகைகளோ இந்தியாவில் போதிய அளவில் உற்பத்தியாகவில்லை. அப்படியே கிடைத்தாலும் அவைகளின் விலையோ குறிப்பாக ஏழை எளியவர்களால் வாங்கமுடியாத அளவுக்கு உள்ளது! பொருள் வசதி படைத்தவர்கள் மட்டுமின்றி, ஏழை, எளிய, பாமர, சாமான்ய மக்களும் குறைந்த செலவில் புரதச் சத்துப் பெற வேண்டுமானால், மீன்களை உண்பதே சிறந்த வழியாகும்!

நூறு கிராம் முட்டையில் 13·3 கிராம் புரதச் சத்து மட்டுமே உள்ளது. 100 கிராம் ஆட்டு இறைச்சியில் 18·5 கிராம் புரதச் சத்து மட்டுமே இருக்கிறது. ஆனால் 100 கிராம் மீனில் 21·5 கிராம் புரதச் சத்து அமைந்திருக்கிறது. எனவே, மீன் புரதச் சத்து மிகுந்தது என்பது தெளிவாகிறது.



புரதச் சத்து மிகுந்திருப்பதோடு, விலை மலிவாகக் கிடைக்கக் கூடிய பொருளாகவும் மீன்கள் உள்ளன. ஆனால் பிடிக்கப்பட்ட மீன்களை உடனடியாகச் சமைத்து விட வேண்டும். இல்லாவிட்டால் மீன்கள் கெட்டு விடுகின்றன. இதனால் விரும்பிய நேரத்தில் நல்ல மீன்களை வாங்கிச் சமைத்துச் சாப்பிட முடிவதில்லை. இது மீன் உண்பவர்களுக்குப் பெரும் மனக்குறையாக இருந்து வருகிறது. இக்குறையைப் போக்கிடத் தமிழ் நாடு அரசு ஆங்காங்கே குளிர் பதனப்படுத்தும் நிலையங்களை அமைத்து, மீன்களைக் கெடாமல் பாதுகாத்து வைத்து தேவையானவர்களுக்குத், தேவையான பொழுது தேவையான அளவில் கொடுத்திடப் பெரு முயற்சி செய்து வருகிறது. தமிழ் நாடு அரசின் இம் முயற்சிக்கு இந்திய—நார்வே ஜியன் திட்டம் (Indo-Norwegian Project) பெருந் துணையாக உள்ளது.

இந்திய—நார்வேஜியன் திட்டத்தின் கீழ், தூய்மைப் படுத்திப் பக்குவப் படுத்தப் பட்டது முதல் விற்பனையாகும் காலம்வரை மீன்கள் மிகு குளிர் நிலையில் சேமித்து வைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு குளிர் பதனப் படுத்திய மீன்களை வாங்கி, குளிர் பதனக் கருவியின் (Refrigerator) பனிக் கட்டிப் பெட்டியில் (Ice-box) ஒரு வார காலம் வரை சேமித்து வைக்கலாம். குளிர் பதனக் கருவியிலேயே ஏறத்தாழ 24 மணி நேரம் வரை சேமித்து வைக்கலாம். குளிர் பதனக் கருவி இல்லாதவர்கள் இந்திய—நார்வேஜியன் திட்ட மீன்விற்பனைக் கூடத்தில் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன்களை வாங்கி உடனடியாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

இந்திய—நார்வேஜியன் திட்டத்தின் கீழ், சென்னையில் ஒரு மீன் விற்பனைக் கூடம் தேனாம் பேட்டையில் உள்ள மீனளத் துறை இயக்குநர் அலுவலக வாயிலின் அருகில் அமைந்துள்ளது. காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் இவ்விற்பனைக் கூடத்தில் மீன்கள் விற்கப்படுகின்றன. ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் மாலை 1-30 மணி வரை மட்டுமே விற்பனையுண்டு. இவ்விற்பனைக் கூடத்திற்கு திங்கட் கிழமை விடுமுறை நாள்.

இந்த விற்பனைக் கூடத்தில் பின் கண்ட பொருள்கள் முக்கியமாக விற்பனை செய்யப்படுகின்றன :

(1) குளிர்பதனப்படுத்தப் பட்ட மீன் துண்டுகள். (Frozen fish fillets)

(2) குளிர்பதனப்படுத்தப் பட்ட மீன் கண்டங்கள். (Frozen sliced fishes)

(3) மீன் கைமா (Fish Kheema)

(4) குளிர் பதனப்படுத்தப் பட்ட உருண்டை (முழு) மீன்கள். (Frozen round fish)

(5) மீன் சூப்பு (Fish soup)

(6) புகையினால் வாட்டிப் பதப் படுத்தப்பட்ட மீன்பொருள்கள் (Smoked products)

மீன் துண்டுகள் (Fish fillets) என்பது முக்கிய முள்கள் (எலும்புகள்), தோல், தலை, குடல் முதலியவைகள் அகற்றப்பட்ட மீன் கறியேயாகும். இந்த மீன் துண்டுகள் முழுக்க முழுக்கப் புதிய மீன்களிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன.

இத் துண்டுகளை —18 டிகிரி (Minus 18 degree). சென்டிகிரேடு (0 டிகிரி பாரன்ஹீட்) அல்லது அதற்கும் குறைவான நிலையில் குளிர்பதனப்படுத்தும்பொழுது, மீன் துண்டுகளில் துவக்கத்தில் இருந்த புதுமைத் தன்மை (Freshness) மாறாமல் நிலைத்து நிற்கிறது. எனவே, குளிர்பதனப்படுத்தப்பட்ட மீன் துண்டுகள் புதிய மீன்களின் துண்டுகளுக்கு ஒப்பானவையாகவே இருக்கின்றன.

முள்களும், இறக்கைகளும் சேர்ந்த புதிய முழு மீனின் எடையில் ஏறத்தாழ 35 சதவீத எடை மட்டுமே தனிக் கறியாக இருக்கிறது. இதன் அடிப்படையில், இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் 0.5 கிலோ மீன் துண்டுகளை வாங்குவது, ஏறத்தாழ 1.5 கிலோ முழு மீன்களை வாங்குவதற்குச் சமமானதாகும். எனவே, இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் மீன் துண்டுகளை

வாங்குவது, மீன் அங்காடிகளில் வாங்குவதை விடக் குறிப்பிடத் தக்க அளவுக்குச் சிக்கனமானதாக இருக்கிறது.

சுரு (Shark), வாளை (Silver bar), கெளுத்தி (Cat fish), காணாங் கெளுத்தி (Mackerel) சைமன் (Baracuda), ஆகியவற்றின் குளிர் பதனப்படுத்தப் பட்ட மீன் துண்டுகள் இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யப் படுகின்றன. அங்கு விற்பனை செய்யப்படும் மீன் சூப்பு, மீன்கைமா ஆகியவைகள் உடன் சமைப்பதற்குப் பயன் படுத்தும் தயார் நிலையில் உள்ளன. மீன் கைமாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு வகை மீன்கள் சேர்க்கப்பட்டு நன்கு கொத்தி வைக்கப்பட்டுள்ளது. தேங்காய்ப்பாறை (Vatta), மத்தி (Sardines), எருல் (Shrimp), செங்கெருல் (Lobster) போன்றவை குளிர் பதனப்படுத்தப் பட்ட முழு மீன்களாக விற்கப் படுகின்றன. வஞ்சரம் (Perch), விலாங்கு (Eel) ஆகிய மீன்கள் குளிர் பதனப்படுத்தப்பட்ட கண்டங்களாக விற்கப்படுகின்றன. மேல் நாட்டினர் விரும்பும் புகையினால் வாட்டப்பட்ட மீன் பொருள்களான மீன் துண்டுகளும், முழு காணாங் கெளுத்திகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப்படும் குளிர் பதனப் படுத்தப்பட்ட மீன் துண்டுகளை வாங்கி வறுக்கவோ அல்லது மீன் குழம்பு வைக்கவோ வேண்டுமானால், மீன் துண்டுகளில் ஒட்டியுள்ள பனிக் கட்டிகளை அகற்ற வேண்டியது அவசியமில்லை. பாதியளவு உறைந்த நிலையிலேயே உள்ள அத் துண்டுகளை அரை அங்குல அளவுள்ள துண்டுகளாக வெட்டி, குளிர் பதனப்படுத் தப்படாத புதிய மீன்களைச் சமைப்பது போலவே சமைக்கலாம்.


குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் கண்டங்களையும், முழு மீன்களையும், மீன் சமைப்பதற்கு முன்பு அவைகளை மூடியுள்ள உறைகளைத் திறந்து அறையின் வெப்பநிலையிலேயே ஏறத்தாழ 1 முதல் 1 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அது போலவே எருல் மீன்களையும், செங்கெருல்களையும் அறையின் வெப்ப நிலையில் ஏறத்தாழ 2 மணி நேரம் வைத்திருந்து அதில் உள்ள பனிக் கட்டிகளை ஆவியாகச் செய்ய வேண்டும்.

பனிக் கட்டிகளை அகற்றிட மீன்களைத் தண்ணீரில் கழுவக் கூடாது. பனிக் கட்டியினால் உறைந்த மீன்களை மென்மையாக்கிட, அவைகளைமூடியுள்ள அட்டைப் பெட்டிகளையும், பாலித்தின் காகிதத்தையும் அகற்றி அறையின் வெப்ப நிலையில் அப்படியே வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியம்,

இந்திய-நார்வேஜியன்திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப்படும் எருல்களையும், செங்கெருல்களையும் கொண்டு சுவை மிகு பொருள்களைத் தயாரிக்கலாம்.

புகையினால் வாட்டப்பட்ட மீன்களில் சற்று உப்பு கலந்திருக்கும். அவைகளைத் தண்ணீரிலோ அல்லது பாலிலோ கொதிக்க வைத்தால், மேலும் சற்று உப்பு கலக்க வேண்டும். புகையில் வாட்டப்பெற்றுக் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் துண்டுகளை அறையின் வெப்ப நிலையில் திறந்து வைத்திருக்க வேண்டும். பிறகு, தண்ணீரில் அல்லது பாலில் அவை மென்மையாக ஆகும் வரை மெதுவாகச் சமைக்க வேண்டும். மணம் கூட்ட வெங்காயம், கறிவேப்பிலை முதலியவைகளைப் போடலாம். உருளைக் கிழங்கு, காய்கறிகள், வெண்ணெய், ‘சாஸ்’ முதலியவைகளுடன் கலந்து சாப்பிடலாம். புகையில் வாட்டப் பெற்ற மீன் துண்டுகளை வறுவலாகவும், முறுவலாகவும் செய்யலாம்.

புகையால் வாட்டப் பெற்ற காணாங் கெளுத்திகளையும் அறையின் வெப்பத்தில்திறந்து வைக்க வேண்டும். அவைகளையும் வறுக்கவோ, முறுவலாகச் செய்யவோ, வேக வைக்கவோ செய்யலாம். இக் காணாங் கெளுத்திகளில் மசாலாப் பொருள்களைத் திணித்துப் ‘போளி’ போல் செய்து வேக வைத்தால் மிகவும் சுவையாக இருக்கும். மசாலா தயாரிக்கப் பூண்டு, வெங்காயம், பச்சை மிளகு, தக்காளி ஆகியவைகளைப் பயன்படுத்தலாம். பூண்டு, வெங்காயம், மிளகு ஆகியவைகளைக் கொஞ்சம் மென்மையாக ஆகும் வரை எண்ணெய்யில் வதக்கி, பிறகு அத்துடன் தக்காளியைக் கலந்து கொண்டு ஏறத்தாழ 20 நிமிடம் வரை மெதுவாக



வாறு வேக வைத்த பொருளைக் காணாங்கெளுத்தியின் உள்ளே திணித்துப், பிறகு அவைகளை எண்ணெய்யில் 170 முதல் 180 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் 20 முதல் 25 நிமிடம் வேக விட வேண்டும். அதன் பின் காய்கறிகளுடனும், தக்காளி சாஸுடனும் கலந்து சாப்பிடலாம்.

குளிர் பதனப்படுத்தப்பட்ட ‘சூப்’ கறியின் மேல் உள்ள உறையைப் பிரித்து விட்டு அப்படியே வைத்து விட்டால் அவை உருகிவிடும். அத்துடன் மசாலாப் பொடி கலந்து வழக்கமாகச் செய்யும் முறையில் ‘சூப்’ தயாரிக்கலாம். தேவையானால் வெங்காயம், தக்காளி ஆகியவைகளையும் கலந்து கொள்ளலாம். இந்திய—நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப் படும் மீன் பொருள்களில், பெரும்பாலோர் விரும்பி வாங்கும் பொருள் மீன் ‘சூப்’, மீன் கைமா என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே, இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் குளிர் பதனப்படுத் தப்பட்ட மீன்களையும், மீன் பொருள்களையும் வாங்கி சமைத்துச் சாப்பிட்டு வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும் விளங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.




இந்திய-நார்வேஜியன்திட்ட மீன் விற்பனைக்கூடத்தில் விற்பனை செய்யப்படும் குளிர்பதனப்படுத்தப்பட்ட மீன்களிலிருந்தும் மீன் பொருள்களிலிருந்தும் சுவையும், மணமும் மிகுந்த 'சூப்பு', 'வறுவல்', 'கைமா' தொக்கு ஆகியவைகளைத் தயாரிக்கலாம். தயாரிப்பு முறை வருமாறு :

• மீன் சூப்பு

ஒரு பாக்கட் (450 கிராம்) மீன் 'சூப்' (Fish soup) வாங்கிக் கொள்ளுங்கள். இதிலிருந்து சூப்பு தயாரிக்க பின் கண்ட பொருள்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

பெரிய வெங்காயம்---1

பெரிய தக்காளிப்பழம்---1

எண்ணெய் அல்லதுடால்டா — ½ மேசைக் கரண்டி

மீன் 'சூப்' பாக்கெட்டைப் பிரித்து அதில் உள்ள மீன் கறிகளை ஒருபாத்திரத்தில்போட்டு அப்படியே வைத்து விட வேண்டும். அறையின் வெப்பத்தில் மீன் கறி உருகிவிடும். துண்டு படுத்திய வெங்காயத்தையும், தக்காளியையும் பொன்னிற பழுப்பு நிறமடையும் அளவுக்கு வறுத்துக் கொள்ளவேண்டும். உருகிய சூப்பை இலேசாகச் சூடாக்கவும். பிறகு வறுத்த வெங்காயத்தையும், தக்காளியையும் சூப்புடன் கலக்கவும். மீன் சூப்புக் கறியில் உப்பு கலக்கப்பட்டு விற்கப்படுவதால், மேலும் தேவையானல் உப்பு, மிளகுப்பொடி ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். சூடாக இருக்கும் பொழுதே இவ்வாறு தயாரிக்கப்பட்ட சூப்பினைச் சாப்பிட்டால் வெகு சுவையாக இருக்கும்.

மீன் வறுவல்

வறுப்பதற்குத் தயாரான நிலையில் உள்ள 10 துண்டுகள் (200 கிராம்) கொண்ட மீன் துண்டுகள் (Fish fritters) அடங்கிய பாக்கெட் ஒன்று வாங்கிக் கொள்ள வேண்டும். 'டால்டா' அல்லது 'ஒ.கே' எண்ணெயை வாணலியில் சூடாக்க வேண்டும். பாக்கெட்டைப் பிரித்து உறைந்த மீன் துண்டுகளை எடுத்து, அவைகளின் மேல் சிறிது மிளகாய்த் தூள், உப்பு ஆகியவற்றைத் தூவி விட வேண்டும். எண்ணெய் போதிய அளவு சூடாகிய பிறகு, மீன் துண்டுகளை அதில் போட்டு நன்கு வறுக்க வேண்டும். (மீன் துண்டுகளை எண்ணெய்யில் பப்படம், அல்லது அப்பளம் வறுப்பது போல் வறுக்க வேண்டும்). மீன் துண்டுகளை நன்கு கலக்கப்பட்ட 1 முட்டையில் நனைத்து எடுத்த பிறகு கூட மேற்கண்டவாறு நன்கு வறுக்கலாம். இவ்வாறு வறுக்கப்பட்ட மீன் துண்டுகளைச் சூடாக இருக்கும் போதே துண்டாக்கப்பட்ட தக்காளி, வெங்காயம், காய் கறிகளுடனும், தக்காளி சாஸுடனும் கலந்து சாப்பிடலாம்.

மீன் 'கட்லெட்'

மீன் கைமா (Fish Kheema) ஒரு பாக்கெட் (450 கிராம்) வாங்கிக் கொள்ளவும். 'கட்லெட்' செய்யப் பின் கண்டவைகளை எடுத்துக்கொள்ளவும்.

பெரிய வெங்காயம்—3

பச்சை மிளகாய்—6

கொத்தமல்லிக் கீரை—1 கொத்து

பொதினு இலைகள்—சில.

மேற்கூறியவைகளைத் துண்டாக்கிக் கொள்ளவும்.

இஞ்சி—ஒரு துண்டு.

பூண்டு—6 பல்.

இவ்விரண்டையும் பசையாக அறைத்துக் கொள்ள வேண்டும்.

மிளகாய்ப் பொடி—1½ மேசைக் கரண்டி

கொத்தமல்லிப் பொடி---1 மேசைக் கரண்டி

மஞ்சள் பொடி--- ½ தேயிலைக் கரண்டி

பெரிய தக்காளிப்பழம்---3

பெரிய உருளைக் கிழங்கு---3

ரொட்டி---3 துண்டு

'வினீகார்' (Vinegar)--- ½ தேக்கரண்டி


எண்ணெய் அல்லதுடால்டா --வறுப்பதற்குப்போதிய அளவு.

உப்பு—சுவைக்கேற்றவாறு.

முட்டை---2



2 முட்டைகளை உடைத்து, சிறு அளவு சமையல் சோடா உப்பு அல்லது கோதுமை மாவு டனும், ரொட்டித்தூளுடனும் (கட்லெட்டின் மேலே மூடுவ தற்குப் போதிய அளவிற்கு) நன்கு கலக்க வேண்டும்.



மீன் கைமா பாக்கெட்டைப் பிரித்து எடுத்து, அறையின் வெப்ப நிலையில் 1 அல்லது 1½ மணி நேரத்திற்கு—மீன் கைமா மென்மையாக ஆகும் வரை—அப்படியே வைத்திருக்க வேண்டும். வாணலியில் ¼ கிண்ணம் எண்ணெய் (அ) 'டால்டா' விட்டுச் சூடாக்க வேண்டும். பிறகு எண்ணெய் சூடாக இருக்கும் பொழுது அதில் மேற்கூறிய துண்டாக் கப்பட்ட பொருள்களைப் போட்டு சிறிது பழுப்பு நிறம் அடையும் வரை வறுக்க வேண்டும். பிறகு அறைத்த இஞ்சி--பூண்டு பசையையும், உப்பையும் சேர்க்க வேண்டும். இவையும் வறுக்கப்பட்டபிறகு மிளகாய்ப் பொடி, கொத்த மல்லிப் பொடி, மஞ்சள்பொடி ஆகியவைகளைச் சேர்த்து வறுக்க வேண்டும். நன்கு வறுக்கப்பட்ட பிறகு, துண் டாக்கப்பட்ட தக்காளியைச் சேர்க்க வேண்டும். இவை அனைத்தும் நன்குவெந்தபிறகு, மென்மையாக ஆகிய மீன் கறியைச் சேர்க்க வேண்டும். மீன் கறி வேகும் வரை---தண்ணீர் சுண்டும் வரை---நன்கு கிளறிவிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பிறகு அதில் 'வினீகார்' ஊற்றவேண் டும் அல்லது பாதியளவு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்துவிட வேண்டும். பிறகு வாணலியை அனலில் இருந்து எடுத்து வைத்து, வேக வைத்துப் பிசையப்பட்ட உருளைக் கிழங்கு, சிறு சிறு துண்டுகளாகச் செய்யப்பட்ட ரொட்டித் துண்டுகள் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். மீன் கறி மிகவும் வறட்சியாக ஆகியிருந்தால் ரொட்டித் துண்டுகளைச் சிறிது தண்ணீரில் நனைக்க வேண்டும். பிறகு இவை அனைத்தையும் நன்கு கலந்து, 'கட்லெட்' உருண்டைகளாகச் செய்ய வேண்டும். பிறகு உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப எந்த உருவத்தில் வேண்டுமானாலும், உருண்டைகளைத்தட்டையாகச் செய்து கொள்ளலாம். அவைகளைக் கலக்கிய முட்டையில் நனைத்து எடுத்து, கொஞ்சம் எண்ணெய்யில் வறுக்க வேண்டும். ('கட்லெட்' எண்ணெய்யில் மூழ்கும் அளவுக்கு அதிக எண்ணெய் தேவை இல்லை.) அல்லதுதட்டையாகச் செய்யப்பட்ட 'கட்லெட்டின்' மேல் கொஞ்சம் கோதுமை மாவைத் தூவி, ரொட்டித் தூளில் உருட்டி எடுத்துக் கொண்டு அவைகளைத் தோசை சுடுவதற்குச் செய்வது போல் கொஞ்சம் எண்ணெய் விட்டு, பொன்னிறம் அடையும் வரை வறுக்க வேண்டும். இவ்வாறு வறுக்கப்பட்ட 'கட்லெட்'சாப் பிடுவதற்குத் தயாராக ஆகி விடுகின்றன. இவைகளைத் தக் காளி சாஸுடன் கலந்து சாப் பிட்டால் மிகுந்த சுவையாக இருக்கும்.

## மீன் தொக்கு

மீன் தொக்கு செய்வதற்கு ஒரு பாக்கெட் (450 கிராம்) கைமா (Fish kheema) வாங்கிக் கொள்ளவும். தொக்கு செய்வ தற்குப் பின் கண்ட பொருள் கள் தேவைப்படுகின்றன.

பெரிய வெங்காயம்—-1 (துண்டாக்கப்படவேண் டும்)

இஞ்சி—1 துண்டு

பூண்டு—-சில பற்கள்

மேற்கூறிய இரண்டும் அரைக் கப்பட வேண்டும்.

மிளகாய்ப் பொடி—2 மேசைக் கரண்டி

கொத்தமல்லிப் பொடி—1 மேசைக்கரண்டி

மஞ்சள் பொடி--1 தேயிலைக் கரண்டி

தக்காளி—4

உப்பு—சுவைக்கு ஏற்ற அளவு.

எண்ணெய் (அ) டால்டா— ¼ கிண்ணம்



மீன் கைமா பாக்கெட்டைப் பிரித்து அறையின் வெப்ப நிலையில் 1 அல்லது 1½ மணி நேரம் அப்படியே வைத்து, உறைந்த கைமாவை மென்மையாக ஆக்க வேண்டும். துண் டாக்கப்பட்ட வெங்காயத்தை ¼ கிண்ணம் 'டால்டா' (அ) எண்ணெய்யில் வதக்க வேண் டும். அவை பொன்னிறப் பழுப்பு நிறம் அடையும்போது அறைத்த இஞ்சி, பூண்டுகளைச் சேர்க்க வேண்டும். சற்று நேரத்திற்குப்பிறகு மிளகாய்ப் பொடி, கொத்தமல்லிப்பொடி, மஞ்சள் பொடி, உப்பு ஆகிய வைகளைச் சேர்க்க வேண்டும். இவைகளை நன்கு வதக்கிய பிறகு, துண்டாக்கப்பட்ட தக் காளியைச் சேர்க்க வேண்டும். அவைகளையும் நன்கு வதக்கிய பிறகு, மீன் கைமாவைச் சேர்த்துக் கொஞ்ச நேரம் கிளறி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்ச நேரம் வெந்த பிறகு, வேக வைப்பதற்குப் போதிய அளவு தண்ணீர் சேர்க்க வேண்டும். பிறகு பாத்திரத்தை மூடிவிட்டு மீன் கைமாவை நன்கு வேக வைக்க வேண்டும். பாத்திரத் தில் உள்ள மீன் கைமா, குழம்பு போல் ஆகும் பொழுது பாத் திரத்தை அனலில் இருந்து இறக்கி வைத்து அப்படியே வேக விட வேண்டும். இதுவே மீன் தொக்கு! இதைச் சோறு அல்லது ரொட்டி சாப்பிடப் பயன்படுத்தலாம்.


---சாந்தி பேட்ரிக்.



நாம்
என்பது....
நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
எதிர் காலத்தைப்
பொன்னொளியாக்க
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு


செய்தியே சித்திரமே!
தமிழ்நாட்டில் ரூபாய் 84 லட்சம் செலவில் 14 சிறு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்
குடும்ப நலத் திட்டத்திற்குத் தமிழ்நாட்டுக்கு அளித்து வந்த 6 கோடி நிதி உதவியை 2.94 கோடியாக மத்திய அரசு குறைத்தாலும் தமிழ்நாடு அரசு 1.25 கோடி ரூபாயை மேலும் அளித்துக் குடும்பநலத் திட்டப் பணிகள் தொடர உதவிடும்
ரூ 1.25 கோடி
2.94
மின் உற்பத்திக்குத் தனிக் கழகம் அமைக்கப்படும்


செய்தியே சித்திரமே!
சென்னைக்கு அருகில் வண்டலூரில் ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் செலவில் புதிய மிருகக்காட்சிசாலை இயற்கைச் சூழலில் அமைக்கப்படும்
கோயில் இறம் நிலங்களில் பயிரிடுவோர் பட்டா உரிமை பெறப் புதிய சட்டம் வரும்
~குமுதன்~
புதுக்கோட்டை தனி மாவட்டமாகப் பொங்கலன்று உதயமாகும்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
புதுக்கோட்டை மாவட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்




''உங்கள் பெண்ணுக்குப் பாடத் தெரியுமா? ஆடத் தெரியுமா?'' என்றுமாப்பிள்ளை வீட்டார் கேட்பதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனல், ''உங்கள் பெண்ணுக்கு மலர் அடுக்கத் தெரியுமா?'' என்பதைக் கேள்விப் பட்டிருக்கிறோமா?

ஜப்பானில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்கப் போகும்போது இந்தக் கேள்வியைக் கேட்கத் தவறுவதில்லை! ஜப்பானியர் மலரை அழகுக்காக மட்டுமின்றி, அதனைத் தெய்வமாகக் கூட மதிக்கின்றனர்.

'வாழ்க்கை வேறு, கலை வேறு என்று கூறுகிறார்கள். வாழ்க்கையும், கலையும் ஒன்றோடொன்று பிணைந்ததுதானே?' என்று சொல்வது போல ஜப்பானியரின் வாழ்க்கை கலை வடிவாய் அமைந்திருக்கிறது. எதையும் கலைக் கண்ணோடு பார்க்கும் ஜப்பானியர் எந்தப் பொருளையும் வீணுக்குவதில்லை. ஒரு சிறு துரும்புகூடச் சித்திரமாகிவிடும், அவர்கள் கை வண்ணத்தாலே!

வீடு, அலுவலகம், பொது இடம் எதுவும் எழில் மிக்கதாய்க் காட்சி அளிக்கும். அதற்குக் காரணம் அவர்களுக்கிருக்கின்ற கலையுணர்வு தான் என்றால் அது மிகையல்ல. அவர்கள் இல்லங்களில் வண்ண வண்ண மலர்கள் வந்தாரை வரவேற்கும்! அழகின் சிரிப்பை அங்கே கண்டு மகிழலாம்.

நாம் கோலம் போடுவதை ஒரு கலையாகவே வளர்த்து வரவில்லையா? அதைப்போல, ஜப்பானியர்மலர்களைக் கிளையோடு பறித்துத் தொகுத்து, அதனை அழகாய் அடுக்கி வைக்கும் கலையை வளர்த்து வருகின்றனர். இக்கலை இங்குப் பன்னெடுங் காலமாய் வளர்ந்து வருகிறது; அவர்கள் வாழ்க்கையோடு இணைந்த அருங்கலையாகவும் அது விளங்கி வருகிறது.

இப்படிப் பல்வேறு வகையான மலர்களை அடுக்கி வைக்கும் கலைக்குப் பெயர்தான் இகபனு! இந்த இகபனு (Ikebana) கண்காட்சி ஒன்று செப்டம்பர் 23, 24-ஆம் தேதிகளில் சென்னை இராசேசுவரி

# இகபனு







திருமண மண்டபத்தில் நடந்தது.

விழாவுக்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் யார் தெரியுமா? பெண்கள்தான்! பூவையர் என்பதை மெய்ப்பிக்கவோ என்னவோ இந்தப் பூக்கண்காட்சிக்கு அவர்கள் வண்ணப் பூக்களைப் போல உடையணிந்து வந்திருந்தனர்!

'இந்தோ-நிப்பான் பண்பாட்டுக் கூட்டுறவுக் கழகம்' நடத்திய இந்தக் கண்காட்சி, கண் கொள்ளாக் காட்சியாக இருந்ததைக் குறிப்பிட வேண்டும்.

காட்சி அரங்கத்தினுள் நுழைகிறோம். எத்தனை எத்தனை மலர்கள்! எத்தனை எத்தனை வண்ணங்கள்! நம் எண்ணங்கள் மலரோடு ஒன்றிப் போகின்றனவே! அதோ! சிவப்பு, மஞ்சள், வெள்ளை, ஆரஞ்சு வண்ணங்களில் மலர்கள் புத்தம் புதியனவாய்க் காட்சி அளிக்கின்றனவே! அவையெல்லாம் இன்று காலை பறித்தனவா? அருகே போகிறோம். உற்று உற்று பார்க்கிறோம். நம் கண்களை நம்மால் நம்பவே முடியவில்லை. தொட்டுப்பார்க்கிறோம். (தயவு செய்து தொடாதீர்கள் என்ற அறிவிப்பைப்பொருட்படுத்தாமல்!) காகிதப் பூக்களா அப்படிக் காட்சியளிக்கின்றன என்று ஜப்பானியர் கைவண்ணம் கண்டு வியக்கிறோம்! கண்ணாடிப் பெட்டியில் உள்ள, பொம்மை என்ன உயிருள்ளவையா? ஜப்பானியர் கை








வண்ணம் அதனை உயிரோவியமாய்க் காட்டுகிறது!

மலர்கள் நமக்கு மணத்தை மட்டுமா தருகின்றன? 'அன்றலர்ந்த செந்தாமரை போல் என்றும் மலர்ந்த முகத்தோடு இருங்கள்' என்றல்லவா அது திருவாய் மலர்கிறது!

உயர்ந்த மலை!

அதையொட்டி அழகிய ஏரி! ஆகா! எத்தனை அழகு! ஏரியிலே செல்லும் படகுகள்-- பார்த்துக்கொண்டே போகிறோம். வானளாவிய கட்டடங்கள். நீண்ட பரந்த சாலைகள். ஆங்காங்கே அடுக்கடுக்கான பாலங்கள். அதில் விரைந்து செல்லும் ஊர்திகள். ஆடவர், மகளிர் அலுவலகம் செல்லும் காட்சி. திருவிழாக்கள். தீப அலங்காரங்கள். இயற்கைக் காட்சிகள். இதயத்தைத் தொடும் மலர் வண்ணங்கள்---



எதிரே வண்ணப்படம் காட்டப்படுகிறது! நாம் ஜப்பானுக்கே போய்வருகிறோம்!

இகபனு!

கமினே ஹனு

ஓரி காமி . . . இப்படியெல்லாம் சொல்லி உங்களைப் புதிருக்குள் ஆழ்த்தவில்லை. இகபனு என்றால் மலர்களை எழிலுற அடுக்கி வைப்பது, கமினே ஹனு என்றால், காகிதத்தாலான பூக்களை அழகுற அடுக்கி வைத்தல், ஓரி காமி என்றால்? காகிதத்தாலான பொம்மைகள் முதலானவற்றைச் செய்து காட்டுதல். இம்மூவகைக் காட்சிகளும் நம் மனத்தில் முத்திரையாய்ப் பதிகின்றன.

நாம் மலர் பறித்து மாலை தொடுக்கிறோம். கூந்தலில் அணிந்து மகிழ்கிறோம். ஆனால் ஜப்பானியர் மலரை வெறும் அழகுப் பொருளாக மட்டும் நோக்காது, அதை ஒழுங்குபடுத்தி பூத் தொட்டியில் தொகுத்து வைப்பதைச்சிறந்த பொழுதுபோக்காக — ஏன், தொழிலாகக் கூட கொண்டுள்ளனர். இப்பணியில் மகளிர் மட்டுமல்ல, ஆடவரும் கூட ஈடுபடுகின்றனர். புத்தர் பிறந்த நாளில் 'பூமாரி' விழாவொன்றை ஜப்பானியர் நடத்துகிறார்கள். தோட்டக்கலையிலும் அவர்கள் நிகரற்று விளங்குகிறார்கள்.

வீட்டில் உள்ள மலர் அலங்காரத்தைக் கொண்டே அவ்வீட்டின் நிலைமையை நாம் தெரிந்து கொள்ளலாமாம்! மலரை அடுக்கிவைக்கும் முறை இதனை வெளிப்படுத்துமாம். இவ்வாறு மலர்ந்த வாழ்வினையுடையவர்களாக ஜப்பானியர் விளங்குகிறார்கள்.


இம்மாதிரியான மலர்க் கண்காட்சிகள் இதுவரை நான்கு நடந்துள்ளன. இவற்றை ஏற்பாடு செய்து வரும் இந்தோ-நிப்பான் பண்பாட்டுக் கூட்டுறவுக் கழகம் 1971-ல் சென்னையில் துவங்கியது. இது ஜப்பான் நாட்டு ஒசாகாவில் உள்ள ஜப்பான் வேதாந்தக் கழகத்தோடு தோழமை கொண்டுள்ளது. இந்தியா--ஜப்பான் இரு நாடுகளிடையே கலை, இலக்கிய வழி தோழமை ஏற்படுத்துவதே இவ்வமைப்பின் தலையாய நோக்கமாகும்.

ஆமாம், 'நிப்பன்' என்றால் என்ன?

ஜப்பானை 'உதய ஞாயிற்றொளி பெறும் நாடு' என்று கூறுவர். ஜப்பானியர் தங்கள் நாட்டை 'நிப்பன்' என்றே சொல்கின்றனர். இச்சொல்லுக்குச் 'சூரியன் தோன்றும் இடம்' என்று பொருள். நிப்பன் என்பதுதான் பிறகு ஜப்பான் என்று மருவியது. ஜப்பான் நாட்டுக் கொடியில் கூட சூரியன் இருப்பது இதனை உணர்த்தும்.

சென்னையிலுள்ள இந்தக் கழகம் என்ன செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?





தமிழில் ஜப்பான் மொழியைக் கற்றுக் கொள்ள இது வகுப்புகள் நடத்துகிறது. இதற்காக 'ஜப்பான் மொழி பயில எளிய வழி' என்ற நூலைத் தமிழில் முதன் முதலாக வெளியிட்டிருக்கிறது. இம்மொழியில் துவக்கம், உயர்நிலை, மேல் உயர்நிலை என்ற மூவகைத் தேர்வுகள் உள்ளன. 9 மாதக் காலத்துக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஜப்பான் மொழியைக் கற்றுத் தருவதற்கென்றே, ஜப்பானிலிருந்து புதிய புதிய ஆசிரியைகள் சென்னைக்கு வரவழைக்கப்படுகின்றனர்.

இவையன்றி, இகபனா, கமினோ ஹனா, ஒரிகாமி ஆகிய வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்புகளிலும், ஜப்பான் மொழிப் பயிற்சியிலும் தேர்வுபெறுபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெறுகின்றன. இத்தகைய சான்றிதழ்களைக் கண்காட்சியின் போது நிறையப் பேர் பெற்றனர்.

350 பேரை உறுப்பினராகக் கொண்ட இக் கழகம், திங்கள் தோறும் ஜப்பான் பற்றிய திரைப் படங்களைக் காட்டுகின்றது. ஆண்டுக்கோர் முறை ஜப்பான் நாட்டுக்குக் குறைந்த செலவில் போய் வரவும், இலவசமாக அங்கு ஒரு வாரக் காலம் தங்கவும் ஏற்பாடு செய்கிறது. இதுவரை மூன்று சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து உறுப்பினர்களை மகிழ்வித்திருக்கிறது.

'ஜப்பானிலும் இதற்குத் தொடர்பான கழகம் ஒன்று இருந்தால் நல்லதல்லவா?' என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

ஜப்பானிலும் இதற்குத் தொடர்பான கழகம் ஒன்று செயல்படுகிறது. சமூகத் தொண்டில் தற்போது ஈடுபட்டுவரும் அது, தமிழ்மொழியைக் கற்றுத் தரவும், தமிழ் இசையில் பயிற்சி தரவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இங்கிருந்து ஜப்பானுக்குச் சுற்றுலா செல்வது போல, அங்கிருந்தும் இந்தியாவுக்குச் சுற்றுலா வருகின்றனர். அந்தப் பயணிகளுக்குச் சென்னையிலுள்ள கழகம் பல வகையிலும் உதவிகள் புரிகின்றது.

இவ்வாறு இரு நாடுகளிடையே பண்பாடு, கலை, இலக்கிய உறவுகளை வளர்ப்பதற்கு இந்த இரு கழகங்கள் பெருந்துணை புரிந்து வருகின்றன.

தமிழின் தொன்மை, அதன் பெருமை முதலானவற்றை விளக்கிடும் வகையில் ஜப்பானிலுள்ள கழகம் விரைந்து செயலாற்றிட முன்வர வேண்டும். மலர்க் கண்காட்சியைப் போன்று, தமிழர் சிற்ப, சித்திரக் கலைக்கண்காட்சி ஒன்றையும் ஜப்பானில் நடத்தலாம். தேமதுரத் தமிழோசை பரவும் வகை செய்வதற்குஇருநாட்டுப் பண்பாட்டு உறவுக் கழகங்களும் முன் வர வேண்டும்.

மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்பதை உணர்த்திட, உணர்ந்திட இந்த மலர்க் கண்காட்சி நமக்கெல்லாம் ஒரு படிப்பினையைத் தந்துவிட்டது என்று நிச்சயமாகக் கூறலாம்!

—பி. வி. ஜி

## 10,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பின்றி உள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1973-74ல் 10,200 ஆசிரியர் பதவிகளைப் புதிதாகத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் ஹையர் கிரேடு பதவிகள் 500, செகண்டரி கிரேடு பதவிகள் 6,000, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 500, பி. டி. ஆசிரியர் பதவிகள் 1,200, கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் 2,000 ஆகும்.

இந்தியாவெங்கும் படித்து வேலை இன்றியிருப்பவர்களில் 5 இலட்சம் பேருக்கு 1973-74ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான திட்டத்தின்கீழ் இப்பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் முறையான ஆசிரியர் பதவிகளில் உள்ளோரைப் போலவே சம்பளம், அகவிலைப்படி முதலியனவற்றைப் பெறுவர். இத்திட்டத்துக்கு 1973-74ல் ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 150 லட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் 1974-75ம் கல்வி ஆண்டில் முறையான பதவிகளில் அமர்த்தப்படுவர்.

மேற்சொன்ன பதவிகளைப் பல்வேறு மாவட்டங்களிலுள்ள தலைமைக் கல்வி அலுவலர்களிடையே பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்தளிப்பார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும் பதவிகளை அம் மாவட்டத்தில் பல்வேறு வகை நிருவாகங்களின்கீழ் (அரசு, உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் நிருவாகங்கள்) உள்ள பள்ளிகளுக்குத் தலைமைக் கல்வி அலுவலர் பகிர்ந்தளிப்பார். ஆசிரிய—மாணவர் விகிதப்படி எவ்வெப்பள்ளிகளுக்குக் கூடுதல் பதவிகள் மிகவும் தேவையோ அவற்றுக்கு அப்பதவிகள் கிட்டும்.

ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர் திட்டம் என ஒன்று 1970 அக்டோபர் முதல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்துள்ளது. அத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சுமார் ஆறாயிரம் பேரில், சுமார் 1,800 பேர் தவிர மீதியுள்ளோர் அனைவரும் ஏற்கெனவே முறையான பதவிகளில் நியமிக்கப்பட்டு விட்டனர். அந்த 1,800 பேருக்கும் பயன் அளிப்பதற்காகவென்றே இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளுள், 1,800 பதவிகள் ஒதுக்கப்பட்டு அந்த 1,800 தொழில் பழகு ஆசிரியர்களும் இனிமேல் முறையான ஆசிரியர்களைப்போல முழுச் சம்பளம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அந்த 1,800 பேரும் ஹையர் கிரேடுக்கு மாதம் ரூ. 100, செகண்டரி கிரேடுக்கு மாதம் ரூ. 125, பி.டி. க்கு மாதம் ரூ 175 என்ற மொத்த ஊதியம் மட்டுமே பெற்று வந்துள்ளனர். இனி அவரனைவரும் முழுச் சம்பளம் (அகவிலைப் படி முதலியன உட்பட) பெறுவர்.

# பருத்திப் பயிர்ச் செல்வமதை பலியிடலாமோ செம்பேனுக்கு!


# தெளித்திடுவீர் கெல்தேன் அளித்திடுவீர் பாதுகாப்பு!



பாழ்படுத்தும் செம்பேன்களுக்குப் பலியாகாமல் பருத்திப் பயிருக்குப் பழுதற்ற பாதுகாப்பை அளிப்பது இண்டோ:.பில் கெல்தேன்.

பயிர்களை எவ்வகையிலும் பாதிக்கா-மல், செம்பேன்களை அழித்து, நீடித்திருந்து பயிரை காக்கும் திறனுள்ளது. முதல் தெளிப்பிலேயே செம்பேன்களை முற்றிலும் ஒழித்துக் கட்டும் கெல்தேனின் பலன் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்கும் தன்மை வாய்ந்தது. உங்கள் தேவைகளுக்கு இண்டோ:.பில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்ளுங்கள்.



இண்டோஃபில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு

இண்டோஃபில்
கெமிக்கல்ஸ் லிமிடெட்,
பம்பாய்-25

® கெல்தேன் மற்றும்
:.ப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ. எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

HF 6319

# இந்தியப் பொருளாதாரத் துறையில் — புள்ளியியலின் சிறப்பு !

ச.ரா.ஜெயவேலு
புள்ளியியல் இயக்குநர்

திருத்தகு தெய்வத் திருவள்ளுவர், மக்களெல்லாம் இன்புற்று வாழ உறுதியெனப் புகர்ந்தவை அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலாம். இவற்றுள் 'நாடு, பொருள், செயல் வகை, ஒழிபியல், நல்குரவு முதலிய அதிகாரங்களை உள்ளடக்கிய பொருட் பாலினடிப்படையில் பொதுவாகப் பொருளாதாரம் அமைந்துள்ளதெனலாம். இஃது சமூகத்திலுள்ள தனி மனிதனுடைய உடைமைகள் மட்டுமின்றி பொது உடைமைகளைப் பற்றியதுமாகும்.

ஒரு நாட்டின் பொருளாதார நிலை அந்நாட்டின் இயற்கை வளம், உற்பத்தி, மக்களது தொழில் வகை, மக்கள் தொகைச் செறிவு, தனி நபர் பகிர்வு இவற்றின்பால் பெருமளவு சார்ந்திருக்கும்.


33 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 55 கோடி மக்கட்தொகையும் கொண்ட நம் இந்திய நாடு ஒரு உபகண்டம் என குறிப்பிடப்படுகிறது. இப்பெரும் பரப்பில் நிலம், நீர், குளிர்-வெப்பநிலை பருவ காலங்கள், மழையளவு மற்ற இயற்கை வளங்கள், விளைபொருள்கள் தொழில் முதலிய உற்பத்தி, அவற்றின் பகிர்மான அளவு, இவற்றில் மட்டுமின்றி, வாழும் மக்களது சமுதாய அமைப்பு, மரபு, பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றிலும் வேறுபாடுகள் நிறைந்துள்ளன. எனவே பொருளாதார நிலையும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா மக்களுக்கும் ஒரே அளவு சமச்சீராக அமையவில்லை. ஆகவேதான் நம் நாட்டுப் பொருளாதார முன்னேற்ற முயற்சிகளில் சிக்கல்கள் மிகுந்து காணப்படுகின்றன.

எனினும் சுதந்தரத்திற்குப் பிறகு நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அடிப்படையில் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக்குறைந்தபட்ச அளவிலேனும் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்க பொருளாதார நடவடிக்கை (Economic Activity) எடுப்பதோடல்லாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை (Level of Economic Development) யைக் குறிக்கும் தேசிய வருமான உயர்வினையும் கருத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப இயற்கை வளங்களைப் பண்டங்களாக மாற்றியும், இந்த நிகழ்ச்சியில் மக்கள் சேவை அல்லது பணிகளைப் பயன்படுத்துவதாலும் (Production of Goods and Services) தேசிய வருவாய் (Net domestic Product) மாற்றியமைக்கப்படுகின்றது.

இம்மாற்றத்தின் அளவு மற்றும் வேகத்தைப்பொறுத்து பொருளாதார வளர்ச்சி அமைகிறது.

இந்தப் பொருளாதார நடவடிக்கையில் நாட்டின் செல்வ வளங்கள், மக்கட் தொகை, சமூக அமைப்பு, பொது சுகாதாரம், கல்வி வளர்ச்சி, விவசாயம், தொழிற்சாலைகளில் உற்பத்தி, கூட்டுறவு, போக்குவரத்து, விலைவாசிகள், வாணிபம், நிதியமைப்பு, நிதியியல், வங்கியியல், உபரி உற்பத்தி மூலம் பன்னாட்டு உதவி, அன்னியச் செலாவணி முதலியவற்றின் நிலை மற்றும் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள் அனைத்தும் அடங்கியுள்ளன.

சமுதாயத்தில் ஏற்படும் இத்தகைய பொருளாதாரச்செயற்கூறுகள், அவற்றால் மாறுதலடையும் இயற்கை வளங்களையும் மற்றும் இவற்றுக்குத் தொடர்பான விவரங்களையும் தொகுத்து, பகுத்து, வகைப்படுத்தி, இன்ன நடவடிக்கையின் காரணமாக இன்ன நிகழ்ச்சி, இன்ன அளவில் ஏற்பட்டதென முடிவு காண்பதோடு, வருங்காலத்தில் இன்ன அளவில், இன்ன மாறுதல்கள், இன்ன பலன்களை அளிக்கக்கூடும் என முடிவுகள் காண்பதற்கான வழி வகைகளடங்கியது புள்ளியியலாகும். அதாவது ஆங்கிலத்தில் (Statistics) என்பார்கள்.



இப்புள்ளியியல், தெரிந்த பொது ஞானத்தை எண் மதிப்பாக அல்லது புள்ளிகளாக வடித்துத் தருதல், மற்றும் அவற்றை ஆய்ந்து முடிவுகள் காணுதல் என்ற இரு பிரிவுகளையும் கொண்டதாகும். இப் புள்ளி விவரங்கள், அவற்றின் பாலெழுந்த முடிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவை எதைக் குறிக்கின்றன என்பதை நன்கு புரிந்துகொள்வதோடு அவற்றின் திட்பம், வரம்புகள் (Precision and Limitations) ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளல் அவசியம்.

உலக நடவடிக்கைகள் அனைத்தும் அலை மயமானவை என்பது ஒரு தத்துவம். அலை இயக்கங்களை மின்னியக்கங்களாக மாற்றி "Oscilloscope" என்னும் கருவியில் செலுத்தினால் அழகழகான வரி வடிவங்கள் காணலாம். இதேபோல் நாட்டின் பொருளாதாரத் தொடர்பு கொண்ட புள்ளி விவரங்களை மையமாகக் கொண்டு வரி வடிவங்கள் வடித்தால் எளிதில் புரியக்கூடிய புள்ளியிட்ட கோலங்களாக (Graphical representations) அமைவதை யாவரும் அறிவர்.

புள்ளியியல், இந்தியப் பொருளாதாரத்தில் எத்துணை முக்கியத்துவம் பெற்றுள்ளது தென ஒரு சில உதாரணங்கள் வாயிலாகப் பார்ப்போம்.

*1961* முதல் *71* வரையிலுள்ள பத்தாண்டுக் காலத்தில் இந்தியாவின் மக்கட்தொகை *44* கோடியிலிருந்து *55* கோடியாகப் பெருகியுள்ளது. இது ஒரு நிமிடத்துக்கு *40* குழந்தைகள் வீதமும், அதாவது மூன்று விநாடிக்கு இரண்டு குழந்தைகள் வீதமும் பிறந்து வருகின்றன என கணக்காகின்றது. இதே காலத்தில் உணவு தானிய உற்பத்தி *8* கோடி டன்னிலிருந்து *11* கோடி டன்னாக உயர்ந்துள்ளது என்றாலும் தலா நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவு தானியம் *187* கிலோவிலிருந்து *197* கிலோவாக மாறியது. இப்புள்ளி விவரங்களிலிருந்து மக்கட் தொகை, உணவு உற்பத்தி, தலா நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவு தானிய அளவு, இவை மூன்றிற்குமான வளர்ச்சி விகிதங்களை (Compound growth rates) கணிப்பதோடு, எதிர் காலத்தில் எந்த விகிதங்களில் இவை வளரக்கூடும், எந்த விகிதங்களில் வளர்ந்தால் நன்மை விளையும் என்று கணிக்க புள்ளியியல் முறைகள் பயன்படுகின்றன.

மேலும் தனி நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவின் அமைப்பு, (Composition) வெவ்வேறு தானியங்கள், பருப்பு வகைகள், இவற்றின் அளவைகளை இன்ன வகையில் மாற்றி அமைத்தால் சத்தான —சீரான உணவாக அமையும் எனவும் கணிக்கக்கூடும். சுருங்கக்கூறினல், சிக்கல்கள் அதிகமாக ஆக, அவற்றிற்கான முடிபுகள் காணும் பொறுப்பு ஒரு புள்ளியியல் வல்லுநர்க்கே உரியதாகி விடுகிறது.

பாரெங்கும் பரபரப்பினை எழுப்பியுள்ள விலைவாசிகளின் உயர்வு, வாழ்க்கைச் செலவின் ஏற்றம் ஆகியவற்றை அளவிடும்விலைக் குறியீட்டெண்கள் (Price Indices), வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் (Cost of Living Index Numbers) புள்ளியியல் முறைப்படி அவ்வப்போது கணிக்கப்படுகின்றன. பிந்திய குறியீட்டெண்ணின் அடிப்படையில்தான் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி (Dearness Allowance) நிர்ணயிக்கப்படுகின்றது.


உரிய புள்ளி விவரங்கள் தொகுக்கப் பெற்றால், விலைவாசிகள், உயர்வில் எவ்வளவு சதவிகிதம் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தினல் (அதாவது Deficit Financing னல்), பண வீக்கத்தினல், வங்கிகள் கொடுக்கும் வாங்கும் விகிதத்தினல், சேமிப்பு அளவினல், பொருள் உற்பத்தி அளவினல், அப்பொருள்களுக்கான தேவை அளவினல், ஏற்பட்டதென பகுத்துக்கூற முடியும்.

இதைக் கொண்டு இன்ன அம்சங்களின் எந்த அளவு திருத்தங்கள் (Correctives) மேற்கொண்டால் விலைவாசியினை இன்ன அளவு கட்டுப் படுத்தக்கூடும் என்றும் அறியக் கூடும்.

நாட்டின் பல்வேறு துறைகளில் எத்தனை நபர்கள் பணி புரிகின்றனர், எத்தனை இளைஞர்கள் வேலை வாய்ப்பினை நாடி நிற்கின்றனர், இவர்களுடைய கல்வி, பயிற்சி தகுதிகளுக் கேற்ப, பொருளாதார வளர்ச்சி பெறும் இன்னின்ன துறைகளில் முழு வேலை வாய்ப்பு கிட்டும் என்று புள்ளியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போல், உடை, வீட்டு வசதி போன்ற இதர தேவைகளில் ஏற்படும் மாறுதல்களுக் கேற்ப, உற்பத்தித் திறன் (Productivity) மொத்த உற்பத்தி முதலியன எப்படி மாற்றியமைக்க வேண்டுமென முடிவுகாண புள்ளியியல் ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

ஒரு தொழிலின் அமைப்பு (Structure of the Industry), உற்பத்தித் திறன், முதலீடு—உற்பத்தி விகிதம் (Capital out-put ratio), தொழிலாளி உற்பத்தி விகிதம் (Labour out-put ratio) முதலீடு தொழிலாளி விகிதம் (Capital Labour ratio) எனப் பல அம்சங்களையும் ஆய்வதுடன், இன்னின்ன வகையில் உற்பத்தித் திறன் மொத்த உற்பத்தி முதலியவற்றில் சிறந்த முன்னேற்றங் காணக்கூடும் என்பதனை அறியவும் புள்ளியியல் முறைகள் பயன்படுகின்றன.







இதே போல் இருபது இலட்சம் ரூபாய் முதலீடும் ஆயிரம் தொழிலாளர்களேயும்கொண்ட ஒரு தொழில் நிறுவனத்தின் ஐந்தாறு வெவ்வேறு பொருள்கள் உற்பத்தி செய்வதாகக் கொண்டால், இந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தியினைக் குறைந்த செலவில் கூடுமான உச்ச அளவுக்கு அதிகரித்தல் (Maximisation of out-put value with minimum in-put costs( எவ்வாறு இயலும் என்பதை (Linear Programming) முறையின் அடிப்படையில் நிர்ணயிக்கக் கூடும்.

*1960*-ல் *100* என்றிருந்த இந்தியத் தொழிலுற்பத்திக் குறியீட்டெண் (Index of industrial Production) *73*-ல் *200* ஆக உயர்ந்ததைக் கொண்டு வளர்ச்சி விகிதத்தை (Growth rate) கணித்து இந்த விகிதாசாரம் வருங்காலத்தில் எந்த அளவில் எத்தனை வருடத்திற்குள் தொழில் உற்பத்தி அடைந்தால் எந்த அளவு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடும், மற்றும் தேவைக்கு அதிகமான உற்பத்தி என்ன அளவு அந்நியச் செலாவணியீட்டப் பயன்படும் எனக் கணிக்கலாம்.

நாடு முழுமைக்குமான புள்ளி விவரங்கள், எளிதில் பெற முடியாத சமுதாய நலன், குடும்ப நலன் போன்ற பிரிவுகளில், திட்டங்கள் எந்த வகையில் பயனுடையதாக அமைந்துள்ளன என்பதை ஆய்ந்தறிய தேர்ந்தெடுத்த சமுதாயப் பொருளாதார மாதிரி ஆய்வு மூலம் (Socio-Economic Sample survey) சேகரிக்கப்பட்ட துல்லியமான புள்ளி விவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இவ்வாய்வுகளில் முடிவுகள் எத்தனை சதவிகிதம் நாடு முழுமைக்கும் பொருந்தும் என்பதும் நிர்ணயிக்கப்படுகிறது.

## மக்கள் தொடர்புத் திட்டம்.

''எங்கள் வீட்டுக் குழாயில் தண்ணீர் வரவில்லே!''

''எங்களுக்கு நல்ல பாதை இல்லே!''

''முதலில் எங்களுக்கு ஒரு காவல் நிலேயம் வேண்டும்!''

இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் ஏற்பட, ஓர் அரிய திட்டம் இன்று வீட்டு வசதி வாரியத்தினரால் திட்டப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் பெயர் 'மக்கள் தொடர்புத் திட்டம்'. இதற்கான தொடக்க விழா செப்டம்பர் 18-ஆம் நாள் அசோக் நகரில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடந்தது. திட்டத்தை வீட்டுவசதி, தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தின் நோக்கமென்ன ?

மக்களின் தேவைகளே நேரிலேயே அறிந்து நிறைவேற்றுவது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மின் வசதி, சாலே, போக்குவரத்து வசதி, தண்ணீர் முதலான வசதிகளில் குறைகள் இருந்தால் அவற்றைப் போக்கிட இந்தத் திட்டம் உதவும்.

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட இடங்களில் (1) வீட்டுவசதி வாரியம், (2) மாநகராட்சி, (3) மின்சாரம், (4) போக்குவரத்து ஆகிய துறைகளின் அலுவலர்கள் ஒன்றுக இருந்து, அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளேக் கேட்டறிந்து அந்தத் தேவைகளே நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளே எடுக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

இந்தப் பகுதி சம்பந்தப்பட்ட மனே ஒதுக்கீடு, மற்றும் ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட தனிப்பட்டோர் பிரச்சினேகளேயும், அந்தப்பகுதி சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினேகளேயும் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகள் உடனே எடுக்கவும், ஒன்றிரண்டு மாதங்களில் முடிவான பதில்கள் தரவும் இந்தத் திட்டம் வகை செய்யும்.

உதாரணமாக, அண்ணு நகரை எடுத்துக் கொள்வோம். இங்குக் கூட்டம் நடைபெறும் இடம் எது? நாள், நேரம் என்ன? என்பன போன்ற விவரங்களே முன்கூட்டியே அறிவிக்கின்றனர். இதனுல் மக்கள் கோரிக்கைகளுடன் குறிப்பிட்ட இடத்திற்கு வரஏதுவாகிறது.

இந்த நல்ல திட்டம் வெற்றியுடன் செயல்பட்டு, மக்களின் அன்றுடத் தேவைகளே நிறைவேற்றும் என்று உறுதியாக நம்பலாம்.



அரசாங்க வரவு செலவுத் திட்டங்களைச் சார்ந்த நிதியியல், நிலவரி, பாசன வரி, தொழில் வரி, விற்பனை வரி முதலியவை மூலம் பெறப்படும் வரவு சதவிகிதங்கள், ஒரு நபருக்கான தலா வரி அளவைகள் கணிப்பதுடன் இவ் வரவு செலவுகள் எந்தெந்த ஆக்கத்திற்கு என்னும் பொருளாதார ரீதியில் இன்னின்ன பாகுபாடுகளுக்கெனவும் பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. (Functional and Economic classification of Budgets).

நாட்டில் புழங்கும் ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், இவற்றின் மதிப்பு, வங்கிகளின் வரவு, செலவு மற்றும் இலாப நட்டக் கணக்குகள், இவ்வங்கிகள் இன்னின்ன துறையில் எந்த அளவில் உதவியளித்து வருகின்றன என்ற விவரங்களை ஆராய்ந்து இன்ன மாற்றங்கள் மூலம் குறிப்பிட்ட துறைகளில் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடும் என்று அறியப் படுகின்றன.

பலதரப்பட்ட மக்கட் தொகுதிகளில் நாட்டின் மொத்த வருவாய் எப்படி பகிர்ந்துள்ளது (Income Distribution) என்பதனை ஆய்ந்து, அதனை எப்படிமாற்றியமைத்தால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிக வேறுபாடுகளின்றி ஓரளவு சீராக அமைக்கலாம் என்பதற்கான வழி வகைகள் காணப் புள்ளி விவரங்கள் இன்றியமையாததால், தேசிய மாதிரி ஆய்வின் மூலம் வருமான அடிப்படையில் அல்லது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் மக்களுள் இத்தனை நபர் அல்லது சத விகிதத்தினர் வறுமைக் கோட்டின் (Poverty Line) கீழ் உள்ளனர் என்று ஆய்ந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி வகைகள் வகுக்க புள்ளியியல் பயன் படுகிறது.

அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கு அவசியமான வாணிபத் துறையிலே நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி அளவைகள் அவற்றின் அமைப்பு (Structure of the Import and Export Trade) மற்றும் விலைவாசிகள் போன்ற புள்ளிவிவரங்கள்அவ்வப்போது தொகுக்கப்பட்டு இவற்றுடன் சார்ந்த வாணிபம், போக்குவரத்துத் துறைகள் பற்றிய புள்ளி விவரங்களுடன் பயன் தரும் வகையில் ஆய்விடப்படுகின்றன.


நாட்டின் வளம் செழிக்க மேற்கொள்ளப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்கள் (Statistics of past trends) வளர்ச்சி விகிதங்கள், மற்றும் எதிர்காலத்தில் இன்ன வகையில் இன்ன துறையில் வளர்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கைகளைக் கொண்டு மதிப்பீடுகள் (Projections) செய்யப்படுகின்றன.

எனவே, தொகுத்துக் கூறினால், ஒரு கட்டடத்துக்கு அடிக்கல் (Basement) எவ்வளவு முக்கியமோ அதுபோல நாட்டில் செயல்படுகின்ற திட்டங்களுக்கும் புள்ளி விவரங்கள் இன்றியமையாதனவாகும். அடிக்கல் உறுதியானதாகவும், செம்மையானதாகவும் இருந்தால் தான் அதன் மேல் எழுப்பப்படும் கட்டிடமும் உறுதியானதாகவும் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்கும். ஆக அடி மட்டத்திலிருந்து தொகுக்கப்படுகின்ற புள்ளி விவரங்கள் விஞ்ஞான ரீதியில் (Scientific Method) தொகுக்கப்பட்டவையாகவும், சரியான விவரங்களை உள்ளடக்கியவையாகவும் இருத்தல் மிக அவசியம். திட்டங்களில் எதிர்பார்த்த பலன்கள் எந்த அளவு கைகூடின என்று அறிய தொடர் மதிப்பீட்டு ஆய்வுகளும் (Concurrent Evaluations), செய்திறன் முறை வரவு செலவு திட்டமும் (Performance Budgeting) இன்னும் இவை போன்ற நுண்ணிய முறைகளை மேற்கொள்ள துல்லிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்பது நன்கு புலனாகும். மற்றும் ஒரு மாநிலம் முன்னேறியுள்ளதா, அல்லது பின் தங்கிய நிலையில் உள்ளதா என்று நிர்ணயிக்கவும் புள்ளி விவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இப்படிப் பல வெவ்வேறு அம்சங்களுக்கான புள்ளி விவரங்கள் ஒவ்வொரு தனி நபர், குடும்பம், கிராமம், மாநிலம் மற்றும் தேசிய மட்டங்களில் தொகுக்கப்பட்டு வருகின்றன.

எனவே 'புள்ளி விவரம்' சமுதாயத்துக்கு நல்ல சேவை புரியும் ஒரு சிறந்த சாதனம் அல்லது கருவியாகும் என்று சொல்லவும் வேண்டுமோ!



பல குடும்பங்கள் சேர்ந்தது தான் ஒரு பெரிய சமுதாயமாகும். ஆகவே சமுதாயம் முழுமைக்கும் சீரான வாழ்வமைய திட்டம் வகுக்கும் போது குடும்பத்தில் உள்ளோருக்கான வரவு செலவுக் கணக்கு (Family Budget) கிராம, ஊராட்சி ஒன்றிய உற்பத்தித் திட்டங்கள் (Village and Panchayat production Plans) மற்றும் மாநில தேசிய திட்டங்களுக்கான விவரங்கள் முதலியவற்றை நாடி, அரசாங்கக் களப் பணியாளர்கள் (Field Staff) குடும்பத் தலைவரையோ அல்லது உங்களில் எந்த ஒரு நபரையோ அணுகும் போது, ''அரசாங்கத்துக்குப் புள்ளி விவரங்கள் கண்களாகவும், காதுகளாகவும் இருந்து பயன் படுகின்றன (Statistics are the eyes and ears of the Government) என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு எந்தவித ஐயப்பாடுமில்லாமல் துல்லியமான விவரங்களை அளிப்பது நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய நலத்துக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்.



# உலகில் இரண்டு கிளிகள்




டி.என்.சுகி சுப்பிரமணியன்

## 13 அஞ்சலைக்கு ஆபத்து

மனிதனுக்கும் மற்றைய பொருளுக்கும் சமுதாயத்தில் மதிப்பீட்டு முறையில் மாறுபாடுகள் உள்ளன. அதிலும் அந்த மனிதன் ஏழையாகவோ இயலாமை உள்ளவனாகவோ இருந்து விட்டால் அதோ கதிக்கு ஆளாக வேண்டும்.

'ஆன்மா' என்றும் 'எல்லோரும் இந்த நாட்டில் சமம்' என்றும் பொது மேடைகளிலும் கோவில் பிரகாரங்களிலும் பேசப்படலாம். நடைமுறை வாழ்க்கை வேறு; ஏட்டு முறை வாழ்க்கை வேறு என்று சொல்லுவது போல அஞ்சலைக்கு ஒரு சோதனை மீண்டும் வந்தது. தங்கத்திற்கும் தாமரைக்கும் வராத சோதனை அவளுக்கு வந்தது. முத்துக்கும் சாமரத்துக்கும் வராத சோதனை அவளுக்கு வந்தது.

தாமரை தான் பிறந்த மண்ணை நோக்காது விண்ணை நோக்குவதும், தங்கம்தான் பிறந்த அழுக்கை எண்ணுமல் ஆரணங்குகள் கழுத்தை வலம் வருவதும் நாகரிகம் என ஒப்புக் கொள்கிறோம். முத்து தான் பிறந்த நாற்றம் பிடித்த சிப்பியை எண்ணுமல் மூன்று இலட்சத்திற்கு அதிபதியான ஒருவன் வீட்டுக்குள் பாதுகாவலாய் வந்து அமர்கிறது. சாமரத்தை 'மயில்' என்று ஒதுக்காமல் அதற்குக் கோவில் சிலை — சிற்பங்கள் — மடாதிபதிகள் வரவேற்புத் தருகின்றனர்.

புனுகும் சவ்வாதும் மிருகங்கள் தந்தவை; தேனே, தேனீயின் எச்சல்! ஆனாலும் ஏழைகள் எங்கிருந்தாலும் என்றும் ஏழைகளே. அவர்கள் மனிதர்கள் இனத்திலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள், இச் சூழ் நிலை நிறைந்த எண்ணத்தோடு முதலாளி முத்தையா முனைப்பாக நினைக்கிறார்! நிமிர்ந்து நிற்கிறார்.

வக்கீல் மணிவாசகன் அதற்கு ஆதரவு தருகிறான். சென்பகா ஆலையின் முதலாளியைச் சோதிப்பதற்காகவோ, இல்லை ஏழை அஞ்சலையை இன்னும் ஏழ்மைக் குழியில் தள்ளவோ, மருந்தகத்திற்குள் அனுமதிக்கப்பட்டிருந்தாள், அஞ்சலை.

மில்லில் வேலை பார்க்கும் போது அவள் வலக்கால் மாட்டிக் கொண்டு எலும்பு முறிந்து விட்டது. அவள் ஆஸ்பத்திரிக்குள் வைத்தியம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாள். டாக்டர் நர்மதை தன்னால் இயன்ற திறமையுடனும், அஞ்சலையின் குடும்பத்திடம் ஏற்பட்ட அனுதாபத்துடனும் வைத்தியத்தைச் செய்து கொண்டிருந்தாள்.

அதே சமயம்—

வக்கீல் மணிவாசகன் வீட்டில் முதலாளி முத்தையா காரில் வந்து இறங்கினர். அஞ்சலை அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட விவரம் முதலாளி போன் வழியே அறிந்திருந்தார்.

"வாருங்கள் முதலாளி!"

"பட்ட காலிலே படும், கெட்டவர்களே மீண்டும் கெடுவார்கள்" என்னும் பல்லவியுடன் உள்ளே நுழைந்தார்.

''சட்டத்தை எப்படிவேண்டுமானாலும் பேச வைக்கலாம். நீங்கள் முதலில் கவலையை விடுங்கள். தாகத்திற்கு ஏதாவது சாப்பிடுங்கள்'' என்று சமையல்காரனைச் சிற்றுண்டி கொண்டு வரச் சொன்னான். அவர் உயிரையும் மானத்தையும் பிடித்துக் கொண்டு பதைபதைக்க வந்திருக்கிறார்! இவனோ அவரைப் பதறாமல் சிதறாமல் உண்ணச் சொல்கிறான்.

''முதலாளி உங்களுக்குப் பணம் பண்ணும் கலை தெரியும். நீதி-நிர்வாகம் பற்றிய கருத்தும் தெரிந்திருக்கும். தன் கட்சிக்காரனைக் காப்பது வக்கீல் தர்மம். நீதிபதியின் தர்மம் வேறு. நீதியைக் காப்பது அவர் தருமமன்று; அவர் இரு வக்கீல்களின் வாதத் திறமையில் ஒருவரை ஆதரிக்கிறார். ஒருவரைத் தள்ளிவிடுகிறார்! அதாவது வக்கீல்களைச் சராசரியாக நீதிபதி ஆதரித்துக் கொண்டு வருவார். அதனால் உங்கள் வழக்கைப் பற்றிய முடிவு எதுவாக இருந்தாலும் நான் வெற்றி பெறமுடியும் அல்லது மேல் கோர்ட்டில் வெற்றி பெறமுடியும்!''

அஞ்சலை அடிபட்டு, ஆலையின் மருந்தகத்தில் இருப்பதைத் தொழிற்சங்கத்தலைவர் தமக்கு ஃபோன் பேசியதாகச் சொன்னார்.

''இவ்வளவுதானே! இங்கே டாக்டர் யார்? உங்கள் வேலையாள். இங்கே வக்கீல் யார்? உங்கள் வேலையாள்!''

''அதனால்தான் நான் கவலைப்படுகிறேன். என் வழக்கையும், என் மீது ஏற்படும் நஷ்ட வழக்கையும் தீர்ப்புச் சொல்லும் பொறுப்பு, கணவனுக்கும் மனைவிக்கும் ஊடாக இருக்கிறது. அதனால் பயப்படுகிறேன்''

''என்னிடம் வழக்கை ஒப்படைத்து விட்டீர்கள். கவலை என்னுடையது. நான் நர்மதையிடம் சொல்லி உங்களுக்குச் சாதகமாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்''.

முதலாளி முத்தையா பணத்துக்குப் பயந்தவர் அல்லர். தமது மானம் மரியாதையென்னும் ஜபர்தஸ்துகளை விட்டுக் கொடுக்காத காரியக் கழுகு.

''மோட்டாரோட்டி சண்முகம் திமிர் பிடித்து லஞ்சம் பெறுவதற்கு என்னிடம் மறுத்தான். அவன் உதவி கேட்ட காலத்தில் நான் பிகு பண்ணிக் கொண்டேன். தொழிற்சங்கத் தலைவன் பேசுவதைப் பார்த்தால் ஐயாயிரம் ஆறாயிரம் நாம் நஷ்ட ஈடு கொடுக்கும்படி ஏற்படலாமாம். நான் முதலாளி, ஐந்து இலட்சம் பத்து இலட்சம் செலவு செய்வேன். ஆனால் தொழிலாளிக்கு நஷ்ட ஈடு கேட்டு ஒரு தம்பிடி கொடுக்க மாட்டேன்''.



''நீங்கள் கொடுக்கும் நிலைமையை உண்டு பண்ணினால் உங்கள் சட்ட ஆலோசகன் என்ற பதவியும் அதற்குரிய சம்பளமும் எனக்கு எதற்கு?''

முதலாளி முத்தையா தமது தோல் பையைத் திறந்து ''மணிவாசகன், யாரைச் சரிக்கட்ட வேண்டுமோ, எப்படி சரிக்கட்ட வேண்டுமோ நீங்கள் செய்யுங்கள். இதோ இருபதினாயிரம் ரூபாய் இருக்கிறது. தொழிலாளிக்கு நஷ்ட ஈடு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பானால் என் முதலாளித்துவப் பெருமை கரைந்த கற்பூரம் போல் ஆகிவிடும்'' என்று அலறினார். அவரது அந்தஸ்தைக் காப்பதில் அத்தனை அக்கறை!

''கற்பூரம் கரையாமல் இருக்க மிளகை உடன் வைப்பார்கள். மிளகுப் பொடியைத் தூவவேண்டிய இடத்தில் தூவி விடலாம். கட்சிக்காரரை




காப்பது என் கடமை. நான் உங்கள் வக்கீல்''

'பணத்தை எடுத்து உள்ளே வையுங்கள்''

பணத்தை எடுத்து உள்ளே வைத்தார். மணிவாசகன் அதே போன்ற தன் மனச்சாட்சியையும் பூட்டி வைத்துக் கொண்டார்.

''சாப்பிடுங்கள்!''

''உடனே நாம் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்'' என்று அவசரப்படுத்தினுர்.

''அத்தனை அவசரமா ?''

''உங்கள் மனைவி உங்களைப் போல பிடிவாதம் உள்ளவர். அதனுல் என் முன்னுல் நடக்க வேண்டிய பேரங்களை நடத்தி என்னைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு!''

மணிவாசகன் யோசித்தான். ஏற்கனவே சிறைச்சாலை சென்ற சண்முகம் கொதித்து எழுவான்; நஷ்ட ஈட்டுத் தொகை அதிகம் கேட்பான். தொழிற்சங்கத்து வழியே பெருந் தொல்லைகள் வரும். எனவே முத்தையா பயப்படுவதில் நியாயம் இருக்கிறது. `சண்முகத்தைக் கண்டு பயப்படுவதுபோல டாக்டர் நர்மதாவைக் கண்டும் பயப்படுகிறுர்! எனவே டாக்டர் நர்மதாவின் வாக்குறுதியைப் பெறுவது முதலுதவியாக இருக்கும்—இத்தனை யோசனைகளுடன் இருவரும் அவரது காரிலே ஏறி ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

# 14

## கடமைக்கு விழுந்த அடி

நர்சு தங்கம், டாக்டர் அறைக்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

''என்ன? தங்கம் என்ன வேண்டும்?''

''அஞ்சலைக்கு பிரக்ஞை வந்திருக்கிறது. அவள் உங்களுடன் பேசவேண்டுமாம்''

''இதோ வருகிறேன். அடிபட்ட முழங்காலை. எடுக்க வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்கிறேன். டாக்டர் வத்சலாவிற்கு போன் பேசினேன். அவள் பதில் கூறுவதாகச் சொன்னாள். நீ போன் பக்கத்தில் இரு. நான் அஞ்சலையைப் பார்த்துவிட்டு வருகிறேன். டாக்டர் வத்சலா கிடைக்காவிட்டால் டாக்டர் சரளாவுக்குப் போன் பேசு!''

''அஞ்சலையின் கால் அத்தனை மோசமாக இருக்கிறதா?

''ஆமாம்''

அஞ்சலை துடித்துக்கொண்டு கிடக்கும் இடத்திற்கு டாக்டர் நர்மதை வந்தாள். அந்த நிலைமையிலும் அழுகையிலும் அதிக சிரமத்தோடு கை தூக்கிக் கும்பிட்டாள். கண்ணீர் மல்க அழுதாள்.

''அழாதே, இருக்கும் பலமும் போய்விடும். உன்னைக் காப்பாற்றுவது என் கடமை''

''டாக்டரம்மா! எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்''

''உன் நன்மைக்கான நல்லதைச் செய்வேன்''

''நான் ஆறடி உயரம் இருக்கேன். முப்பது வருஷமா உழைக்கிறேன். என்னால் தினம் தினம் பாடுபட்டும் என் மகள் கனகாம்பரத்துக்குக் கண்ணாலம் செய்யமுடியவில்லை அதனால்....''

அஞ்சலை என்ன சொல்லப் போகிறாள் என்பதை நர்மதை கேட்க ஆவலாக இருந்தாள். ஓரளவு புரிந்தாலும் அஞ்சலைக்கு நியாயம் கிடைப்பதையும் அவள் உயிர் பெற்று எழுவதையும் டாக்டரது உள்ளம் விரும்பிக்கொண்டிருந்தது.

நர்சு தங்கம் எட்டிப் பார்த்தாள்.

''டாக்டர் வத்சலா வீட்டில் இல்லை. டாக்டர் சரளா உடனடியாக வந்துகொண்டிருக்கிறாராம்...''

''வரட்டும். டெலிபோன் பக்கம் நீ நில்''

நர்சு தங்கம் போய்விட்ட பின்பு, டாக்டர் நர்மதை ''உன் மகள் கனகாம்பரத்துக்குக் கண்ணாலம் செய்யப் பணம் இல்லை-அப்புறம் என்ன சொல்ல வந்தாய்?'' என்று நினைவூட்டினாள்.

அஞ்சலைக்கு அழுகை வந்தது. அவள் நெஞ்சம் விக்கித் தவித்தது. தன் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுடுமே என்ற கவலையும் இணைந்தது.

''அதனாலே! டாக்டரம்மா நீயும் உன்னுடைய பிள்ளை குட்டியுமாய் நன்றாக நீங்கள் இருப்பீர்கள். என் மகள் வாழ்க்கை உன் கையிலும் என் முழங்காலிலும் இருக்கிறது. என்னைவிட்டு ஒரு முழங்காலு போயிட்டா ... எனக்கு நஷ்ட ஈட்டுப் பணம் இரண்டாயிரம் மூவாயிரம் கிடைக்கும்! நான் சம்பாதிக்க முடியாத பணத்தை என்னைவிட்டுப் போகிற கால் சம்பாதிக்கும் படியாக எனக்கு உதவி செய்! டாக்டரம்மா !''

இதனைக் கொடுமை நிறைந்த வேண்டுகோள் என்றும் தாய்மை நிறைந்த தவிப்பு என்றும் கொள்ளலாம்!

''அஞ்சலை! உனக்கு நஷ்ட ஈட்டுப் பணம் கிடைக்குமோ கிடைக்காதோ! உன் உயிர் காப்பாற்றப்பட வேண்டும். அதுதான் நான் செய்யக்கூடியது!

டாக்டர் வார்த்தையை முடிக்குமுன் ஒட்டமும் பதற்றமும் நிரம்பியவளாக வந்த நர்சு தங்கம் ''டாக்டரம்மா! வக்கீல் ஐயா, முதலாளி ஐயா இருவரும் உங்கள் அறையில் இருக்கிறார்கள்!'' என்று கூறினாள்.

''இருக்கட்டும்''

டாக்டர் சரளா அங்கே வந்து கொண்டிருந்தாள். ''வணக்கம் டாக்டர் நர்மதா' என்றவளுக்கு ''உங்கள் உதவி இப்போது தேவை டாக்டர்'' என்றாள் நர்மதை.

''என்ன செய்ய வேண்டும்?''

அஞ்சலையின் பக்கம் சுட்டிக் காட்டினாள். அவசரமாக ஆபரேஷன் செய்யணும்'' என்றாள். மற்றைய நர்சுகள் சிட்டாகப் பறந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அஞ்சலை ''டாக்டரம்மா என்னை விட்டு அறுபட்டுப் போகும் கால் என் மகளுக்கு மாங்கல்யம் வாங்கித் தரப் போவுது. பெற்ற தாய் தர முடியாத வாழ்க்கையை இழக்கும் எனது கால் தரப்போவுது' என்று புலம்பினாள். அதிலும் ஒரு மகிழ்ச்சி.

''அஞ்சலை! உன் குடும்பத்தில் ஆயிரம் பணக் கவலை இருக்கலாம்; அதன் வரவு செலவைச் சரிக்கட்ட டாக்டராராக நான் பணிபுரியவில்லை. புரையோடின கால் உன் உயிருக்கு ஆபத்து. அதை நினைச்சுத்தான் ஆபரேஷன் செய்யறேன்''.

''நீங்க வாழ்க''

டாக்டர் தனது அறையில் மில் முதலாளியும் கணவன் மணிவாசகனும் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தும், அங்கு அவள் நகரவில்லை.


ஆஸ்பத்திரி வார்டுக்குள் இருந்த டெலிபோன் கிணுகிணுத்தது. அதனை நர்சு ஒருத்தியெடுத்துக் கேட்டாள்.

''டாக்டர் நர்மதா ரொம்ப கவலையோட இருக்காங்க ... நீங்க யார்?''

''நான் அவள் கணவன் மணிவாசகன். பேசச் சொல்லம்மா நர்சு''

''எங்கிருந்து பேசுறீங்க?''

---



ஒரு கணத்தில் ஒளிர்வு பெறும் அறிவு சில வேளைகளில் ஒருவரது முழு வாழ்நாள் அனுபவத்திற்கு ஈடாகும்.

—ஆலிவர் வெண்டல்ஹோம்ஸ்.




அரசு ஊழியர்களுக்கு விழாக்கால முன்பணமாக (Festival Advance) இதுவரை ரூ. 150 கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு அக்டோபர் முதல் இந்தத் தொகையைத் தமிழ்நாடு அரசு ரூ. 200 ஆக உயர்த்தியுள்ளது.

''ஆஸ்பத்திரி மெயின் அறையில் உட்கார்ந்து பேசுகிறேன். இங்கு முதலாளியும் இருக்கிறார்''.

''இதோ பேசச் சொல்றேன்'' என்ற நர்சு, ''டாக்டர் உங்களுக்கு ஒரு சேதி, உங்கள் கணவர்'' என்று ஆரம்பித்தாள்.

''தெரியும். ஆஸ்பத்திரி அறையிலிருந்து பேசுகிறார். நீ போனைக் கீழே வை. நோயாளி அஞ்சலையை ஆபரேஷன் தியேட்டருக்குத் தள்ளிக் கொண்டு போ...வேண்டியதைக் கவனி''

நர்சு பயந்துகொண்டு போய் விட்டாள்.

''அலோ'' என்றாள் டாக்டர்.

''நான் தான் உன் ... ''

''புரிகிறது குரல். நான் முக்கியமான காரியமாக இருக்கிறேன்''.

''நானும் முக்கியமான காரியமாக உன் அறையில் காத்து இருக்கிறேன். அடிபட்டு வந்த அஞ்சலைக்கு....''

''அவளோட காலை எடுத்தாக வேண்டும்''.

''கால் தானே! எடுக்க வேண்டாம்''.

''டாக்டருக்கு யோசனை சொல்ல வேண்டாம். அந்த உழைப்பாளி பிழைக்க வேண்டும்''.

''சட்ட ரீதியாகக் கொடுப்பதை சம்பிரதாயமாகக் கொடுத்துவிடலாம். சம்திங்காகக் கொடுத்துவிடலாம்.

''இது அக்கிரமம். அநீதி. அவள் செத்துவிட்டால்?''

''நான் உன் கணவன் — என் முதலாளி என்னிடம் வழக்குத் தந்தவருக்காக வாதாடுகிறேன். இரண்டு நிமிடம் உனது அறைக்கு வந்துவிட்டுப் போ!''

''மன்னிக்கவும்.''

''இது உன் கணவனின் கட்டளை''.

''அது வீட்டில்! வாழ்க்கையில் என் கணவர்''.

''எனக்குள்ள மானம் மரியாதை . கௌரவம்?''

''அத்தனையும் காக்க வேண்டியவள் மனைவி. அதனை அறிந்து தான் பேசுகிறேன்''.

''அஞ்சலையின் காலையெடுக்க வேண்டாம்!....''

''காலை யெடுக்கா விட்டால் அவள் நாளை அல்லது மறுநாள் இறந்து போவாள்''.

''நான் கொடுத்த வாக்குறுதி எனக்கு முக்கியம்''.

''எனக்கு என் நோயாளியின் உயிர் முக்கியம்!''

''சட்டம் படித்த வக்கீல் நான் சொல்லுகிறேன். என் கௌரவத்தை யோசி. நான் அங்கு வருகிறேன்''.

''சமுதாயத்தின் பொறுப்புணர்ந்த டாக்டர் நான். தீர்மானித்துப் பேசுகிறேன். கௌரவம் தனியார் சொத்து இல்லை. அது சமூகத்தின் பொதுச் சொத்து. டாக்டர்கள் நீதி மன்றத்துக்குள் சாட்சியாக நுழைவதற்குச் சட்டம் அனுமதிக்கும். ஆனால் வக்கீல்கள், ஆப்ரேஷன் அறைக்குள் ஆலோசகர்களாக நுழைவதை ஒரு நாளும் எங்கள் தொழில் தர்மம் அனுமதிக்காது'' என்று ஆத்திரத்துடன் பேசினாள்.

பிறகு ''நர்சு! யாரையும் வார்டுக்குள் அனுமதிக்காதே!'' என்றபடி ஆபரேஷன் தியேட்டர் நோக்கிப் போய்விட்டாள்.

அரை மணி வரை முதலாளி முத்தையாவும் வக்கீல் மணிவாசகனும் தனிமையை மென்று விழுங்கிக் கொண்டு இருந்தார்கள்.

அச்சமயம் டெலிபோன் கிணு கிணுத்தது. அது 'டிரங்' கால்' என்றும் அறிவித்தாள் டெலிபோன் பெண்மணி.

''ஹலோ !''

''டாக்டரம்மாவா !''

''டேய் பாபுவா !''

''யார் அப்பாவா! நீ எதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போனே ! உனக்கு உடம்பு சரியில்லையா அப்பா?''

''அம்மாவைப் பார்க்க வந்தேன்''

''ஆமா. இந்த வருஷமும் ராதா சித்தி நம்பர் பேப்பரில் வரவில்லையே அப்பா!''

''வரும் வரும். இன்னும் அஞ்சு வருஷம் பத்து வருஷம் படிச்சா அவள் நம்பர் பேப்பரில் வரும்''.

''நீயேன் அவளுக்குப் பாடம் சொல்லி வைக்கக் கூடாது?''

''நீ நன்றாகப்படி. இன்னம் அரை மணி கழிச்சு போன் பேசு.......... உன் அம்மா வருவாள்'' என்று போனை வைத்துவிட்டார்.

பாபுவுக்கு, அப்பாவின் எரிச்சலுக்குக் காரணம் தெரிய நியாயமில்லை.

முதலாளி முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்தார். அவர் கடிகாரம் நேரத்தை விரட்டிக் கொண்டிருந்தது.

டாக்டர் சரளாவை நன்றியுடன் அனுப்பிவிட்டுத் தனது அறைக்குள் நுழைந்தார். ஒரு மணி நேரத்திற்குப்பிறகும் அங்கே இருக்கும் இருவரையும் பார்த்தாள். கையின் ஈரத்தைச் சவுக்கத்தால் துடைத்தபடியே வந்து ''வணக்கம்'' என்றாள்.

''டாக்டர் நர்மதா! சென்பகா மில்லை என் தாத்தா ஆரம்பித்தார். அன்று தொட்டு இன்றுவரை எந்த தொழிலாளிக்கும் நஷ்ட ஈடு என்ற முறையில் ஒரு தம்பிடி கொடுத்தது இல்லை''.

''மன்னிக்கணும். இதுவும் உங்கள் ஆசுபத்திரி. நான் உங்கள் பணியாள்!''

''நீங்கள் பணிகிற ஆளாக இல்லையே. அஞ்சலையைப் பார்க்கலாமா?''

''இன்னும் மூன்று மணி நேரம் ஆகும் அவள்மயக்கம் தெளிய!''

''அப்படியானால் அவள் கால் ஆபரேஷனை முடித்து விட்டு வருகிறாயா?'' கடுமையாகக் கேட்டார் வக்கீல்.

மணிவாசகன் மூச்சிலும் நாக்கிலும் நாகப்பாம்பின் விஷம் சீறிக் கொண்டிருந்தது.

''உன்னிடம் கேஸைக் கொடுத்தது என் தப்பு! நீ கையாலாகாத வக்கீல்''

முதலாளி முத்தையா முள்வேலி கட்டத் தொடங்கினர்.

''எனக்கு ஏற்படும் தோல்வியை நீ வெற்றி மாலையாகச் சூட்டப்பபார்க்கிருய்! நான் அவமானப் படுகிறேன். நீ ஆனந்தப்படுகிருய்.

''இது கணவனுக்கும் மனைவிக்குமுள்ள பிரச்சினை இல்லை. இது மனச்சாட்சியின் பிரச்சினை''

''தூ! எனக்கு மனச்சாட்சியைப் பற்றி என் மனைவியே பாடம் சொல்லித் தர வேண்டுமா?''

''இது ஆஸ்பத்திரி, இங்கே மனைவிக்கும் கணவனுக்கும் விவாதம் நடக்கவில்லை!''

''பின்?''

''டாக்டருக்கும் வக்கீலுக்கும் நடக்கும் கௌரவப் பிரச்சினை!''

''ஏ! காளி......கர்வி. கல் நெஞ்சுக்காரி. கணவனை மதியாது பேசும் பத்திரகாளி.... என்பதாக என்றே நினைத்தேன். இன்று காளியாக காரியத்தை முடித்துவிட்டாய்!''

''நான் காளிதான். பிறர் தரும் லஞ்சத்திற்காக அக்கிரமத்தைத் தாங்காத காளி. உண்மைக்காக எதையும் தியாகம் செய்யுங்கள். ஆனல் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்வது தொழிலுக்குச் செய்யும் துரோகம்!

து..ரோ..கம்!

இச்சொல் பிறந்த மறுகணம் மணிவாசகன் இரும்புக் கரங்கள் பளார் பளார் என்று நர்மதையின் கன்னத்தில் பதிந்தன.

''படித்தவர் செய்யக்கூடிய செயலா?'' என்று கத்தினுள்.

இந்த எதிர்பாராத வினைவைக் கண்டு முதலாளி முத்தையா பயந்து போனர். டாக்டரையும் வக்கீலையும் விலக்கி வைத்தார்.

''அடித்தவர் வக்கீல்; அடிபட்டவள் டாக்டர்!'' என்று மீண்டும் உரிமை பிரச்னை எழுப்பினுள்.

''முதலாளி! நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஆசுபத்திரியைவிட்டு விலக மனுச் செய்தாள். இதனை விட்டு விலக்குவது நன்மையென்றேன்! என் ஆலோசனையை மீறி வேலையும் தகுதியும் தனி நர்சிங் ஹோம் நடத்தும் உரிமையும் தந்தீர்கள். அந்தப் பெருந்தன்மைக்குப் பரிசு பெற்றீர்கள் இன்று''

வக்கீல் மணிவாசகன் பேச்சிலும் ஆத்திரம். சொல்லிலும் நெருப்பு ஜுவாலை.

''வாங்க போகலாம். வக்கீல்! உங்களைக் குற்றம் சொல்லிப் பயனில்லை! பிடிவாதம் பிடிச்ச பொம்பளையை மனைவியாகக் கட்டின கணவன் என்னதான் செய்ய முடியும்? கண்ணகியும் நளாயினியும் பிறந்த நாட்டிலே கணவனை அவமானப்படுத்தும் பெண்களும் பிறக்கிறுங்க. வாங்க போகலாம்''.

வக்கீல் மணிவாசகன் அடிபட்ட நாகம் போன்று ''என்னை அவமானப்படுத்திய இந்த நிகழ்ச்சி என் நெஞ்சத்திலிருந்து மறையாது. இது ஆருத புண்....மாருத ரணம்....பழிவாங்குவேன்; பழிக்குப் பழி வாங்குவேன்!'' என்று கத்தியவனைத்த தள்ளிக்கொண்டு முதலாளி போய்ச் சேர்ந்தார்!

கையால் அடிபட்ட வேதனையைவிடச் சொல்லால் அடித்த வேதனை அதிகமாக இருந்தது. ''என் ஆலோசனையை மீறி வேலையும் தகுதியும் தனிநர்சிங் ஹோம் நடத்தும் உரிமையும் தந்தீர்கள். அந்தப் பெருந்தன்மைக்குப் பரிசு பெற்றீர்கள் இன்று'' என்ற சொற்கள் அத்தனையும் அவளை நோக்கி எரியப்பட்ட வெடி குண்டுகள்! நெருப்பு மழைக்குள் புழுவாக நனைந்து கொண்டிருந்தாள்.

டெலிபோன் மணி!

''ஹலோ! பாபுவா! என்னடா! ஓ! நான் ஒன்றும் அழவில்லையடா...... அழுகிறேனு? சே! ஜலதோஷம் பிடிச்சிருக்கு ..மல்லிகா சித்திக்கு உன் அப்பா ட்யூஷன் சொல்லி வைக்கணுமா?.... இப்பதான் மூன்ரும் வகுப்பில் பாஸ் செய்தியா? அதுக்கு உனக்கு மெடல் கிடைச்சுதா?.. எனக்குப் போடப் போறியா?....உன் அப்பாவின் கைக்குப் போடணும்..அவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கார்..நிஜமாக நான் அழவில்லையடா..சிரிக்கிறேன். உனக்காகச் சிரிக்கலே நிஜமாகச் சிரிக்கிறேன். உனக்கு நெய் லட்டு வேணுமா? ஒரு டின் அனுப்புறேன். உன் சிநேகிதன் முருகனுக்கும் சேர்த்து தேன்குழலா?....பார்சல் அனுப்புகிறேன்....''

> ஆடை கட்டி வந்த எண்ணமே மொழி.
>
> —சாமுவேல் ஜான்சன்.

குழந்தை பாபு டெலிபோன் பேசியதைக் கேட்டு அவள் உள்ளம் குளிர்ந்தாலும் தன்னைச் சுற்றி நெருப்புப் புயல் வீசுவதாக உணர்ந்தாள்.

என்னென்ன விளைவுகள் வீட்டுக்குள் உருவாகுமோ என்ற பயம் முளைவிட்டது! மூளையும் கலங்கியது.

டேலிபோன் மணியடித்தது.

ராதா பேசினுள். ''அக்கா! பாபு எனக்குக் கடிதம் போட்டிருந்தான். இந்தாண்டும் பெயில் ஆனதைக்குறித்து வருத்தம் தெரிவித்திருக்கிருன். அவன் நெய் லட்டும் தேன் குழலும் கேட்டிருக்கிருன். செய்து அனுப்பட்டுமா?'' என்ருள்.

''செய்! நான் இன்று வீட்டுக்கு வரவில்லை''

''ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய அவசியமா?''

''ஆமாம்''

''அத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் போன் செய்தார். ஒரு வாரம் வெளியூர் போகிருராம்!''


''போகட்டும்....நான் வீட்டிற்கு வந்தாலும் வருவேன்! என்று போனை வைத்தாள்.

அடிபட்டு சிவந்த கன்னத்தை—அதன் வீக்கத்தை ராதை பார்க்க வேண்டாம் என்று எண்ணினுள். பிறகு அவள் பார்க்கவேண்டுமென்று தன் மனத்தை மாற்றிக் கொண்டாள் டாக்டர் நர்மதை....

(வளரும்)

# என்ன வண்ணத்தில் எவர்சில்வர் வேண்டும் ?

வெள்ளை வெளேரென்று பளபளப்பாக உள்ள 'எவர்சில்வர்' பொருள்களைப் பார்க்கும் போதெல்லாம், "இந்த 'எவர்சில்வர்' பொருள்கள் பல வண்ணங் களில் வராதா?" என்ற ஏக்கம் சிலருக்கு ஏற்பட்டதுண்டு! அவர்களின் ஏக்கத்தைப் போக்கிட பிரிட்டன் முன்வந்துள்ளது!



அனைத்து நாட்டு 'நிக்கல்' நிறுவனம் உருவாக்கிய முறையின் அடிப்படையில், வண்ண வண்ண 'எவர்சில்வர்' உற்பத்தி பிரிட்டனில் துவக்கப்பட்டுள்ளது, புதிய முறையில் வண்ண 'எவர்சில்வர்' உற்பத்தி செய்யும் பிரிட்டன் நாட்டு நிறுவனத்தின் நிருவாக இயக்குநர், "வண்ண 'எவர்சில்வர்' வந்துள்ளதால், உருவம் அமைப்பவர்களுக்கும், கட்டடக் கலைஞர்களுக்கும் பெரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். சுவர் மற்றும் கதவில் பதிப்பதற்கு ஏற்ற அமைப்புகள், சாளரம் மற்றும் கதவின் சட்டங்கள், கடைகளை அழகுபடுத்தும் பொருள்கள் அடையாளங்கள், மேஜை-நாற்காலி போன்ற பொருள்கள், கலைப் பொருள்கள், மற்றும் சமைப்பதற்கு ஏற்ற பாத்திரங்கள் ஆகியவை செய்ய வண்ண 'எவர்சில்வர்' பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மிகவும் முக்கியமாக, 'கார்' உற்பத்தி செய்யும் தொழிற்சாலை களில் 'கார்' சக்கரங்களை அச்சுடன் இணைக்கும் இடத்தில் பொருத்தும் மூடி (Wheel hubs) தயாரிப்பதற்கு வண்ண 'எவர்சில்வர்' உதவிடும் என்பது திண்ணம்.





எவர்சில்வரை வண்ணப்படுத்தும் முறை, 'பர்மிங்காம்' என்ற இடத்திலுள்ள அனைத்து நாட்டு நிக்கல் ஐரோப்பிய ஆராய்ச்சி—மேம்பாட்டு நிறுவனத்தில் உருவாக்கப்பட்டது. விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு குழு ஆறு ஆண்டுகாலம் ஆராய்ச்சி செய்து, வண்ண 'எவர்சில்வர்' தயாரிக்கும் முறையை வகைப்படுத்தியது. அதன் பயனாகச் சிவப்பு, தங்கம், பச்சை, நீலம் ஆகிய நான்கு அடிப்படை வண்ணங்களிலும், அந்நான்கு அடிப்படை வண்ணங்களும் கலந்த பல்வேறு வண்ணக் கலவையிலும் 'எவர்சில்வர்' உற்பத்தி செய்ய வழி பிறந்துள்ளது. இம்முறை, எந்தவகை யிலும் எவர்சில்வரின் நல்ல தோற்றம், அரிப்பைத் தாங்கிக் கொள்ளும் தன்மை, நீடித்த உழைப்பு, எளிதில் பராமரிக்கும் தன்மை ஆகிய குணங்களைக் குறைத்துவிட வில்லை. மேலும், எப்படிப் பயன்படுத்தி னாலும் தேய்ந்து விடாத தன்மையைக் கொண்டது.



இம்முறையின்படி வண்ண அமைப்பு களும், உருவங்களும், வரைந்த ஓவியங் களையும், புகைப்படங்களையும் எவர்சில்வரின் மேல் அச்சிடலாம். முன்பே வண்ணத்தில் தயாரிக்கப்பட்டுக் கெட்டியாக்கப்பட்டுள்ள எவர்சில்வரை அதன் வண்ணங் கெடாமல் குறுகிய கோணத்தில் வளைக்கவோ அல்லது உருளைகளுக்கு இடையே செலுத்தி வளையாமல் கெட்டியாக்கவோ இயலும். அதுபோலவே, பல்வேறு உருவ அமைப்பு களுக்கு உட்படுத்தப்படக் கூடிய, வண்ணத் தில் தயாரிக்கப்படாத சாதாரண எவர் சில்வரையும், உருவ அமைப்பிற்குப் பிறகு வண்ணமடையச் செய்யலாம்.

எனவே, வண்ண வண்ண எவர்சில்வரில் தயாரிக்கப்பட்ட அழகுமிகு பொருள்களை நாம் விரைவில் வாங்கிப் பயன்படுத்திடலாம்!

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி. எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

**கிளைகள் :** நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

**கால் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) .. .. | 3$\frac{1}{4}$% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) .. .. | 3$\frac{1}{2}$% |

**சீசன் டெபாசிட்டுகள் :**

| | |
|---|---|
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் .. .. | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் .. .. .. .. .. .. | 4$\frac{1}{2}$% |

**பிக்சட் டெபாசிட்டுகள் :**

ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு :

| | |
|---|---|
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் .. .. .. .. .. .. | 5$\frac{1}{2}$% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் .. .. .. .. .. .. | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் .. .. .. .. .. .. | 6$\frac{3}{4}$% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் .. .. .. .. .. .. | 7$\frac{1}{4}$% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் .. .. .. .. .. .. | 7$\frac{1}{2}$% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் .. .. .. .. .. .. | 7$\frac{3}{4}$% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் .. .. .. .. .. .. .. | 8 % |
| நடப்பு கணக்கு $\frac{1}{2}$% சேமிப்பு கணக்கு | 4$\frac{1}{2}$% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு $\frac{1}{2}$% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

| எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., | வை. இராமலிங்கம், | தி. இராஜமாணிக்கம், |
|---|---|---|
| தலைவர். | செயலாளர். | நிர்வாக அலுவலர். |



# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத் தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங் களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர்ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்

FDSSPB 777TMA



## தஞ்சை மாவட்டத்தில்

# தாளடி மகசூல் பெருக...

தமிழ் நாட்டின் நெற் களஞ்சியமாய்த் திகழும் தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாகக் குறுவைப் பட்டத்தில் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கரிலும் சம்பா பட்டத்தில் 7 இலட்சம் ஏக்கரிலும், தாளடி பட்டத்தில் 4.5 இலட்சம் ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மகசூல் குறுவையில் ஏக்கருக்கு 1.5 டன்னும், சம்பாவில் 1.2 டன்னும் கிடைக்கும் பொழுது தாளடியில் ஏக்கர் மகசூல் ஒரு டன்னுக்கும் குறைவாகவே கிடைக்கும் நிலையினைக் காண்கின்றோம். ஏன் இந்த நிலை? தாளடியில் அதிக மகசூலைப் பெற முடியாதா? அதற்கான வழி என்ன என்ற கேள்விகள் எழுகின்றன. தாளடியிலும் அதிக மகசூலைப் பெற்றால்தான் உழவர்கள் அதிக வருவாய் பெற முடியும். எனவே, முதலில் தாளடியில் மகசூல் குறைவதற்கான காரணங்கள் என்ன என்பதனை ஆராய வேண்டும்.

**தாளடியில் மகசூல் குறையக் காரணங்கள் :**

(1) தாளடி நாற்றுவிடும் சமயம் மழை பெய்வதால், நாற்றுகளின் முளைப்பு பாதிக்கப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட பரப்பு நடுதலும், குறிப்பிட்ட இடைவெளி விட்டு நடுதலும், முடியாமல் போகிறது.

(2) தாளடி நாற்றங்காலில் நெற் பேன் தாக்குதல் அதிகமாகக் காணப்பட்டு நாற்றுக்கள் வெளுத்து, மெலிந்து, நடுவதற்கு உபயோகமற்றதாகப் போகின்றன.

(3) தாளடி நடவு காலத்தில் மழை பெய்து கொண்டிருக்குமாகையால், நடவு வயல் தயாரித்தல், நடவு செய்தல் முதலிய வேலைகள் சரியான நேரங்களில் செய்ய முடிவதில்லை.

(4) வயல்களில் நீர்த்தேக்கம் இருப்பதால் சரியான இடைவெளிகளில் இளம் நாற்றுகளை நட முடிவதில்லை.

(5) முதல் போக பயிருக்கு இயற்கை எரு இடுதலும், அடியுரமிடுதலும், மேலுரமிடுதலும் செய்கிறோம். ஆனால் தாளடிப் பயிருக்கு குறுவைச் சம்பா பயிர்களுக்கு இடுவது போல் தொழு உரம் ,கலவை உரம் அல்லது பசுந்தழை இட முடிவதில்லை.

(6) வயலில் நாற்று நடும் காலத்தில் அதிக நீரும், அதிக மழையும் இருப்பின் இரசாயன உரங்கள் அடியுரமாக இடுவதும் தடைபடுகிறது.

(7) மழையிருந்தால் சரியான காலத்தில் மேலுரமிடவும் முடிவதில்லை.

(8) பயிர்ப் பாதுகாப்பு முறையில் கண்ணோட்டம் செலுத்தும்போது தாளடிப் பருவம் பூச்சிகள், நோய்கள் பரவ மிகவும் ஏற்றதாக அமைந்து விடுகிறது. காற்றில் ஈர நிலை அதிகமாகி, வெப்பமும் குறைந்த நிலையில் பூச்சிகள், நோய்கள் விரைவில் பெருகிப் பரவப் பெரும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும், மழையினால் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த காலத்தில் மேற்கொள்வது கடினமானதால், பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை சரிவரக் கட்டுப்படுத்த முடியாமல் மகசூல் குறைகின்றது.

(9) தண்ணீர் வடிய வசதி இல்லாத இடங்களில், வயல்களில் நீர் தேங்கி, நட்ட பயிர் தண்ணீரில் மூழ்கிப் பாதிக்கப்பட்டு மகசூல் குறைய ஏதுவாகிறது.

மேற்கூறிய காரணங்களால் தாளடியில் மகசூல் குறைந்து விடுகிறது. அவைகளை முடிந்த அளவு நீக்கி, மகசூல் பெருக்கிட பின் கண்ட வழி முறைகளைக் கையாள வேண்டும்.

முதலில், தாளடிப் பயிருக்கு எந்த ரகம் ஏற்றது என்பதனை நாம் ஆராய வேண்டும். மேட்டூர் அணை ஜனவரி இறுதியில் மூடப்படுகிறது. இந்த நீர் ஜனவரி 15-ஆம் தேதி வரை பாசனத்திற்குக் கிடைக்கும். மேலும் அறுவடைக்கு முன் 15 நாட்களுக்கு நெற் பயிருக்குத் தண்ணீர் தேவையில்லை. இந்த அடிப்படையில் எந்தெந்த ரகங்களைப் பயிர் செய்தால் தண்ணீர்த் தட்டுப்பாடின்றி சாகுபடி செய்ய முடியும் என்பதைத் தீர்மானித்து, அதன்படி தாளடிக்கு ஏற்ற ரகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அடுத்து, தாளடிப் பயிருக்கு எப்போது நாற்று விட முடியும் என்பதையும் தாளடி நடவு எப்போது முடியும் என்பதையும் எண்ணி, ரகங்களின் வயதுக்கு ஏற்ப, எந்த ரகத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

ஆவணி 30-ஆம் தேதிக்குள் நாற்று விட்டு, ஐப்பசி 14-ஆம் தேதிக்குள் நட முடிந்தால் 165 நாட்கள் வயது கொண்ட கோ. 25 என்ற ரகத்தை 45 நாளில் நடலாம். அறுவடை மாசி 16-க்குள் வரும்.

புரட்டாசி 14-க்குள் நாற்று விட்டு, ஐப்பசி 14-ஆம் தேதிக்குள் நட முடிந்தால், 150 நாட்கள் வயது கொண்ட ஐ. ஆர். 5 அல்லது 140 நாட்கள் வயது கொண்ட 'பொன்னி' ரகத்தை 25 முதல் 30 நாளில் நடலாம். அறுவடை மாசி 6-க்குள் வரும்.

புரட்டாசி 15-ஆம் தேதியிலிருந்து புரட்டாசி 24-ஆம் தேதிக்குள் நாற்று விட்டு ஐப்பசி 15- முதல் 24-ஆம் தேதிக்குள் நட முடிந்தால் 140 நாட்கள் வயது கொண்ட பொன்னி அல்லது அம்பை 5 ரகத்தையும், 130 நாட்கள் வயதுடைய ஐ. ஆர். 20 ரகத்தையும், 135 நாட்கள் வயது கொண்ட கோ. 32 ரகத்தையும் 25 முதல் 30 நாட்களிலும் நடலாம். 'பொன்னி' அல்லது அம்பை 5 ரகம் மாசி 7-ஆம் தேதியிலிருந்து மாசி 16-ஆம் தேதிக்குள் அறுவடைக்கு வரும். ஐ. ஆர். 20 அல்லது கோ. 32, மாசி 3-ம் தேதியிலிருந்து மாசி 16-ஆம் தேதிக்குள் அறுவடைக்கு வரும்.


அடுத்து, புரட்டாசி 25-ல் இருந்து புரட்டாசி 29-க்குள் நாற்று விட்டு ஐப்பசி 25-ம் தேதியிலிருந்து ஐப்பசி 29-க்குள் நாற்று விட்டு நடுவதாய் இருப்பின் 135 நாட்கள் வயது கொண்ட கோ. 32 ரகத்தையும், 130 நாட்கள் வயதுடைய ஐ. ஆர். 20 ரகத்தையும், அம்பை 5 ரகத்தையும் 30 நாளில் நடலாம். அறுவடை மாசி 12-ம் தேதியிலிருந்து மாசி 16-ம் தேதிக்குள் வரும்.

வடிமுனைக் குழாய் அல்லது கிணறு மூலம் பாசனம் அளிக்க முடியுமெனின் ஐப்பசி 27 முதல் கார்த்திகை 15-க்குள் நாற்று விடுவதாய் இருந்தால் 95 நாட்கள்வயதுடைய அன்ன பூர்ணா (கல்சர் 28) ரகத்தைப் பயிரிடலாம். இது மாசி 3 முதல் 22 தேதிக்குள் அறுவடைக்கு வரும்.

இதுகாறும் கூறியவற்றை எண்ணி, ஆராய்ந்து ஏற்ற ரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்வதே சிறந்தது.

# சிற்றூர் செழித்திட...

தனியாகவோ அல்லது கூட்டாகவோ, பொருளாதாரத் தன்னிறைவு கொண்ட பிரிவுகளாகக் கிராமங்கள் உருவாக, காந்தியடிகள் விரும்பிய கிராம ராஜ்யத் திட்டத்திற்கு வலுவான அடித்தளம் உண்டு. அதில் அரசியல் விவேகம் பொதிந்து இருக்கிறது. லைனெல் கர்டிஸ் என்பவர் நமது கிராமங்களை 'மாட்டுச் சாணக் குவியல்' என்று வருணித்தபோது அவர் மிகவும் மனம் வருந்தினார். அந்தக் கிராமங்களை 'மாதிரி கிராமங்களாக' மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ''ஏழு லட்சம் கிராமங்களில் இந்தியா வாழ்கின்றது..............அத்தகைய கிராமங்களில் ஒன்றுக்குச் சென்று அங்குக் குடியிருக்க நான் விரும்புகிறேன். அதுவே உண்மையான இந்தியா; அது எனது இந்தியா'', என்று அவர் கூறினார்.



மனித சக்தியையும், இதர வசதிகளையும் உயர்ந்த பட்சம் பயன்படுத்தி, நன்மை பயக்கச் செய்வத் திட்டம் தீட்ட முனைய வேண்டும். கிடைக்கும் வளங்களைக் கொண்டு அதிக அளவு பயன் பெறுவதற்குக் கதர்—குடிசைத் தொழில்கள் போன்றவை உயர்ந்த கருவிகளாகும். இது தான் காந்தியடிகளின் வீர முழக்கமாகும்:—

''நகரங்கள், கிராம வழியிலான வாழ்க்கையை மேற் கொள்ள வேண்டும். கிராமங்களை வாழவைக்க வேண்டும் ............இந்தியக் கிராமவாசியின் நிலைமையைப் பொறுத்தவரையில், ஒரு மிகத் தொண்மையான பண்பாடு மங்கிய நிலையில் மறைந்து உள்ளது. துருவினை எடுத்து விடுங்கள்;—காலாகாலமாகப் பற்றியிருக்கின்ற அவனது வறுமையையும், அறியாமையையும் அகற்றுங்கள். நாகரிகமான பண்பாடுடைய தனித்த குடிமகனை நீங்கள் காணுவீர்கள். நிலையான உலகைச் சமைத்திட இந்திய நாகரிகம் முழு அளவில் தனது பங்கினைத் தந்திட வேண்டுமென்றால், இப்பெரிய மனித குலம் மீண்டும் வாழ்வு பெற வேண்டும். நமது கிராமங்கள் மீண்டும் முழுமையாக வளர்ச்சியடைந்தால், திறமையும், கலை நுணுக்கமும், உயர்ந்த வாழ்வும் கொண்ட மக்களுக்கு அங்கே பஞ்சம் இராது.''

கிராம வளர்ச்சியும் கிராமப் பொருளாதாரமும்தான் தேசியப் பொருளாதாரத்தின் அடிப்படை என்று வலியுறுத்தியதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. தனது எண்ணங்களிலும் குறிக்கோள்களிலும் அவர் ஆக்க பூர்வமாக இருந்தார். இந்திய நாடு முழுவதும் அவரது உள்ளத்தில் இருந்தது. இந்திய மக்களின் நலன்களுக்காகவே தனது எண்ணங்களை வெளியிட்டு வந்தார். சுற்றுப்புறச் சுகாதாரம், கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற சிறந்த கருத்துக்களின் அடிப்படையில் எழுந்த அவரது கிராம வளர்ச்சித் திட்டம் ஒரு தலை சிறந்த தத்துவமாகும். கிராமப் புறங்களிலிருந்து வந்து, மக்களின் வரிப் பணத்தில் பயின்று பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய மறுக்கின்றனர். மருத்துவ வசதி இல்லாத இடங்களுக்கு மருத்துவ வசதிகளை அளிப்பதற்கு நாம் மிகவும் முயற்சி செய்தாக வேண்டும்.

ஆளுநர் கே. கே. ஷா,

(சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில்).

தாளடி நடுவது தாமதமானல் வயதான நாற்றுக்களை நெருக்கி நடுங்கள். நாற்று விடும் சமயம் ஆங்காங்கே மழை பெய்து நாற்றுகள் பாதிக்க அதிக வாய்ப்பு உள்ளதால் தேவைப்படும் அளவை விட சற்று அதிகமான பரப்பளவில், அதிகமான விதையை விதைப்பது நல்லது. மேலும் நாற்றங்காலை மிக நல்ல முறையில் யில் மேடு பள்ளங்களில்லாமல் சமப்படுத்தி 4 அடி அல்லது 6 அடி அகலமுள்ள பாத்திகளாகப் பிரித்து, வடிகால்களும் அமைத்து நாற்று விட்டால் அதிகமான நீரை வடிப்பது சுலபமாகும். சாதாரணமாக ஒரு ஏக்கர் நட 18 கிலோ விதையை 12 செண்டு நாற்றங்காலில் நடலாம். தாளடிக்கு மேலும் அதிகப் பரப்பில் அதிக விதையை நாற்றுத் தயாரித்து நடுவது நல்லது. நாற்றங்காலுக்கு 2 வண்டி பண்ணை எருவோ கலவை உரமோ ஒரு வண்டி தழை எருவோ இடுங்கள்.

நடவு வயலுக்கு எரு இடுதல் பற்றி எண்ணும்போது ஏக்கருக்கு 5 வண்டி தழை எரு அல்லது 12 வண்டி பண்ணை எரு அல்லது கலவை எரு இட வேண்டும். ஆனால் நடைமுறையில் தாளடிப் பட்டத்தில் பண்ணை எரு, கலவை எரு முதலிய எருக்களை வயல்களுக்கு ஏற்றிச் சென்று, வயல்களில் போடுவது சிரமமாகயிருக்கும். சாலை ஓரங்களில் உள்ள வயல்களுக்கு மட்டுமே இவ்வாறு எருவிட இயலும். பசுந் தழை உரம் இடுவதின் மூலம் இந்தக் குறையை நிறைவு செய்யலாம். புங்கன், பூவரசு, கிளைரிசிடியா முதலிய தழைகளை வெட்டி எடுத்துச் சென்று ஏக்கருக்கு 5 வண்டி வீதம் போடலாம். கிளைரிசிடியா கன்றுகளை வயல் வரப்புகளில் 6 அடி இடைவெளியிட்டு நடுவதால் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான பசுந் தழையைத் தேவைப் படும்போது வெட்டி வயல்களுக்கு இடலாம். இது சிக்கனமானதாகும். சிறந்ததும் கூட!

நடவு வயலுக்கு உரமிட கடைசிஉழவுக்கு முன் 'ஐ.ஆர். 5' ரகத்திற்கு 54 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 44 கிலோ யூரியா, 42 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாக இடவும்.

'ஐ. ஆர். 20' ரகத்திற்கும், 'அன்னபூர்ணா' ரகத்திற்கும், 'பொன்னி' ரகத்திற்கும் அடியுரமாக 35 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 30 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். அம்பை 5, கோ. 32, கோ. 25 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 45 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 14 கிலோ யூரியா, 24 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். இதுவே குறைந்த செலவில் அதிகச் சத்துள்ள, எடுத்துச் செல்ல எளிதான உரக் கலவையாகும். ஐ. ஆர். 5 ரகத்திற்கு 30 : 25 : 25 என்ற அளவிலும் இரசாயன உரமிடலாம்.

நாற்றின் வயதைப் பொறுத்த வரையில் ஐ.ஆர். 20, ஐ. ஆர். 5, கோ. 32, அம்பை 5, ரகங்களை 25--30 நாட்களிலும், கோ. 25 ரகத்தை 40-45 நாட்களிலும் நட வேண்டும்.

## ஒரு மீட்டரில் 50 குத்துகள்.

நடவு செய்யும் பொழுது முக்கியமாக ஒரு சதுர மீட்டரில் கோ. 25 ரகத்திற்கு 33 குத்துக்களும், கோ. 32, அம்பை 5, ஐ. ஆர். 20, ஐ. ஆர். 5, பொன்னி ஆகிய ரகங்களுக்கு 50 குத்துக்களும் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய ஐ. ஆர். 20, ஐ. ஆர். 5, கோ. 32, அம்பை 5, ஆகிய ரகங்களை 8 அங்குலத்திற்கு 4 அங்குலம் (20 செ.மீக்கு 10 செ.மீ) இடைவெளி விட்டும், கோ. 25 ரகத்திற்கு 8 அங்குலத்திற்கு 6 அங்குலம் (25 செ.மீக்கு 15 செ.மீ.) இடைவெளியிட்டும் நடவு செய்ய வேண்டும். வளம் குன்றிய நிலங்களில் இதை விட நெருக்கமாகவும் நடலாம். அதாவது 8 அங்குலத்திற்கு 4 அங்குலம் என்பதை 6 அங்குலத்திற்கு 4 அங்குலம் அல்லது 7 அங்குலத்திற்கு 4 அங்குலம் என்றும் நடலாம். வயதாகிய நாற்றெனில் நெருக்கமாக மேலும் ஒரு நாற்று வைத்தும் நடலாம்

''பயிர் கிளைத்தால் ஆச்சு, களை கிளைத்தால் போச்சு'' என்ற பழமொழியைஉணர்ந்து நட்ட 20-25-வது நாளில் ஒரு முறையும் நட்ட 40-45 நாளில் ஒரு முறையும், ஆக 2 முறை நல்ல முறையில் களையெடுப்பது அவசியமாகும்.




தாளடி மகசூல் பெருக மேலுரமிடுதல் மிகவும் இன்றியமையாதது. மேலுரம் இடும் போது கீழ்க்கண்ட நுட்பங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பூக்கள் யாவும் மணியாக மாறவும், நெல் மணிகளின் எடை அதிகரிக்கவும் மேலுரமிடல் அவசியம். மேலுரமாகத் தழைச் சத்தைப் பயிர் சூல்கட்டும் பருவத்தில் அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன் இட வேண்டும். ஐ.ஆர். 5 ரகத்திற்கு 20 கிலோ தழைச் சத்தையும், கோ. 25, கோ. 32, அம்பை 5 ஆகிய ரகங்களுக்கு 14 கிலோ தழைச் சத்தையும் மேலுரமாக இட வேண்டும். ஐ. ஆர். 5 ரகத்திற்கும், பொன்னி ரகத்திற்கும் நாற்று விட்ட 80--85 நாட்களில் 45 கிலோ யூரியாவையும், ஐ. ஆர். 20 ரகத்திற்கு விதைத்த 70--75 நாட்களில் 45 கிலோ யூரியாவையும், கோ. 25 ரகத்திற்கும் விதைத்த 90---100 நாளில் 31 கிலோ யூரியாவையும், கோ. 32 ரகத்திற்கு விதைத்த 75 நாளில் 31 கிலோ யூரியாவையும் அம்பை 5 ரகத்திற்கு விதைத்த 80 நாளில் 31கிலோ யூரியாவையும் இட வேண்டும். தாளடிப் பருவத்தில் பயிர் வளர்ச்சி குறைவாக இருக்குமாதலால் மேலுரம் சரியான அளவில் இடுவது மிகவும் இன்றியமையாததாகும்.

அடுத்து,

‘ஏரினும் நன்றும் எருவிடுதல் இட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு’

என்ற குறள் மொழிப்படி பயிர் பாதுகாப்பு மிக மிக அவசியமாகும். விதை மூலம் பரவும் இலைப் புள்ளி நோய், ‘தூர் அழுகல் நோய்’ முதலியனவற்றை ‘அக்ரசான்’ அல்லது ‘செரசான்’ அல்லது ‘டில்லக்ஸ்’ அல்லது ‘காப்டான்’ அல்லது ‘டீ.எம்.டீ.டி.’ மருந்தைக் கலந்து பின் தெளிக்கவும்.



நாற்றங்காலில் நெற் பேன், குருத்துப் பூச்சி, இலை நோய் முதலியன தாளடிப் பருவத்தில் அதிகமான சேதம் ஏற்படுத்தக்கூடும். நெற் பேனை ஒழிக்க பி.எச்.சி. 10 சத தூளை ஏக்கருக்கு 10 கிலோ அளவில் தூவ வேண்டும். நாற்றுப் பறிக்க ஒரு வாரத்திற்கு முன், பூச்சிப் பூஞ்சாள மருந்துகளை ஒரு முறை தெளிக்க வேண்டும். நடவு செய்த 20 நாளில் ஒரு முறையும், தொண்டைக் கதிர் சமயம் இரண்டாவது முறையும் பூச்சிப் பூஞ்சாள மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும். மேலே சொன்ன கலவையில் பூச்சிகளை ஒழிக்க ‘பாரத்தியான்’ 200 மில்லி லிட்டர் அல்லது ‘என்டிரின்’ 400 மி. லிட்டர் அல்லது ‘பெனிட்ரோத்தியான்’ 250 மி.லிட்டர் அல்லது ‘பாஸ்போமிடான்’ 110 மி. லிட்டர் அல்லது ‘எண்டோசல்பான்’ 30 மி. லிட்டரைக் கைத் தெளிப்பானுக்கு 200 லிட்டர் நீரிலும், விசைத் தெளிப்பானுக்கு 40 முதல் 60 லிட்டர் நீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். ஐ.ஆர். 5 ரகத்திற்கு ‘சீராம்’ 200 கிராம் அல்லது ‘டைதேன் இசட்--78’ 400 கிராம் அல்லது ‘சினப்’ 400 கிராம் மருந்தையும், கோ. 25; கோ. 32, அம்பை 5 ரகங்களுக்கு ஒரு தாமிரப் பூசணக் கொல்லி மருந்தில் 500 கிராமையும் மேலே சொன்ன பூச்சி மருந்துக்கரைசலில் கலந்து தெளிக்க வேண்டும்.

‘மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது’ என்னும் பழமொழி, பயிரை அடிக்கடி கவனியாமல் பார்க்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. தாளடிப் பருவத்தில் அதிகப் பூச்சிகளும், நோய்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அடிக்கடிப் பயிரைப் பார்த்துப் பயிர்ப்பாதுகாப்பு முறைகளைத் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

இதுகாறும் கூறப்பட்டவைகளை மனதிற் கொண்டு, தாளடிப்பட்டத்திற்குச் சிறந்த ரகத்தைத் தேர்ந்தெடுத்து, சரியான காலத்தில் நாற்றுவிட்டு, சரியான வயதில் நட்டு, தக்க அளவில் அடியுரம், மேலுரம் ஆகியவற்றை இட்டு, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு, கட்டுக் கோப்பான சாகுபடி முறைகளைக்கையாண்டால், தாளடி மகசூல் நிச்சயம் பெருகும். எனவே, ‘‘ரகம்-உரம்--காப்பு என்ற மும்முனையில் முன்னேற்றம் கண்டு, தாளடி விளைவினை அதிகரித்து, வருவாய் பெருக்கி, வளம் சேர்த்து, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி பஞ்சம் இனி எங்கும் இல்லை என்கிற நிலைக்கு நெற் குவிப்பீர்! வளம் சேர்ப்பீர்! ’’ என்று தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## தாய்லாந்தில் முதலைப் பண்ணை.

முதலைகள், உலகில் வாழும் உயிரினங்களில் மிக நீளமானதாகும். அவை ஏறக்குறைய 10 அடி நீளம் இருக்கும். இருபது ஆண்டுகள் வரை உயிர் வாழும். தரையிலே செல்லும்போது அவற்றின் சிறிய—வலுவற்ற கால்கள் அவற்றை விகாரமாக்கிக் காட்டும். முதலைகள் கண்களும், மூக்குத் துவாரங்களும் வெளியே தெரியும் வகையில் தண்ணீருக்குள் படுத்திருக்கும். நீளமான—வலுவான வால் முதலைக்கு உண்டு. நீந்துவதற்கு இந்த வால் மிகவும் வாய்ப்பாக உள்ளது. வலுவான மனிதனின் எலும்புகளை ஒரே அடியில் நொறுக்குகின்ற அளவுக்கு வன்மை பெற்றது இந்த் வால்.

தாய்லாந்தில் சாவோபியா நதி அருகில் முதலைப்பண்ணை ஒன்று உள்ளது. ஒருநாள் குட்டியிலிருந்து 50 வயது நிறைந்த முதலைகள் வரை அங்கே காணலாம்.

1950-ஆம் ஆண்டிலே தனியார் ஒருவரால் துவக்கப்பெற்ற இந்த முதலைப் பண்ணை தற்போது சுற்றுலாப் பயணிகளை நல்ல முறையில் கவர்ந்து வருகிறது. அதுமட்டுமல்ல—உலகத்தில் காணப்படும் அபூர்வ வகை முதலை இனங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் மிகச் சிறந்த நிலையங்களில் தாய்லாந்துப் பண்ணையும் ஒன்றாகத் திகழ்கிறது.

தற்சமயம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட முதலைகள் உள்ளன. ஒவ்வொரு நாள் காலையும் இந்த முதலைகளைப் பலவகை வேடிக்கைகள் செய்ய வைக்கிறார் பயிற்சியாளர்.

இன்று, உலகத்தில் பலநாடுகளில் முதலைகள் சட்டத்தின் மூலமாகவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



# வெண்பாப் போட்டி

ஈற்றடி :—
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து

64

உண்மை உரையென்பார்; ஓயா துழையென்பார்;
நன்மை தருஞ்செயல் நாடென்பார்—புன்மையைத்
தள்ளென்பார்; அத்தனையும் தாம்கொள்ளார்; அன்னாரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— த. இராமலிங்கன், சின்னமணல்மேடு.

தாய்பிறந்த நன்னாடும் தாயாரும் மண்மீது
சேய்க்கெல்லாம் கண்காணும் தெய்வமே—தாய்மொழியோ
உள்ளம் வளர்க்கும் உயிராகும் இச்சிறப்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— இராச. உமாமஹேஸ்வரி, கணியூர்.

ஏழையின் புன்னகையில் ஈசனைக் கண்டுதமிழ்
வாழக் கலைஞர் வழிவகுத்தே—ஆளுகின்றார்!
கள்ளமிலாப் பேரறிஞர் கண்டவழி ஈதெனவே
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— க. இரத்தினம், ஆயக்காரன்புலம்-2.

குடிசைகள் மாறியே கோபுரமாய் ஆகும்;
வடிகால்கள் ஊரை வளைக்கும்;—குடிநீராம்
வெள்ளருவி கொட்டும்; வெறுக்காதே! சாதனையைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் இரசை அதன், தெற்குத்தெரு.

அண்ணனன்று கண்ட அருங்கனவு தம்பியரால்
வண்ண உருப்பெறும்நல் மாட்சியெலாம்—பெண்ணே நீ
உள்ளத்தே காய்தல் உவத்தல் அகற்றுவையேல்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— பகவதி அப்பன் பி.எஸ்ஸி., சென்னை-5.

அன்பில், அரவணைப்பில், ஆர்த்தெழும் பாசத்தில்;
இன்ப இணைப்பில், எழும்உணர்வில்—துன்பத்தில்
துள்ளி விரைந்துதவும் தூய்மையில், மெய்நட்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— க. இளந்திரையன், வள்ளியூர்.

*பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. த. இராமலிங்கன், சின்ன மணல்மேடு,
கந்தகுமாரன் அஞ்சல், (வழி) இலால்பேட்டை,
சிதம்பரம் வட்டம், (தென்னார்க்காடு மாவட்டம்)

தாழ்ந்தோரும் வாழ்ந்திடவே சட்டங்கள், கீழ்நிலையில்
பாழ்பட்டு நின்றோர்க்கும் பல்நலங்கள்—வாழ்வளித்துக்
கள்ளமில் தொண்டாற்றிக் காக்கும் தமிழரசைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— தவமுத்து. அண்ணாமலை, தவசி.

வள்ளுவத்துக் கீடான வாய்மொழியைப் பாரகத்தில்
வள்ளுவரை யன்றியிங்கே யார்தந்தார்—உள்ளத்தில்
கள்ளமிலா தாராய்ந்தால் வள்ளுவருக் கீடில்லை!
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

கல்வி, நறுங்கேள்வி, கட்டுப்பா டுற்றமனம்
வல்ல அறிஞர்தம் வாய்ச்சொல்லில்—நல்லரிய
உள்ளச் சிறப்பை, ஒளிகாட்டும் வாய்மையைத்
தெள்ளிதின் காணலாம் தேர்ந்து.

— கமலமணி, தும்மனட்டி.

ஆயிரந்தான் பூசை அகமுருகச் செய்திடினும்
கோயில் பலசென்று கும்பிடினும்—தாயிடந்தான்
உள்ளம் சரணடையு(ம்) உண்மையினைக் கண்டறிவீர்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— முருங்கை. சோமு, முருங்கப்பட்டி.

மாற்றாரும் போற்றி மதிக்கின்ற மாண்பைநாம்
ஏற்ற விளக்காக என்றுமே—தோற்றுகிற
கள்ளமின்றித் தூங்கும் கடற்கரையில் அண்ணனிடம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

மக்கள் நலங்கருதும் மாண்புடையோர் ஆட்சியிலே
மிக்கபல நன்மையெலாம் மேவுதலால்—மக்கள்தம்
உள்ளந் தனிலே உறைந்திடுவார் என்பதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சு. தங்கப்பன், சின்கோனா.

## வெண்பாப் போட்டி

சாதி யொழிந்து சமதர்ம மும்தழைத்து
நீதி நிலைத்து நிறைகல்வி—போதவிழ்ந்தால்
துள்ளிடு மின்பச் சுவையூறும் நல்வாழ்வைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சா. துரைராஜ், பெரியதச்சூர்.

ஏழைதுயர் நீங்கி ஏற்றம் பலபெற்று
வாழைபோல் என்றும் வளர்ந்துய்ய—தோழியே!
துள்ளி எழுந்து துயர்களைவான் தொண்டுள்ளத்தைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— நா. ரெங்கராசு, பொன்மலை.

செல்வம் மிகவுடையார் திண்டோள் மறக்குலத்தோர்
கல்வி அறிவில் கரைகண்ட நல்லோர்கள்
எல்லோருள் நாம்சிறக்க யார்வேண்டும் நாட்டுக்குத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

பண்பாடு, காதல், பகைநடுங்கும் ஒள்வீரம்,
நண்பாடல், நாவன்மை, நாட்டுவளம்,—விண்பாடும்
வள்ளன்மை, ஆட்சி, தமிழ் எல்லாம் இலக்கியத்துள்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—மா. சு. ஜெயராமன், ஓலைப்பாடி.

கண்ணிலார் கண்பெற்றார் ; காலமெலாம் வாழ்ந்திட
மண்பெற்றார் நல்லுழவர் ; மாண்படைந்தார்—மண்ணகத்தார்
தெள்ளுதமிழ் ஆட்சியின் சீரியஇத் தொண்டுகளைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா.

கொள்ளை யடித்தல் கொடுமை ; நிலைக்கேற்ப
அள்ளிக் கொடுத்தல் அறமாமே—உள்ளத்தைக்
கொள்ளைகொண் டின்புறுத்தல் கோடிபயன் ; வள்ளுவத்தால்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஆடிமுன் வைத்த அணிபொருள் தன்னையும்
கேடின்றிக் காட்டுமே கேண்மையுடன்—சேடியே !
உள்ளத்தின் எண்ணத்தை உள்ளவா(று) மென்முகத்தில்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

ஓயா துழைப்போரின் ஊதியத்தைச் சேராக்கி
ஈயா(து) இருநிதியைத் தாம்சேர்க்கும்—தீயோரின்
கள்ளத் தனம்ஒழியும் காலம் கடுகிவரும்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து.

—எம். ஆர். சந்திரசேகரன், குட்டிப்பாளையம்.

இந்திய மாநிலங்கள் எல்லாவற் றுள்ளும்நம்
செந்தமிழ் நாட்டரசார் செய்துவரும்—செந்நெல்லின்
கொள்முதலைக் கூட்டுதலில் கொண்டுள்ள ஆர்வத்தைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

தேடிவைத்த செல்வமா ? செல்லக் குழந்தைகளா ?
கேடகற்றும் நல்லறமா ? கீர்த்திதரும்—பாடிவற்றுள்
கல்வெட்டாய் நாளெல்லாம் காடுசென்றும் நிற்பதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

பெற்ற வளத்தைப் பெரிதென் றுணராமல்
கற்றவர்போல் பேசித் திரிகின்றார்—மற்றிவர்கள்
பள்ளமும் மேடும் பகுத்தறிவால் காணாரோ ?
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—து. திருநாவுக்கரசு, எம். ஏ., அரியலூர்.

பித்தம், கிறுகிறுப்பு, தொண்டை கரகரப்பு,
ஒத்த புளிஏப்பம் உண்டானால்—சுத்தம்தான்
உள்ள 'இஞ் சிமுரப்பா' உட்கொண்டால் உற்றகுணம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சாணுப்பாண்டி, சுந்தரராசபுரம்.

திட்டக் குழுவமைத்துத் தீட்டும்நல் திட்டத்தால்
மட்டின்றி வாழ்வு மலருமாம்—சட்டமுடன்
மெள்ளவே முன்னேற்றம் மேதினியில் நாமடைதல்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. சக்திவேலன், திருச்சி-4.

துன்பம் வரினும் துணிவோடும் பண்போடும்
இன்பம் பயக்கும் வினைஇயற்றி—என்பெனினும்
தெள்ளுதமிழ்க் காகத் தியாகம் புரிந்தவரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் எழில்மாறன், ஆயக்குடி.

புத்தன் மறுபிறப்பாய்ப், பொய்வேடப் புல்லரிங்கே
நித்தம் பிறர்க்குரைப்பார் நீதிபல—அத்தகையோர்
உள்ளமதில் பூவா உதட்டிடுக்குப் புன்மலரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—முத்தமிழ்முத்தன், திமிரி

கோடிக் கணக்கில் குவியும் எழுத்தெல்லாம்
நாடியே ஆராய்ந்தால் நல்லதெனத்—தேடி, அதில்
கொள்ளும் படைப்புக்கள் கொஞ்சமே, நீயிதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சு. கிருஷ்ணன், திருப்பூர்.

நாளும் நமக்காக நல்லெண்ணங் கொண்டிங்கே
ஆளும் அரசினை ஆதரிப்போம்—மூளுகின்ற
கள்ளப் பகையோட்டிக் காலமெல்லாம் வெற்றிதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—இராம. மறைமுதல்வன், வடமாதிமங்கலம்.

முள்ளார்ந்த கொள்கை முரணென்று மாநிலக்
கள்ளார்ந்த தன்னுட்சி தள்ளாதீர்—உள்ளாழ்ந்தால்,
வெள்ளை மலைபோல் விளங்கும் இதன்பொருளைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—மா. சே. இராசு, திருப்பூர்.

ஒன்றின்பம், மீறின் இரண்டாம், அதன்பின்னே
என்றென்றும் மூன்றை எதிர்நோக்கோம்—நன்றுய்ந்த
ஒள்ளிய நுண்பொருள்போ லோங்கும் சிறுகுடும்பம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—தங்க அருண்மொழி, வே. கள்ளிப்பாளையம்.

வஞ்சமுடன் செயலாற்றி வரம்கேட்டால் பயனில்லை
அஞ்சிப் பிழைநீக்கி ஆராய்ந்தால்—நெஞ்சத்தின்
உள்ளிருந்து பேசும் உருவமிலா ஆண்டவனைத்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து.

—க. பாலசுப்பிரமணியன், சென்னை-33.

வாய்மை கடைப்பிடித்து, வண்மையு டனொழுகித்
தூய்மைமிகு தொண்டைத் தொடர்ந்தியற்றி,
—ஆய்ந்தெதையும்
கொள்ளுந் தகையான் குறைவிலா வாழ்வதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்

நீதிக்குப் போராடி நேர்மைக்கு வாதாடி
பாதிக்கு மேலவர்தான் போய்விட்டார்—மீதியுள்ளோர்
எள்ளி நகையாடி என்னதான் சாதித்தார்!
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. வேங்கடகிருஷ்ணன் எம். ஏ. பி. டி., நாமக்கல்.

வறுமையைப் பேயென்றே வல்லோரும் சாடிச்
சிறுமையுற ஏசுதலு மேனே?—வறுமையே
கள்ளமிலா நட்புறவைக் காட்டுங் கருவியெனத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கோ. மா. இராசகோபாலன், சென்னை-23.

## வெண்பாப் போட்டி

பண்பை மொழிவளத்தைப் பாவாக்கி யாப்படக்கி
விண்மீன்கள் மத்தியிலே வெண்மதியாய்—வெண்பாவை
வல்லோர் அவைக்கனுப்பின் வாழ்த்துபெறும் நற்பரிசைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கு. பெரியசாமி பி. எஸ்ஸி., ஓலைப்பாடி.

நல்லரசார் நற்பணியை நல்லோர்கள் போற்றுவதும்
புல்லோர்கள் தூற்றுவதும் புதுமையல்ல!—எல்லாரும்
உள்ளம் நடுநிலையாய் ஊன்றிக் கவனித்தால்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சாமி. அரங்கநாதன், மண்டகொளத்தூர்.

ஒருவ னொருத்தி யுளங்கலந் தொன்றி
இருவரும் வாழ்வி லினிமை—தருமழலைச்
செல்வ மிரண்டொடு நின்றார் சிறப்பினைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—அ. மோகனன், வங்கனூர்.

முத்தாய் மணியாய் முகிர்ந்த கதிர்க்கற்றைக்
கொத்தாய்த் தமிழ்மண்ணைக் கும்பிடுமோர்—சித்திரத்தில்
பள்ளத்தை மேவும் பசுமைப் புரட்சியினைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கி. காளியப்பன் பி.ஏ., கோட்டையூர்.

எத்தனைதான் நூல்கள் எடுத்துப் படித்தாலும்
அத்தனைக்கும் மேலாய் அறநூலாய்—மெத்தபுகழ்
வள்ளுவன் செய்குறளே வாழ்க்கைவழி காட்டியெனத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கோ. பு. பார்வதி, புதுவை-4.

உள்ளங் களிக்க உரைக்குந் தமிழ்நூல்கள்
அள்ளிக் கொடுக்கும் அறிவுரைகள்—வெள்ளமென
உள்ளத்தில் பண்டே உயர்ந்த தமிழ்ப்பண்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.


—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.


நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின்றி
அஞ்சி அலைக்கழியும் அவனியோர்—விஞ்சாது
வள்ளுவர் முப்பாலில் வாழும் வகைதன்னைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—பி. முருகேசன், காட்டுமன்னார்கோவில்.


வள்ளுவரின் வாயுறைபோல் வையகத்தில் எங்கணுமே
எள்ளளவும் ஏதமிலா ஏடுளதோ!—உள்ளபடி
விள்ளரிய தண்டமிழ்ப்பா வேறென்பர் யாரிங்கு?
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—தமிழ்மணி, வே. கள்ளிப்பாளையம்.






நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும். கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் ''டான்ஸி''

விவரங்களுக்கு அணுகவும் : தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
''அருள்மனை'', 26: ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014

# சென்னையில் அண்ணல் விழா!

சி.என். கிருஷ்ணபாரதி




தமிழ் மகன் என்று தன்னை அழைத்துக் கொள்ளுவதில் பெருமைப்பட்டுக் கொண்ட தன்னிகரில்லாத் தலைவர் காந்தியடிகளின் பிறந்தநாளைத் தமிழகம் சீரோடும் சிறப்போடும் கொண்டாடியது.

காந்தியடிகளின் வாழ்வில் தமிழர்கள் மாபெரும் மாற்றங்களைச் செய்துள்ளனர். தென்னாப்பிரிக்காவில் தனது முதலாளியால் தாக்கப்பட்டு இரத்தம் வழிய நின்ற பால சுந்தரம் என்ற தமிழன் வக்கீல் மோகனதாஸ்காந்திக்கு தொழிலாளர் படும் பாட்டினை எடுத்துக் காட்டினான். ஏன்? காந்தியடிகளைப் பொது வாழ்விற்கு ஈர்த்ததே இந்த நிகழ்ச்சி தான். தென்னாப்பிரிக்காவில் தமிழர்களோடு தமிழராக வாழ்ந்தவர் காந்தியடிகள். தன்னலமற்ற தியாகத்தின் பெருமையினை அவருள்ளத்தில் ஆழப் பதியச் செய்தவர்கள் வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி போன்றவர்களாவார்கள். அவர்களது தியாகத்திற்கு மதிப்பளிக்கும் முறையில் தமிழ் கற்கத் தொடங்கிய அண்ணல் தமிழின் இனிமையிலும் செம்மையிலும் தம்மையே மறந்ததாகக் கூறுகிறார்.

எளிய உடையாம் வேட்டியும், மேல் துண்டும் அணிவது என்று முடிவு மேற்கொண்டதும் தமிழகத்தில்தான். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போர் முழக்கமிடச் செய்து சத்தியாக்



கிரகப் பாதையினை மேற்கொள்ள முடிவேற்றதும் சென்னை நகரில் தான்! இவையனைத்திற்கும் மேலாக, அவரது கதர்க் கொள்கைக்கு உருவமளித்துச் செயலாற்றிய முதல் மாநிலமும் தமிழகந்தான்!

இத்தகைய பெருஞ்சிறப்புக்களுடன் காந்தியடிகளின் வாழ்வோடு இணைந்த தமிழகம் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் பின் தங்கவில்லை. நாடு போற்றும் வகையில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை நடத்தியது தமிழகம்.

அண்ணலின் நினைவிற்கு நிலையான காணிக்கையாக அமைச்சர்களும், நீதிபதிகளும் வாழ்ந்த பெரும் இல்லமொன்றினைக் 'காந்தி இல்லமாக' மாற்றி அவரது வாழ்வினையும் கொள்கையினையும் பரப்பி வருகிறோம். நூற்றாண்டு நிகழ்ச்சிகளோடு நின்றுவிடாது ஆண்டுதோறும் மிகப் பெரும் அளவில் நாட்டிலுள்ள பேரறிஞர்கள், தலைவர்கள் ஆகியோரை அழைத்து காந்தியடிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தி வருகிறோம்.

வேறு எல்லா விழாக்களையும் விஞ்சிடும் வகையில் இவ்விழா தமிழகத்தில் நடப்பது தமிழர் தம் கடமையுணர்விற்குச் சான்றாகும்.

காந்தியடிகள் விழா இவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் அதிகாலையில் கடற்கரையில் கம்பீரமான காந்தியடிகளின் சிலைக்கு முன்னர் துவங்கியது. கல்வியமைச்சர் நாவலர் முதலவரின் சார்பாகவும், தமிழ் மக்களின் சார்பாகவும் அழகியதொரு மலர் மாலையினை அண்ணலின் சிலைக்கு அணிவித்தார். அண்ணலுக்கு அஞ்சலியும், உழைப்பின் உயர்வை நினைவூட்டும் நூற்பு வேள்வியும் அவர் தம் பாதங்களுக்குக் கீழ் துவங்கின.

காலை ஏழு மணிக்கு முன்னர் அலைகளின் ஓசையைத் தவிர மற்ற ஒலியைக் காணாத கடற்கரை, அன்று இளைஞர், மகளிர் மாணவர்கள், பல்வேறு சங்கத்தினைச் சார்ந்தவர்கள் ஆகியோர் வந்து சேரும் பேரொலியினைப் பெற்றுத் திகழ்ந்தது. தமிழக ஆளுநரது துணைவியார் திருமதி மது பென் ஷா அம்மையார் வருகை தந்து அண்ணலுக்குப் பெண் குலத்தின் சார்பாக மலர் மாலை அணிவித்தார். சிறிது நேரத்தில் அணி வகுத்தது பெரும் படை!

பெருமளவில் வந்து கூடிய மக்கட் கூட்டம் கட்டுப்பாட்டுடன் அணி வகுத்து நின்றது. அப் பெரும் அணிக்குப் பின்னர் புன்னகை பூத்த மோகன காந்தி சிலையுருவில் அமர்ந்திருக்க இன்னிசையுடன் அனைவரும் புறப்பட ஆயத்தமாயினர். தேசிய மாணவர் படையினைச் சார்ந்த மாணவி ஏந்தி வந்த பந்தமொன்றிற்கு ஒளியூட்டி வழியனுப்பி வைத்தார் திருமதி மது பென் ஷா அம்மையார். எழுச்சியும், மாட்சியும் கொண்ட அவ்வொளி ஊர்வலம் கடற்கரை வழியாக சாந்தோம் வரை சென்று பின்னர் மயிலை வழியாக அண்ணா சாலையில் தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களைக் கடந்து இரண்டரை மணி நேரத்திற்குப் பின்னர் கிண்டியில் எழிலுற நிற்கும் காந்தி மண்டபத்தினை அடைந்தது. அவ்வொளியினை ஏற்று விழாவில் ஒளியேற்றும் சிறப்பினை நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் செய்தார்கள். காந்தீய நெறியில் தமிழகம் நடைபோட இளைஞர்களின் பங்கினை எடுத்துக் காட்டினார் பேராசிரியர்.

இதே நேரத்தில் அரசினர் தோட்டத்தில் அமைந்த காந்தி இல்லத்தில் நூற்பு வேள்வியும், வழிபாடும் துவங்கின. குறளகத்தின் முன்னர் நடமாடும் கதர் விற்பனைத் துறையினை அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

நாமகிரிப்பேட்டை கிருட்டிணனின் தென்னகத்துத் தொல்லிசையாம் நாதசுரம் முழங்க மாலை நிகழ்ச்சிகள் துவங்கின.

''தமிழகம் காந்தீயத் தத்துவத்தைக் கடைப்பிடித்து, அதன் வழியிலேயே சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பிரச்சினைகளை அணுகுகின்றது. இவ் விழாவினைச் சிறப்பான முறையில் கொண்டாட வேண்டுமென்று அரசும், மக்களும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களுக்குள்ளாகவே போட்டி போட்டுக்கொண்டு செயல்பட முன் வருவது என்னைப் பெரிதும் கவர்கின்றது. காந்தியடிகள் போதித்த தத்துவத்தின்மீது அவர்கள் கொண்டிருக்கும் அசையாத நம்பிக்கையையே இது எடுத்துக் காட்டுகின்றது.

'' காந்திஜியின் தத்துவத்தின்பால் காட்டுகின்ற இத்தகைய பெரிய மதிப்பு மக்களுடைய வாழ்க்கையில் ஒரு புது சகாப்தத்தை உருவாக்கிடும் என நான் நம்புகிறேன். பிரச்சினைகளை நேர்மையுடன் அணுகும் ஆவலும், மக்களிடம் தொண்டுபுரிந்து, சக ஊழியர்களிடமிருந்து பொறுப்பினைப் பெற்று பணியாற்றும் திறனும் படைத்தவர்களே அத்தகைய நிலையில் தலைமைப் பொறுப்பேற்க இயலும்.

"காந்தி மண்டபம் முழுவதும் உற்சாகக் குரல் ஒலிக்கிறது. காந்தியின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; அதைப் புகழ்ந்து பேச வேண்டும்; நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும்; நமது நாட்டின் பிரச்சினைகளுக்குக் காந்தியடிகள் காட்டிய வழியிலேயே தீர்வுகாண வேண்டும் என்று விரும்புகின்ற மக்களின் ஆர்வத்தையே இக்குரல் எதிரொலித்தது.

"காந்தியடிகள் விளக்கிவந்த 'வாய்மை நெறி முறையை' நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். நேர்மையான வழியில் இலக்கினை அடையவேண்டுமென்று காந்தியடிகள் வற்புறுத்தினர். நம் நோக்கமும் அணுகும் முறையும்






யினை உருவாக்கிய பெருமையும் அண்ணாவையே சாரும். மக்களுக்கு நாட்டுப் பற்றினை ஏற்படுத்தி உரிமையினை அளித்தவர் காந்தியடிகள். அவரது வாய்மை நெறி இந்தியாவிற்கு மட்டுமின்றி மனித குல முழுவதிற்கும் பொதுவானது.

"நாம் பல இன்னல்களுக்குள்ளாகியிருக்கிறோம், என்றாலும்



தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதற்கு முக்கிய இடமளித்தார்.

"வாய்மை, தூய வழி முறையினை நல்கும். செய்தி—தொடர்பு வசதிகளையுடைய இக்காலத்தில், மக்கள் அவைகளால் தவறான பாதையில் வழி நடத்திச் செல்லப்படாமல் கண்காணித்துக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. செய்தி—-தொடர்பு வசதிகளை மக்களுக்கு உண்மை நிலைகளை உணர்த்தப் பயன்படுமாறு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் சுய நல அரசியல் வாதிகளால் மக்கள் ஏமாற்றப்பட மாட்டார்கள். செய்தித்தாள்கள், திரைப்படம், சுவரொட்டி, புத்தகம், ஆகிய சாதனங்களும் கட்டுரை எழுத்தாளர்களும், தலைவர்கள், அரசியல்வாதிகள், மேடைப் பேச்சாளர் ஆகிய அனைவரும் மக்கள் உண்மை நிலையினைப் புரிந்து கொள்ள நம்பிக்கையான தகவல்களை அளிக்க வேண்டும்.

''ஒவ்வொருவருக்கும் சம சந்தர்ப்பத்தைத் தருவது சோஷலிசம். ''தனிப்பட்டவரின் சக்தியைவிடக் கூட்டுச் சக்தியே சிறந்தது'' என்ற தத்துவத்தைச் சோஷலிசம் ஏற்றுக் கொள்கிறது. வலிமையுடைய பெரிய தலைவர்களும் ஒரு சில செல்வந்தர்களும் ஒரு நாட்டில் இருந்த போதிலும் பெரிய அடித்தளமும், பரவி விரிந்து வரும் கூட்டு வசதிகளும் இருந்தாலொழிய எந்த ஒரு நாடும் உலகில் வெற்றிகரமாகப் போட்டியிட்டு வளர இயலாது. உழைக்காமல், சுக வாழ்க்கை வாழ்ந்த மசலவாகளின் காலம் கடந்துவிட்டது. செல்வம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பது மக்களாட்சிக்கு ஆபத்தாகும். இத்தகைய நிலையைப் போக்கத் திட்டமிடுதல், கீழ்த் தளத்தில் ஆரம்பமாக வேண்டும். அடித்தளத்திலுள்ளவர்கட்கு முதலிடம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு விழியும் சிந்தும் கண்ணீர் துடைக்கப்படவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்கள்.

"நாம் மீண்டும் காந்தியடிகளிடம் செல்வோம்; அவரை இளைய தலைமுறையினரிடம் அறிமுகப் படுத்துவோம், அமைதியும், வள வாழ்வும் பெற அதுவே வழியாகும்."என ஆளுநர் தம் தலைமையுரையில் கூறி அனைவரையும் வரவேற்றார். மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. சவான் விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் '' தாழ்வுற்று, வறுமை மிஞ்சிச் செத்தவர்கள் போலிருந்த மனித சமுதாயத்திற்கு உயிரும், அச்சமின்மையும் ஊட்டியவர் காந்தியடிகள். வாழ்வில் கொள்கையோடும், இலட்சியத்தோடும் வாழ வேண்டுமென்றும் சூழ்நிலை அவற்றை வெற்றி கொள்ளும் உறுதியினை அவர் அளித்துள்ளார். நமது நாட்டின் இரு பெரும் பிரச்சினைகளான ஏழ்மை, வேற்றுமை ஆகியவற்றை ஒழிக்காத வரை காந்தியடிகளின் வழியில் நடக்கிறோம் என்று எப்படிப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும்? இப்பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதன் மூலமே நாம் அவர்க்கு அஞ்சலி செலுத்தமுடியும்.'' என்று கூறினார்.

பொருட்காட்சியினைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், ''தமிழகத்தோடு இரண்டறக் கலந்து, தமிழக மக்களுடைய உணர்வில் ஒரு எழுச்சிப் புது மலராய், தியாகப் பெரும் மலராய் என்றென்றும், வணங்கத் தக்க அண்ணலாய், அறிவின் சுடராய், அடக்கத்தின் பேருருவாய், மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சிலே நிறைந்து நிற்பவர்தான், உத்தமர் காந்தியடிகள்.

''திருவள்ளுவர்—புத்தர்—ஏசுநாதர்—நபிகள் காலத்தில்

சைவ, வைணவப் பெரியார்கள் காலத்தில் யார் யார் சமுதாயம் வளர, வாழ—ஒன்றுபட—நல் வாழ்வு நடந்திட—வாழு, வாழ விடு என்ற கொள்கைகளையெல்லாம் தெரிவித்தார்களோ, அந்தப் போதனைகளையெல்லாம் தொகுத்து, இந்திய நாட்டு மக்களுக்கு உத்தமர் காந்தியடிகள் வழங்கினர்.

''அதை அவர் வழங்கிய நேரத்தில் அவைகளுக்கு ஒரு தனித் தன்மை இருந்தது என்பதை யாரும் மறந்திடவும் இயலாது. மறுத்திடவும் இயலாது. பெரியவர்கள், மூதாதையர்கள் வகுத்த கருத்துக்களுக்கெல்லாம் காந்தியடிகள் வார்த்தைகளின் மூலம் விளக்கம் தருவதை விட, செயல் மூலம் விளக்கம் தர வேண்டுமென்று விரும்பினர்.

"காந்தியடிகளுடைய கொள்கைகள் அனைத்தையும் பின்பற்றவேண்டுமென்றல் அந்தக் கொள்கைகளை காலத்திற்கேற்பத்தான் அதற்கான திட்டங்களையும், நடைமுறைகளையும், உருவாக்கிக் கொள்ள வேண்டும். காந்தியடிகள் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொன்னரென்றல்; நான் சொல்கிறேன், இன்றைக்குத் தீண்டாமை அறவே ஒழியாவிட்டாலும், இன்னும் 50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று நாம் ஒரு கற்பனையைச் செய்து கொண்டு அது நிறைவேற வேண்டிய கற்பனை—அப்படிப்பட்ட கற்பனையைச் செய்து கொண்டு—50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, காந்தியடிகளின் தீண்டாமையைப் போதனை செய்து கொண்டிருந்தால், அது தேவைப்படுகிற ஒன்று, என்றல் தேவைப் படாது. ஆனல் அந்தத் தீண்டாமைக் கொள்கை எந்த இழையிலே தொடங்கியது? காந்தி அடிகள் அமைக்குக் கொண்ட அன்பு வழி இருக்கிறதே, சமத்துவ வழி இருக்கிறதே, அற வழி இருக்கிறதே அது ஆண்டாண்டுக்க காலத்திற்கும் உலகம் உள்ள அளவிற்கும் இழையோடிக் கொண்டிருக்கிற ஒரு மையமான கருத்தாகும்.

"ஆகவே தான் இன்றைக்குச் சில கருத்துக்களை, சிலகொள்கைகளை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை.

"நம்முடைய ஆளுநருடைய குஜராத் மாநிலத்தில்தான் காந்தியடிகளுடைய மது விலக்குக்கொள்கைஇன்றைக்கு அமல் படுத்தப்படுகிறது. அதை அமல் படுத்த முடியாத குற்றவாளிகள் பட்டியலில் நானும் இருக்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் சவான் அவர்களும் இருக்கிருர்கள்.

"நிதி அமைச்சர் சவான் அவர்கள் எனக்கு உதவி இருப்பாரானல்—உதவாதது அவர் குற்றமல்ல—அவர் முடியாத நிலையிருக்கிருர். நான் காந்தியடிகளுடைய பாதையிலிருந்து கொஞ்சம் வழியை மாற்றி—அறவே வழியை ரத்துச்செய்து அல்ல—கொஞ்சம் பயணத்தை ஒத்தி வைத்து மறுபடியும் காந்தியடிகளின் பயணத்தைத் தொடர வேண்டிய நிதி நிலை நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறேன்.

" இந்திய ஒருமைப்பாடு பற்றி பேசுகிறோம். ஆனல் மது விலக்குக் கொள்கை இந்தியா முழுவதும் நிறைவேற்றப்படுகிறதா? அந்த ஒருமைப்பாட்டு கொள்கை இன்றைக்கு நம்மிடையே இல்லை என்பதை வேதனையோடும், வெட்கத்தோடும் நாமனைவருமே ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரை மது விலக்கு மீண்டும் தொடரும், ஒத்திவைக்கப்பட்டது. ரத்துச் செய்யப்பட்டது என்று பொருள் அல்ல. நான் சட்டசபையிலே மதுவிலக்கை ஒத்தி வைக்கிறேன் என்று தான் நிதி நிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் கூறினேனே தவிர, ரத்துச் செய்யவில்லை.

"நான்கு புறமும் வேடர்கள் சூழ்ந்து நடுவிலே சிக்கிய மானைப் போல தமிழகம் மது விலக்குக் கொள்கையில் இருக்கிறது. கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள்ளே கொளுத்தப் படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள் இருந்திட முடியும் என்று தான் கேட்டேன். அதைக் கேட்டுவிட்டு, வேதனையோடு, காந்தியடிகளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுச் சில காலத்திற்கு மதுவிலக்கு தமிழகத்திலே ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொன்னேன். நான் இன்றைக்கும் சொல்கிறேன். முதல் கட்டமாக இன்றைக்கு கள்ளுக் கடைகள் மூடப்பட்டுவிட்டன.

" அடுத்த கட்டமாக, அடுத்த ஆண்டு பூரண மதுவிலக்கு தமிழ்நாட்டில் அமலாகும் என்று முன்பு நான் அறிவித்ததை, இப்போது மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன்.

"இந்த காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் தமிழ் நாட்டு மக்கள் சார்பில் குஜராத் மாநிலத்திலிருந்து வந்திருக்கிற நம்முடைய ஆளுநர் அவர்களுடைய சார்பில் இங்கே கூடியிருக்கிற பெரு மக்களின் சார்பில் நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் மூலம் இந்தியாவின் பிரதமரைக் கேட்டுக் கொள்வேன்.

"அடுத்த ஆண்டு தமிழ் நாட்டிலே பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்படும் நேரத்தில்—காந்தியடிகள் போற்றும் விதத்தில், அவரை மதிக்கும் வகையில் இந்தியா முழுமையும் மது விலக்கு அமல்படுத்தப் படவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

"இவைகளை யெல்லாம் இணைத்துத்தான் காந்தி அடிகளுடைய வாழ்க்கைப் பாதை, அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் வாழ்க்கையிலே விளைவித்த அற்புதங்கள் —அற்புதங்கள் என்றல் அவதார மகிமையால் செய்தவை அல்ல —சாதாரண மனிதனை மிஞ்சுகிற அளவிற்குக் காரியங்களைச் செய்து காட்டி வெற்றி கண்ட அற்புதங்களை எல்லாம் விளைவித்த காந்தி அடிகளின் பெய



ரால், அருமையான, அழகான எழுச்சி நிறைந்த பொருட்காட்சி ஒன்றினை இங்கே அமைத்திருக்கிருர்கள். அதனைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் நான்" என்று கூறினுர்.

காந்தியடிகளின் வாழ்வினையும், தத்துவங்களையும் விளக்கும் எழில் மிக்க பொருட்காட்சியினை முதல்வரும், மத்திய நிதி அமைச்சர் அவர்களும், ஆளுநரும், கண்டு களித்தனர். மத்திய அரசின் பொருட்காட்சிப் பிரிவு காந்தியடிகளின் வாழ்வினை விளக்கும் படங்களடங்கிய காட்சியினையும், மாநில அரசின் பல்வேறு துறைகளும் காந்தியடிகள் வழியில் ஆற்றும் பணிகளைச் செயல் முறை மூலமாகவும் விளக்கின. சமுதாயத்தின் அடித் தளத்தில் வாழுவோர்க்கெனச் செயல்படும் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள், கண்ணொளித் திட்டம், கை ரிக்ஷாவினரின் மறு வாழ்வுத் திட்டம் ஆகியவற்றின் வேலை முறைகளை மத்திய நிதியமைச்சர் ஆர்வத்துடன் கேட்டுத்தெரிந்துகொண்டார். இவ்விழாவினையொட்டிச் செய்தி—மக்கள் தொடர்புத் துறை காந்தியடிகள் வாழ்வும்—வாக்கும் என்னும் சிறு நூலை வெளியிட்டது.

காந்தியடிகள் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் தொடர்ந்து 7-ம் தேதி முடிய மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெற்றன. மூன்ருும் தேதி உலகத் தலைவர் காந்தியடிகள், என்ற பொருள் பற்றி திரு. காமராஜ், எம். பி. அவர்கள் தலைமையில் திரு. சா. கணேசன் அவர்களும், திரு சையத் அப்துல் புகாரி அவர்களும் சொற்பொழிவாற்றினர். அதற்கு அடுத்த நாள் சமூக சீர்திருத்தவாதி காந்தியடிகள், என்பது பற்றித் திருமதி மது பென் ஷா, திருமதி சௌந்திரம் கைலாசம், டாக்டர் எம். சந்தோஷம், திரு. வெங்கடாச்சாரி ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள். மற்ற நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம், மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு, மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் திரு. மு. வரதராசஞர், தொழிலதிபர் திரு. நா.

யடிகளின் சிறப்பினை எடுத்துக் கூறினுர்.

இவ்வாண்டின் சிறந்த நிகழ்ச்சி காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற தத்துவங்களைப் பற்றிய கருத்தரங்காகும். அக்டோபர் 5, 6, 7-ம் நாட்களில் இவ்வரங்கு போற்றத் தக்க வகையில் நடைபெற்றது.



இவ்வாண்டின் மற்ருெரு சிறப்பு, மாணவர் முகாமாகும். ஒரு வார காலமாக மாணவர்கள் இன்ஜினியரிங் கல்லூரியில் முகாமிட்டுப் பல்வேறு ஆக்கப் பணிகள் செய்து வந்தனர். மாணவர் முகாமினைச் சென்னைப் பல்கலைக் கழக தேசியத் தொண்டர் அணியும், மாணவியர் முகாமினைக் கல்லூரி கல்வித் துறையினரும் சிறப்புற நடத்தினர்.

ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளனைத்திலும் தமிழக ஆளுநர் அவரது துணைவியார் அவர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எல்லா நாட்களிலும் மக்கள் இலட்சக் கணக்கில் காந்தி மண்டபம் நோக்கிவந்து கொண்டேயிருந்தனர்.

தமிழக மக்கள் காந்தியடிகளுக்கு எடுத்த விழாவில் கலந்து கொண்ட சிறப்பினைக் கண்டு உளம் நெகிழ்ந்த மேதகு ஆளுநர், இறுதி நாளன்று பேசுகையில் ''காந்தி அடிகளின் கொள்கைகளைக் காப்பாற்றும் திறன் படைத்தவர்கள் தமிழ் நாட்டு பெரு மக்கள் தாம்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள்.

காந்தியடிகளுக்குத் தமிழகம் செலுத்திய அஞ்சலிபெருமைக்குரிய ஒன்றுதான். அவரது அமைதி வழியினை என்றுமே தங்கள் வழியாக ஏற்றுச் செல்லும்தமிழ்ப் பெரு மக்கள் தங்களது இலட்சியத்தின் முதல்வஞக அண்ணலை ஏற்று அவர்தம் வழியில் என்றும் நடந்து செல்லத் தங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் திருவிழாவாக இது அமைந்தது. இத்தகைய திருவிழாக்கள் மீண்டும் மீண்டும் மக்கள் தம் உள்ளத்தில் உயர்ந்த பண்புகளை வளர்க்கும் சிறந்த அறிவுக் கூடங்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.






# ஓட்டுநரே உரிமையாளர்



எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்.

எனவே, ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாய அமைப்பு உருவாக வேண்டும்.

உழைப்பவனே உரிமையாளனாக இருக்க வேண்டும்!

சமதர்ம சமுதாயத்தை விரும்பும் எல்லாருடைய எண்ணமும் இதுதான்.

இந்த எண்ணங்களை நனவாக்கி வருவதில் முன்னணியில் திகழும் நம் தமிழகத்தில்----

இந்த அரும் பணியை ஆற்றி வரும் அமைப்புகளில் ஒன்று தான்---சென்னை ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவு சங்கம்.


ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களின் நன்மைக்காக--ஓட்டுநரே உரிமையாளராக வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த 17--9--1969-ல் பதிவு செய்யப்பட்டு 18--9--1969 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் இதுவரை 190 ஆட்டோரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆட்டோ ரிக்ஷா டிரைவருக்குரிய 'ஓட்டுநர் உரிமம்' பெற்றுள்ளவர்களே இச் சங்கத்திலே உறுப்பினராகலாம். ஒவ்வொருவரும் உறுப்பினராவதற்கு பங்குத் தொகையாக ரூபாய் ஐம்பது செலுத்த வேண்டும். இப்பொழுது சென்னை ஆட்டோ ரிக்ஷா சங்கத்தில் 366 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுடைய பங்குத் தொகை மட்டும் ரூ. 1,79,050 ஆகும்.

தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் மதிப்பு ரூ. 11,000 ஆகிறது. எனவே இதில் எட்டில் ஒரு பங்கு---அதாவது ரூ. 1,400 பங்குத்தொகையைச்செலுத்தி உறுப்பினர் ஆட்டோ ரிக்ஷாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கத்திலிருந்து ஆட்டோ பெற்ற ஒவ்வொரு உறுப்பினரும் நாள்தோறும் ரூ. 13 வீதம் செலுத்த வேண்டும்.




இச்சங்கம் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் 457 எண்ணுள்ள இடத்தில் நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் ஆட்டோ ரிக்‌ஷா பெற்றவர்கள் மாதம் தோறும் 150 லிட்டர் பெட்ரோல் பிடிக்க வேண்டும்.

இந்தப் பெட்ரோல் பங்கில் 150 லிட்டரிலிருந்து 199 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 2 லிட்டர் பெட்ரோல் இனாமாகவும், 200 லிட்டரிலிருந்து 299 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 3 லிட்டர் பெட்ரோல் இனாமாகவும், 300 லிட்டரிலிருந்து 399 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 4 லிட்டர் பெட்ரோல் இனாமாகவும் கொடுக்கப்படும்.

இப்படி இந்தச் சங்கத்தில் ஆட்டோ ரிக்‌ஷாப் பெற்றவர்களில் 56 பேர்கள் முழுத் தொகையையும் செலுத்தி உரிமையாளர்களாகி விட்டார்கள்

அந்த 56 ஊர்திகளை ஓட்டுநர்களுக்கே உரிமையாக்கும் விழா கடந்த 24-9-73 அன்று சங்கத் தலைவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது. தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். ராமச்சந்திரன் அவர்களும் பங்கேற்றார்கள்.

இச்சங்கத்தின் மூலம் ஆட்டோ ரிக்‌ஷா பெற்று, ஆட்டோ ரிக்‌ஷா உரிமையாளராகி விட்ட ஓட்டுநர் திரு. எம். ஜெயச்சந்திரனை சந்திப்போம்.

சென்னை ஆள்வார்பேட்டை சாலை நாலாவது சந்து 80 எண்ணுள்ள இல்லத்தில் வசிக்கும் ஜெயச் சந்திரன் ஆட்டோ ரிக்‌ஷா ஓட்டுநர்.

**இவருடைய ஆட்டோ ரிக்‌ஷா எம்.எஸ்.எல். 1390; வில்லை எண். 6722, சங்கப் பதிவு எண் 145 ஆகும்.**

ஆட்டோ ரிக்‌ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகி, ஆட்டோ ரிக்‌ஷாவைத் தவணை முறையில் பெற்று, தவணைகளை முழுதும் செலுத்தி இன்று ஆட்டோ ரிக்‌ஷா உரிமையாளராகத் திகழும் இவர் உழைப்பாளிக்கு உயர்வு கிட்டியே தீரும் என்பதற்குச் சான்றாகவிளங்குகிறார்.

ஆட்டோ ரிக்‌ஷாவின் உரிமையாளராகிவிட்டபிறகும் ஆட்டோ ரிக்‌ஷாச் சங்கத்தின் பெட்ரோல் பங்குக்கே வந்து பெட்ரோல் பிடிக்க வரும் இவரை ஏன் இன்னும் இந்தப் பெட்ரோல் பங்கை நாடி வருகிறீர்கள் என்று கேட்டால் போதும்........

"நாங்கள் வளர்த்த பெட்ரோல் பங்க், இதனை நாங்களே மறந்து விட முடியுமா? ஒரு குடும்பம் போல் இருந்து இந்தப் பெட்ரோல் பங்கை வளர்த்து வந்துள்ளோம். அது மட்டுமில்லீங்க... வெளியிலே ஆட்டோ ஆயில் விலை ரூ.2.80 ஆகும். இங்கே எங்கள் பங்கிலே ரூ. 2.40 ஆகும். அது மட்டுமில்லே. மாதத்துக்கு 150 லிட்டர் பெட்ரோலுக்கு மேலே பிடித்தால் இரண்டு லிட்டர் பெட்ரோல் இலவசமாகக் கிடைக்கும். அளவும் குறையாது. லாபமும் தனிப்பட்டவர்களுக்குப் போகாமல் எங்களுக்கே கிடைக்கிறது..." என்று அடுக்கிக் கொண்டே போகிறார் உரிமையாளராகி விட்ட அந்த ஓட்டுநர் நண்பர்.



# காகிதப் பிரச்சினை



**உலகத்தில் தயாராகும் காகிதத்தில் 0·6 சதவீதம் தான் நமது இந்தியா பயன்படுத்தி வருகிறது. நியூஸ் பிரிண்ட் என்று சொல்லப்படும் பத்திரிகைக் காகிதத்தை நாம் எந்தெந்த நாட்டிலிருந்து எவ்வளவு வாங்குகிறோம் என்பது தெரியுமா ?**

| | | |
|---|---|---|
| **கனடாவிலிருந்து** .. .. | **60** | **ஆயிரம் டன்.** |
| **சோவியத் யூனியனிலிருந்து** .. | **28** | ,, |
| **ஸ்காண்டிநேவியன் நாடுகளிலிருந்து.** | **13** | ,, |
| **பங்களா தேசத்திலிருந்து** .. | **10** | ,, |
| **போலந்து மற்றும் செக் நாட்டிலிருந்து.** | **6** | ,, |

இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் 36 ஆயிரம் டன்-ஆக மொத்தம்—இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 153 ஆயிரம் டன் பத்திரிகைக் காகிதம் செலவிடப்பட்டு வருகிறது. இதற்குத்தான் அண்மையில் 30 சதவீத வெட்டு ஏற்பட்டுள்ளது.

**சீனர்கள்தாம் உலகத்தில் முதன் முதலில் காகிதத்தின் பயனை உணர்ந்தவர்கள். பேப்ரஸ் (Paprus) என்னும் ஒருவகைச் செடியிலிருந்து காகிதம் தயாரிக்கப்பட்டது.** (அதனால்தான் அதன் பெயர் ஆங்கிலத்தில் பேப்பர் என்று சொல்லப்படுகிறது. கி. பி. 105-ஆம் ஆண்டில், சாய்லுன் என்பவர் செடிகளைக் கொண்டு காகிதத்தைத் தயாரித்தார். பிறகு காகிதம் தயாரிக்கும் கலை சீன நாட்டிலிருந்து அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும், இறுதியாக ஐரோப்பா கண்டத்திற்கும் பரவியது. ஐரோப்பாவில் முதல் காகித ஆலை கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் நிறுவப்பட்டது.

சென்னை ஆட்டோ ரிக்ஷா கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள எல்லோரிடமும் இது போன்ற உறவு மனப்பான்மை நிரம்ப உள்ளது. அந்த அளவுக்குச் சங்க நிருவாகிகள் ஒவ்வொரு உறுப்பினருடனும் அன்புள்ளத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைவராகவும், துணைத் தலைவராக திரு. எஸ். வி. நல்லையாவும், செயலாளராக கே. நரசிம்மலு அவர்களும், இயக்குநர்களாக திருவாளர்கள் நீல நாராயணன், எம்.எல்.சி., ஏ. தட்சிணாமூர்த்தி, எம். முத்துசாமி, டி. வேணு, தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் முகவர் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் டி. வேணு, எம். முத்துசாமி, ஏ. தட்சிணாமூர்த்தி ஆகியோர் ஓட்டுநர்கள் ஆவார்கள்.

சேலம், கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களிலும் ஆட்டோ-ரிக்ஷாக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கம்தான் அதிக அளவில் ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கியுள்ளது. சென்னையிலுள்ள ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் தான் பெட்ரோல் பங்க் சொந்தமாக உள்ளது.

இந்தப் பெட்ரோல் பங்க் நாள் முழுமையும் 24 மணி நேரம் பணியாற்றுகிறது. 3 பிரிவினர் எட்டு மணி நேரத்திற்கு ஒரு பிரிவாக இருந்து பணியாற்றுகின்றனர். மாதந்தோறும் இந்தப் பெட்ரோல் பங்கில் 45,000 லிட்டர் பெட்ரோல், 12,000 லிட்டர் டீசல், 3,000 லிட்டர் ஆட்டோ ஆயில் முதலியன விற்பனையாகிறது.

1970-71-ஆம் ஆண்டில் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1970---71-ம் ஆண்டில் ரூ. 20,053, 1971---72-ம் ஆண்டில் ரூ. 48,220-ம், 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 44,000 -ம் இலாபமாகக் கிடைத்துள்ளது.

பங்குத் தொகை அளித்துள்ள உறுப்பினர்களுக்கு ஆறு சதவிகிதம் டிவிடெண்ட் அளிக்கப்படுவதுடன், ஒரு ஜோடி சீருடைகளும் வழங்கப்படுகிறது. பொது நல நிதியிலிருந்து ஏழ்மை நிலையிலுள்ள உறுப்பினர்களுக்கு வேட்டிகளும் அவர்களுடைய குடும்பத்தாருக்குப் புடவைகளும் வழங்கப்படுகின்றன.

ஒரு குடும்பத்திலுள்ள பாச உணர்வோடு செயல் பட்டு வரும் இந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் மிகச் சிறப்பாகவும் சங்கங்களுக்கு நல்ல முன்னோடியாகவும் விளங்கக் காரணம் என்ன?

நிருவாகிகளின் உழைப்பும் ஆற்றலும் தான் என்றாலும் அந்தக் கேள்வியை நாம் அங்குப் பணியாற்றுபவர்களிடம் கேட்டால் அவர்களிடமிருந்து வரும் பதில் ''சங்கத்தின் விதிமுறைகளைக் கடைபிடிப்பதில் கண்டிப்பாக இருந்து வருகிறோம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தனிப் பதிவேடு போட்டுப் பணியாற்றி வருகிறோம். / சங்கத் தலைவரும் மற்றவர்களும் தக்க ஆலோசனை நல்குகின்றனர்'' என்கின்றனர்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கிநிதி, உதவி அளித்து வருகிறது.

ஓட்டுநரே உரிமையாளராக பணியாற்றும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் போல இயங்கி வருவது இதன் சகோதர அமைப்பாக விளங்கும் சிட்டி-கேப் டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம். இது பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர். சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

மூகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை—600002.




Criterion CO 2882

# கலை செறிந்த நாட்டின் கவின்மிகுந்த படையல்!



இன்றே வாங்குங்கள்

## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்..

61 -வது குலுக்கல் நாள்: **13-11-1973**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை - 2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்